Registered as a news paper in GPO.

267, Navalar Road,
Jaffna.

T.P.021-2225107
Fax - 021 - 2223922

Web www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி வார இதழ்

பக்கங்கள்: இருபது

விலை ரூபா 10.00

மலர்: 01 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 30 (2006.04.22) சனிக்கிழமை ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 14 இதழ்: 02



குடாநாட்டை உலுக்கும் படுகொலைகள்!

பக்கம் -XII



யாருக்கு யார் பாதுகாப்பு?

பக்கம் -III



ஈரானை தாக்குமா அமெரிக்கா?

பக்கம் -IX



முறுகல்நிலை தீருமா?

பக்கம் -II

# மீண்டும் இனக்கலவரம்!

## தமிழர் வெட்டிக்கொலை,பெருமளவு வீடுகள் தீக்கிரை

திருகோணமலை

திருகோணமலை - சேருவல பகுதியிலுள்ள மேன்காமம் தமிழ்க் கிராமத்துக்குள் நுழைந்து சிங்களக் காடையர்கள் நடத்திய இனவெறித் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டதுடன் மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் தமிழர்களின் பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

திருகோணமலை - தெகிவத்தை தென்னந்தோப்புப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலை அடுத்து சேருவல பிரிவுக்குட்பட்ட மேன்காமம் கிராமத்துக்குள் நுழைந்த சிங்களக் காடையர்கள் - சந்திரன் (வயது 35) என்ற விவசாயியை கோரமான முறையில் வெட்டிக் கொலை செய்தனர். தமிழர்களின் வீடுகளுக்குள் நுழைந்து நகை, பணம் உட்பட சொத்துக்களை சூறையாடிய பின் 14 இற்கும் மேற்பட்ட (08 ஆம் பக்கம் பார்க்க)

### நமது நோக்கு

## விபரீதமே விளையும்!


திருகோணமலை சேருநுவர பகுதியில் நேற்று மீண்டும் தமிழ்மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

கடந்த வாரம் திருகோணமலை நகரில் தமிழ்மக்கள் மீது சிங்களக் காடையர்கள் நிகழ்த்திய இனப்படுகொலைகள், இனக் கலவரத்துக்குப் பின்னர் - நேற்று மீண்டும் இந்தநிலை ஏற்பட்டிருக்கிறது.

சிங்களக் குடியேற்றப் பிரதேசங்களை அண்டிய தமிழர் குடியிருப்புக்கள் எரித்து அழிக்கப்பட்டு - தமிழர் ஒருவர் படுகொலையும் செய்யப்பட்டிருக்கிறார். சிலர் கடத்தப்பட்டு காணாமற் போயிருக்கின்றனர்.

இவை திருகோணமலை மாவட்

## அடுத்தடுத்து கிளைமோர் தாக்குதல்கள்; திருமலையில் மூன்று படையினர் பலி!



திருகோணமலை

திருகோணமலை - சேருநுவர பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற இரண்டு கிளைமோர் குண்டுத்தாக்குதல்களில் இரு ஊர்காவல் படையினரும் ஒரு பொலிஸ் கொன்ஸ்டபிளும் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்

வர் படுகொலையும் செய்யப்பட்டிருக்கிறார். சிலர் கடத்தப்பட்டு காணாமற் போயிருக்கின்றனர்.

இவை திருகோணமலை மாவட்டத்தை கபளீகரம் செய்யும் போக்கில் சிங்களப் பேரினவாதம் தீவிரமாக இருப்பதையே எடுத்துக்காட்டுகிறது.

கடந்த வார சம்பவங்களின்போது சிங்கள மக்கள் சட்டத்தை தமது கையில் எடுத்துக்கொள்ள நேரிட்டதாக ஜே.வி.பி. கூறியிருந்தது. இப்போது மீண்டும் அதே நிலை ஏற்பட்டிருக்கிறது.

சிங்கள மக்களால்தான் சட்டத்தைக் கையில் எடுக்கமுடியும் என்று ஜே.வி.பியோ அல்லது வேறெந்த சிங்கள இனவாத சக்தியோ கருதினால் அது தவறானது.

தமிழ்மக்கள் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமன்றி தமிழர் தாயகப் பகுதியெங்கும் காட்டிநிற்கும் பொறுமையால்தான் - சமாதான சூழல் இதுவரை நிலைத்திருக்கிறது.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக இனவன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது.

இத்தகைய சூழலில் தமிழரின் பொறுமை என்பது நீண்டகாலத்துக்கு நிலைத்திருக்காது என்பதை சிங்கள இனவாதிகள் உணர்ந்துகொள்வது அவசியம். அவர்களும் சட்டத்தைக் கையில் எடுத்தால் விளைவுகள் விபரிக்க முடியாத விபரீதமாகவே இருக்கும்.



# ஜெனிவா பேச்சுக்கள் விரைவில் நடைபெறும்!

## என்கிறது நோர்வே

கொழும்பு

அரசு - விடுதலைப் புலிகளுக்கு இடையிலான ஜெனிவா பேச்சுக்கள் விரைவில் நடைபெறும் என்று நோர்வே அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நோர்வே வெளி விவகார் அமைச்சு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கை சமாதான முயற்சிக ளுக்கான நோர்வே சிறப்புப் பிரதிநிதி ஜோன் ஹன்சன் பௌயர் தொடர்ந்து அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திவருகிறார்.

ஜெனிவாவில் விரைவில் பேச்சுக்கள் நடத்துவது (08 ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலை

திருகோணமலை - சேருநுவர பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற இரண்டு கிளைமோர் குண்டுத்தாக்குதல்களில் இரு ஊர்காவல் படையினரும் ஒரு பொலிஸ் கொன்ஸ்டபிளும் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேருநுவர - வெலிக்கந்த வீதியின் 58 ஆம் கட்டை பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த ஊர்காவல்படை சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொரு ஊர்காவல் சிப்பாய் படுகாயமடைந்தார்.

சி.ஐ.டி பாலத்துக்கு அண்மித்த தென்னந்தோப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டே வெடித்தது.

இதேவேளை நேற்று பிற்பகல் 1.20 மணியளவில் இரண்டாவது கிளைமோர் தாக்குதல் தங்கநகர் பகுதியில் இடம்பெற்றது.

கந்தளாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் சென்றுகொண்டிருந்த வாகனம் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் பொலிஸ் கொன்ஸ்டபிள் இந்திக சமரநாயக்க மற்றும் ஊர்காவல் படையைச் சேர்ந்த ரஞ்சித் சுவர்ணபால ஆகியோர் (08 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய யோசனைகளுடன் ஹென்றிக்சன் வன்னியில்

கிளிநொச்சி

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளின் பயண ஒழுங்கு தொடர்பான புதிய திட்டத்துடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நேற்று கிளிநொச்சிக்குச் சென்றதாக கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

விமானப்படைக்குச் சொந்தமான ஹெலி மூலம் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி சென்ற உல்ப் ஹென்றிக்சன் - விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனை சந்தித்தார்.

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவித தகவல்களும் வெளியிடப்படவில்லை.

ஆனால், விடுதலைப்புலிகளின் கிழக்குப் (08 ஆம் பக்கம் பார்க்க)

# கைதடியில் பொதுமக்கள் மீது படையினர் சோதனைக் கெடுபிடி

யாழ்ப்பாணம்—

ஏ 9 வீதியின் ஊடாகச் செல்லும் கனரக வாகனங்கள் மற்றும் பயணிகள் பஸ்கள் கைதடிப் பகுதியில் படையினரால் கடுமையான சோதனைக் குட்படுத்துவதுடன், பயணிகள் இறக்கி சோதனையிடப்பட்டு வருகின்றனர்.

குடாநாட்டில் கடந்த சில நாட்களாக படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்ற நிலையில் - நேற்று கைதடி சந்தியில் போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனம் முதல் லொறிகள் வரையான அனைத்து வாகனங்களும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன.

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்ட அரச மற்றும் தனியார் பஸ்களில் இருந்து பயணிகள் இறக்கப்பட்டு நீண்ட தூரம் நடக்கவிட்டு சோதனை செய்யப்பட்டனர். இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை - பொருட்களைஏற்றி வந்த சகல வாகனங்களும் மறிக்கப்பட்டு முகமாலை சோதனைச் சாவடியில் எவ்வாறு சோதனை செய்யப்படுகிறதோ அதே போன்று வாகனத்திலிருந்து அனைத்துப் பொருட்களும் இறக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டன.

படையினரால் ஏற்கனவே இரு இடங்களில் பொருட்கள் முற்றாக இறக்கி ஏற்றப்பட்டு வந்த போதும் மீண்டும் ஒரு இடத்தில் திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையால் பொருட்சேதங்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்த காலங்களின் பின்னர் கைதடிப் பாலத்தில் நேற்றையதினம் இவ்வாறு சோதனை மேற்கொள்ளப்பட்டமை மக்கள் மத்தியில் மேலும் பயத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

# வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளிக்காத படையினர்

யாழ்ப்பாணம்—

யாழ். நகரப் பகுதியில் மூலை முடுக்கெங்கும் நின்று சோதனையில் ஈடுபடும் இராணுவத்தினர் - பார்வை இழந்தவர்களையும் விட்டுவைக் காது கடும் சோதனைக்குட்படுத்தினர்.

கடந்த திங்கட்கிழமை யாழ். ஆஸ்பத்திரி வீதியூடாக பஸ் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மூன்று கண்பார்வை இழந்த யுவதிகளை இராணுவத்தினர் வழிமறித்து சோதனை செய்தனர்.

வெள்ளைப் பிரம்புடன் வந்தவர்கள் என்பதை அடையாளம் கண்ட போதும், படையினர் அவர்களை கடுமையான உடற்சோதனைக்குட்படுத்தியுடன் அவர்களின் பயணப் பைகளையும் துருவித் துருவி சோதனையிட்டனர்.

கண்பார்வை இழந்தவர்கள் சுயமாக நடமாடுவதற்காகவும், அவர்களை இனங்கண்டு கொள்வதற்காகவும் சர்வதேச ரீதியாக பிரகடனப் படுத்தப்பட்ட வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளிக்காது இராணுவத்தினர் நடந்து கொண்ட விதம் அங்குநின்றிருந்த மக்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. (43)

# கணவரை இழந்த பெண்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவு

யாழ்ப்பாணம் —

ஜெனீவா குளோபல் நிறுவனத்தின் உதவியுடன் குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தால் - போர் அனர்த்தங்களின் போது குடும்பத் தலைவர்களை இழந்த 50 விதவைகளுக்கு சுய தொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று யாழ். மாவட்ட குடும்ப புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெறவுள்ளது. (12)

## சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மெயின் வீதியில் வீட்டுடன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு :-0114202623. (2247)

# நாளைமறுதினம் முதல் பஸ்கட்டணம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்—

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் கட்டணத்தை 16 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதிகரிக்கப்பட்டுள்ள பஸ் கட்டணம் நாளை மறுதினம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக வடபிராந்தியப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். இதன்படி அதிகரிக்கப்பட்ட கட்டண அதிகரிப்பின் விபரம் வருமாறு—

| இல | தற்போதய கட்டணம் ரூபா | புதிய கட்டணம் ரூபா | இல | தற்போதய கட்டணம் ரூபா | புதிய கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | 4.00 | 8.00 | 16 | 23.00 | 27.00 |
| 2 | 6.00 | 8.00 | 17 | 24.00 | 28.00 |
| 3 | 8.00 | 9.00 | 18 | 25.00 | 29.00 |
| 4 | 10.00 | 12.00 | 19 | 26.00 | 30.00 |
| 5 | 11.00 | 13.00 | 20 | 27.00 | 31.00 |
| 6 | 13.00 | 15.00 | 21 | 28.00 | 32.00 |
| 7 | 15.00 | 17.00 | 22 | 29.00 | 34.00 |
| 8 | 16.00 | 19.00 | 23 | 30.00 | 35.00 |
| 9 | 16.50 | 19.50 | 24 | 31.00 | 36.00 |
| 10 | 18.00 | 21.00 | 25 | 32.00 | 37.00 |
| 11 | 19.00 | 22.00 | 26 | 33.00 | 38.00 |
| 12 | 19.50 | 23.00 | 27 | 34.00 | 39.00 |
| 13 | 20.00 | 23.50 | 28 | 35.00 | 41.00 |
| 14 | 21.00 | 24.00 | 29 | 36.00 | 42.00 |
| 15 | 22.00 | 26.00 | 30 | 37.00 | 43.00 |

# முன்பள்ளிகளின் கல்விக்கண்காட்சி

வடமராட்சி—

வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளிகளின் கல்விக்கண்காட்சி இன்றும், நாளையும் வல்வை சிதம்பரக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக்கண்காட்சி தொடர்ந்து நாளையும் நடைபெறவுள்ளது.

வல்வை கொத்தணி முன்பள்ளிகளின் தலைவர் மு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## படையினரைக் கண்டு

# வீட்டுக்குள் நுழைந்த பெண்களால் உரும்பிராய் பகுதியில் பரபரப்பு

கோண்டாவில்—

படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது வாசலில் நின்றிருந்த பெண்கள் வீட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டதால் - சந்தேகமுற்ற படையினர் அந்த இடத்தை சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் அந்தப் பகுதியெங்கும் பெரும் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று உரும்பிராய் மேற்கு தோட்டப் பகுதியில் இடம்பெற்றது.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

வீதிவழியாக பெருமளவு படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது - அந்தப் பகுதியில் தனித்திருந்த வீடு ஒன்றின் வாசலில் நின்றிருந்த பெண்கள் சிலர் படையினரைக் கண்டதும் பயப்பீதிகாரணமாக வீட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர். இதனால் சந்தேகம் ஏற்பட்ட படையினர் அந்தப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது வீதிவழியாகச் சென்ற சிலரால் குறித்த செய்தி அந்தப் பகுதியெங்கும் பரவவே அயலிலுள்ள பொதுமக்கள் குறித்த வீட்டுக்குள் சென்று அங்கு நின்ற பெண்களை வெளியே அழைத்ததும் படையினர் அந்தவீட்டைச் சோதனைக்குட்படுத்திவிட்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (82)

# துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் படுகாயம்

யாழ்ப்பாணம்—

காரைநகர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவரை இலக்கு வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காரைநகரைச் சேர்ந்த கனகரட்ணம் செல்வராசா (வயத 37) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் தனது வீட்டின் வெளிக்கதவைப் பூட்டுவதற்காக வீட்டிலிருந்து வெளியேவந்தபோதே வீட்டிற்கு வெளியே மறைந்திருந்து ஆயுத தாரிகள் துப்பாக்கிப்பிரயோகம் மேற் கொண்டதால் இவர் காயமடைந்தார்.


DAIDO



CF 90C
4 Gear இன் சிறப்புகள்
எங்களிடம் தாராளமாக DAIDO, YAMATO, HONDA, YAMAHA, BAJAJ, SUZUKI மற்றும் எல்லா சீனா தயாரிப்புகளுக்குப் பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டியளவு கிடைக்கும்
52900.00

Koyo
ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO



ஏகமுகவர்
செரன்டிப் மோட்டர் என்டர்பிரைஸ் (பிரைவேட்) லிமிடெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341560-1, 2435779,
பக்ஸ் 011-2454605
E.mail: zme@slt.lk

நிரஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், அஷிமா மற்றும் பலர் நடித்த
சுதேசி
கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த



அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த



கள்வனின் காதலி
கா.நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
திருப்பதி



இரண்டாவது வெற்றி வாரம்
காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

பாராட்டி வாழ்த்துகின்றோம்.



நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய்
திருமிகு.கே.வி.குணசேகரம்
அவர்கள், தமிழ் அறிஞர்களால் "மயிலிறகணிமாமகுடம்" சூட்டப்பட்ட பெருமைக்குரியவர்.

அன்னாரை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.
வாழ்க பல்லாண்டு!

தெல்லிப்பழை.
21.04.2006. [C/5279] அன்பர்கள்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொமர்ஷல் வங்கி தனது 136 ஆம் கிளையை சாவகச்சேரி நகரில் ஆரம்பித்து, தென்மராட்சிப் பகுதிக்கு சிறப்புச் சேர்த்ததையிட்டு சாவகச்சேரி முகாமையாளர் திரு.குருபாதம் மற்றும் பணியாளர்கள் யாழ்.கிளை முகாமையாளர் திரு.லயன் ரவீந்திரா மற்றும் கூட்டு உத்தியோகத்தர்கள் வங்கி தலைவரும் (CHARMAN) சர்வதேச லயன் கழக 2 ஆம் தலைவரும் 2007, 2008 ஆம் ஆண்டுக்கான சர்வதேச லயன் கழக தலைவருமான லயன் மகேந்திர அமரசூரிய ஆகியோரைப் பாராட்டி வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.



அன்புடன் வாழ்த்துவோர் : சாவகச்சேரி செஞ்சிலுவைச் சமூகம்,
அறவழி சமூகம்,
லயன் சமூகம்00,
வர்த்தக சமூகம்.



விளம்பர அனுசரணை :
வதனா டிஸ்பென்சறி,
சாவகச்சேரி.
[C/5276]

BOC இலங்கை வங்கி

பகிரங்க ஏல விற்பனை
அறிவித்தல்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2005 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு, இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந் துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்தரக் கிளையில் சித்திரை மாதம் 29ம், 30ம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை
- யாழ். இரண்டாம் கிளை ( ஸ்ரான்லி வீதி)
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- சுன்னாகம்
- திருநெல்வேலி

இந்த நகைகள் மீட்கப்பட வேண்டிய கடைசித் திகதி 28.04.2006


அறிவித்தலின்றி ஏல விற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொதுமுகாமையாளர்
(வடபிராந்தியம் - யாழ்ப்பாணம்)
[C/5266]

**திருகோணமலையில் நடைபெற்ற நகரசபையின் புதிய உறுப்பினர் பதவியேற்பு நிகழ்வுகள்...**









# திருகோணமலை நகரசபையின் புதிய உறுப்பினர்கள் பதவியேற்பு

திருகோணமலை ——

திருகோணமலை நகரசபைக்கு ஏறத்தாழ 10 வருடங்களின் பின்னர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட புதிய பிரதிநிதிகள் நேற்று முன்தினம் பதவி ஏற்றனர்.

முன்பதாக கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து, பௌத்த வணக்க ஸ்தலங்களில் புதிதாக பதவியேற்ற நிர்வாகத்துக்கு ஆசி வேண்டி வழிபாடுகள் இடம்பெற்றன.

அகவணக்கம் செலுத்தப்பட்டதையடுத்து சமாதான நீதிவானும், சிரேஸ்ட சட்டத்தரணியுமான காசிநாதர் சிவபாலன் முன்னிலையில் நகர முதல்வராக காலை 9.45 மணிக்கு சண்முகராசா கௌரி முகுந்தன் பதவி ஏற்றுக்கொண்டார்.

அவரைத் தொடர்ந்து உப தலைவரும் ஏனைய 8 அங்கத்தவர்களும் தமிழரசுக் கட்சியின் சார்பில் பதவி ஏற்றுக் கொண்டனர்.

அடுத்து சுயேட்சைக் குழுவின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இரண்டு இஸ்லாமிய உறுப்பினர்கள் பதவி ஏற்றுக் கொண்டனர்.

பதவி ஏற்ற நிகழ்வை தொடர்ந்து சபை முதல்வர் நகர சபையின் சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடியை ஏற்றிவைத்தார்.

பதவியேற்பு நிகழ்வு எந்த வித கேளிக்கை நிகழ்வுகளும் இன்றி மிக எளிமையான முறையில் நடைபெற்றது. இதேவேளை, நகரசபையை அண்மித்த பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. (10)

# கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு நவீன கமராக்கள் பொருத்தல்

கொழும்பு ——

கொழும்பு நகரில் பயங்கரவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக நகரில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் நவீன வீடியோ கமராக்கள் பல பொருத்தப்படவுள்ளன.

பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் இந்தத் திட்டத்துக்கு - பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அத்தியட்சகர் லலித் ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பு நகருக்கு வரும் மற்றும் வெளியேறும் வாகனங்களை இந்த நவீன வீடியோ கமரா மூலம் இலகுவாக இனங்காண முடியுமெனத் தெரிவித்த அவர் - பல்வேறு வன்செயல்களில் ஈடுபட்டுவிட்டு தப்பிச் செல்லும் வாகனங்களை இதன் மூலம் இலகுவாகக் கண்டறிய முடியுமெனவும், நகரில் பயங்கரவாத செயற்பாடுகளைக் குறைப்பதற்கு உதவியாக இருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

உலகில் பல்வேறு நாடுகளில் இவ்வாறு செயற்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# தமிழக தேர்தல் முடிவடையும்வரை புலிகள் பேச்சில் பங்கேற்கமாட்டார்

## என்கிறது சிங்களப் பத்திரிகை

கொழும்பு ——

தமிழக தேர்தல் முடிவடையும் வரை விடுதலைப் புலிகள் ஜெனிவா பேச்சில் பங்கேற்பதிலிருந்து விலகியிருப்பதாக நம்பிக்கையான தகவல் மூலம் தெரிய வந்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் லக்பிம சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும், முதல்வர் ஜெயலலிதாவுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய தேர்தல் முடியும்வரை பேச்சில் பங்கேற்காமல் இருப்பதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

தமிழக தேர்தல் மே மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், அந்த தேர்தலில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஜெயலலிதாவுக்கு ஆதரவாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த தேர்தல் முடிவு குறித்து கண்காணித்த பின்னர், விடுதலைப் புலிகள் ஜெனிவாப் பேச்சில் பங்கேற்பதா? இல்லையா எனத் தீர்மானிப்பர் என அந்தத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(தே)

# திருமலை நகர சபைக்கு முன்பாக மிகப் பெரும் சாவால்கள் உள்ளன

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

திருகோணமலை ——

தமிழர் தாயகத்தின் தலைநகரான திருமலையின் நகரசபை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. திருகோணமலையில் துன்பங்கள் தொடர்ந்தாலும் நாம் பெற்ற வெற்றியின் மூலம் பதவியை ஏற்கவேண்டியவர்களாக உள்ளோமென தமிழரசுக் கட்சியின் செயலாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திருமலை நகரசபையின் தலைவர் மற்றும் புதிய அங்கத்தவர்களின் பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

அழிவுகளுக்கு மத்தியிலும் தந்தை செல்வாவின் அத்திவாரத்தில் இருந்து கொண்டும் விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் அமைப்புகளின் அடி ஒற்றியும் நாம் செயற்பட்டு வருகிறோம்.

திருமலை நகரசபைக்காக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுள்ள போதும் தமது வரலாற்றுக் கடமையை மறந்து விடக்கூடாது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

புதிய உறுப்பினர்கள் இன விடுதலைக்கும், தேச விடுதலைக்கும் உந்துகோலாக செயற்பட வேண்டும்.

திருமலை நகரசபைக்கு முன் மிகப் பெரும் சவால்கள் உள்ளன. உள்ளூர் முதல் தேசிய மட்டம் மற்றும் சர்வதேசத்துக்கும் இது புரியும். இந்த சபை எதிர்காலத்தில் பல்வேறு அழுத்தங்களையும், தடங்கல்களையும் எதிர்கொள்ள வேண்டி வரும். அத்தகைய நிலைமைகளின் போது ஒன்றுபட்ட



சக்தியாக நாம் அனைவரும் இணைந்து அவற்றை திறமையாக எதிர்கொண்டு வெற்றி பெறவேண்டும்.

சபை சார்ந்த அபிவிருத்திக்கு பல தடைகள் ஏற்படுத்தப்படலாம். அத்தகைய நிலையில் சட்ட ரீதியாக எமக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு அரசிடமும், அரசசார் பற்ற அமைப்புக்களிடமும் பெறவேண்டியவற்றை பெற்று சபை நிர்வாகத்தை வெற்றி பெறச்செய்வோம்.

திருமலை நகரசபை முன்மாதிரியான சபையாக எதிர்காலத்தில் செயற்படுவதுடன் - இந்தச் சபையானது இந்தப் பிரதேசத்தின் சகல சமூகங்களுக்கும் உரியதாக செயற்பட வேண்டும் என்று வாழ்த்துகிறேன் என்று கூறினார். (10)

# மகசின் சிறைச்சாலை சொகுசுஅறை; விசாரிப்பதற்கு சிறப்புக்குழு நியமனம்

கொழும்பு ——

போதைப்பொருள் மற்றும் ஊழல் போன்ற நடவடிக்கைகளுக்காகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் சிலர் மகசின் சிறைச்சாலையின் கட்டட மொன்றில் சொகுசாக தங்க வைக்கப்பட்டுள்ளமை குறித்து ஆராய்வதற்காக நீதியமைச்சால் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சிறு குற்றங்களுக்காக அபராதம் செலுத்த முடியாது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைப் பார்வையிடுவதற்காக நீதியமைச்சின் செயலாளர் சுஹறந்த கம்லத் கடந்த செவ்வாய்க்கிழமை மகசின் சிறைச்சாலைக்குச் சென்றபோது, தனியான கட்டடத்தில் சிறப்புச் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு தங்கியிருக்கும் சந்தேகநபர்கள் பற்றி அவருக்குத் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து சுஹறந்த கம்லத் அந்தக் கட்டடத்தை சோதனையிட்டார். இது பற்றி ஆராய்வதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டதையடுத்து குழப்பமடைந்த சிறைச்சாலை அதிகாரிகள் அந்தக் கட்டடத்தில் தங்கியிருந்த சந்தேக நபர்களை அங்கிருந்து வெளியேற்றியிருப்பதாக நீதியமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டவர்கள், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலைச் சந்தேகநபர்கள், லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்காக கைதான பொலிஸார், கோடீஸ்வர வெளிநாட்டு சந்தேக நபர்கள் மற்றும் வற்வரி மோசடி சந்தேக நபர்கள் ஆகியோர் அந்தக் கட்டடத்தில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சந்தேக நபர்களைக் கட்டடத்திலிருந்து வெளியேற்றிய பின்னர் அவர்களைச் சிறைச்சாலை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு முயற்சித்ததாகவும், மருத்துவமனையிலும் சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறார்கள் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்படும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களும், சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகள் சிலரின் தலையீட்டால் சாதாரண சிறைக்கூடங்களுக்கு அனுப்பப்படாது இந்தக் கட்டடத்துக்கு அனுப்பப்படுவதாகச் சிறைச்சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும், சிறைச்சாலையில் தனியான கட்டடத்தில் சந்தேக நபர்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்படுவது சம்பந்தமான குற்றச்சாட்டைச் சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சுக் நிராகரித்துள்ளார்.

இடவசதிகளுக்காகவே சிறைச்சாலையில் இருக்கும் பழைய கட்டடம் சிறைக்கூடமாகப் பயன்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (தே)

# அரச அலுவலக நேரமாற்றம்; ஆராய்வதற்கு குழு நியமனம்!

கொழும்பு ——

நேர மாற்றத்தையடுத்து அரச அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பணி நேரங்களையும் மாற்றியமைப்பது தொடர்பாக ஆராய அமைச்சரவை துணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதில் அமைச்சர்கள் சரத் அமுனுகம, சுசில் பிரேமஜயந்த, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

முன்னதாகப் பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு திறக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு உத்தரவிட்டிருந்தது. தற்போது அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைக்கமைய புதியநேரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

# வட - கிழக்குக்குச் செல்லவேண்டாம்

## அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு ——

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம் என அமெரிக்கா தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அந்த செய்திக் குறிப்பில் -

அரச படைகள் மீதான கிளைமோர் தாக்குதல் அதிகரித்துள்ளன. இந்தத் தாக்குதலில் பொதுமக்களின் வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

திருகோணமலை சந்தைப் பகுதியில் குண்டுவெடித்ததையடுத்து இன மோதல் உருவாகி இழப்புக்களும், படுகாயங்களும் ஏற்பட்டுள்ளன.

அதனால் இலங்கையில் உள்ள அமெரிக்க பிரஜைகள் புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஊடாக திருகோணமலைக்குச் செல்வதைத் தவிர்க்கும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் இலங்கையின் கிழக்குப் பகுதியில் குறிப்பாக மட்டக்களப்பில் பல குழுக்கள் மற்றும் அரச படைகள் தொடர்பில் நிலைமை மோசமடைந்து வருகிறது. மட்டக்களப்பில் கிளைமோர்த் தாக்குதலும் நடந்துள்ளது.

இதன் காரணமாக அமெரிக்க நாட்டவர் இந்தப் பிரதேசங்களுக்குச் செல்லும் முன்பு அல்லது இந்தப் பிரதேசங்களில் பணியாற்றும் முன்பு தங்களது தனிப்பட்ட பாதுகாப்பை பரிசீலனை செய்து கொள்ளுமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

இலங்கை பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக அமெரிக்க நாட்டவர் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# ஐ.சி.சி ஒருநாள் தரவரிசை; முதலிடம் பிடித்தார் டோனி

டுபாய் —

ஐ.சி.சியின் ஒருநாள் தரவரிசைப் பட்டியலில் இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் டோனி முதலிடத்தைப் பிடித்துள்ளார். இதுவரை காலமும் முதலிடத்தைப் பிடித்த அவுஸ்ரேலிய அணித்தலைவர் றிக்கி பொண்டிங்கை பின்னுக்குத் தள்ளியே டோனி முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இதன்படி முதல் பத்து இடங்களைப் பிடித்த வீரர்கள் வருமாறு -

டோனி (இந்தியா), பொண்டிங் (அவுஸ்ரேலியா), கில்கிறிஸ்ட் (அவுஸ்ரேலியா), சைமன்ஸ் (அவுஸ்ரேலியா), சிமித் (தென்னாபிரிக்கா), ஹூசே (அவுஸ்ரேலியா), பீற்றர்சன் (இங்கிலாந்து), சங்ககார (இலங்கை), ராவிட் (இந்தியா), யுவராஜ் சிங் (இந்தியா).



இதேபோன்று ஒருநாள் தரவரிசைப் பட்டியலில் அவுஸ்ரேலிய அணி தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதன்படி அணிகளின் தரவரிசை -

1.அவுஸ்ரேலியா, 2.தென்னாபிரிக்கா, 3.இந்தியா, 4.பாகிஸ்தான், 5.நியூஸிலாந்து, 6. இலங்கை, 7.இங்கிலாந்து, 8.மேற்கிந்தியத் தீவுகள், 9.சிம்பாப்வே, 10.பங்களாதேஷ், 11.கென்யா.

பந்துவீச்சு வரிசையில் -

ஷோன் பொலக் (தென்னாபிரிக்கா), மக்ரா (அவுஸ்ரேலியா), இர்பான் பதான் (இந்தியா), ஷேன் பொண்ட் (நியூஸிலாந்து), டானியல் விற்றோரி (நியூஸிலாந்து), பிரெட் லீ (அவுஸ்ரேலியா), முரளிதரன் (இலங்கை), நதன் பிறக்கன் (அவுஸ்ரேலியா), சமிந்தவாஸ் (இலங்கை), ஹர்பஜன் சிங் (இந்தியா) ஆகியோர் முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளனர்.

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம் —

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழகமும்,

மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மற்றைய ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

### கோப்பாய் பிரதேச செயலக மட்ட

## விளையாட்டுப் போட்டிகளில் வீனஸ் கழகம் சம்பியனானது

நெடுந்தீவு —

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான இந்த வருட பிரதேச மட்ட விளையாட்டு விழாவின்போது - வீனஸ் விளையாட்டுக்கழகம் 37 புள்ளிகளைப் பெற்று பிரதேச சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இரண்டாம் இடத்தை நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குழுநிலைப் போட்டிகளின் அடிப்படையில் ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டியில் செல்லப்பா விளையாட்டுக் கழகமும், எல்லே போட்டியில் வீனஸ் விளையாட்டுக் கழகமும்,

கரப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், உதைபந்தாட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் -

பெண்களுக்கான துடுப்பாட்டத்தில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகமும், எல்லே, கரப்பந்தாட்டப் போட்டியில், வீனஸ் விளையாட்டுக் கழகமும், வலைப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் பிரதேச சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

### கோப்பாய் பிரதேச செயலக மட்ட


## விளையாட்டுப் போட்டிகளின் சிறந்த வீர, வீராங்கனைகள்

நெடுந்தீவு —

கோப்பாய் பிரதேச செயலகதடகள விளையாட்டு நிகழ்வின்போது 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரராக் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சு.காந்தரூபன் நீளம்பாய்தல் நிகழ்வில் 648 புள்ளிகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த சுவட்டு வீரராக நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சு.தேவரூபன், வீராங்கனையாக கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.பிறின்ரில்லா ஆகியோரும்,

கள வீரராக நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சு.காந்தரூபன், வீராங்கனையாக அதே கழகத்தைச் சேர்ந்த எஸ்.சுதர்சினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (113)



கடந்த மாதம் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட - ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், மொறட்டுவ பல்கலைக்கழகம், யாழ்.பல்கலைக்கழகம் ஆகிய அணிகள் மோதிய முக்கோணத் தொடரில் வெற்றிபெற்ற யாழ்.பல்கலைக்கழக அணியினர்.

## மாவட்டமட்ட வலைப்பந்தாட்டம் தெல்லிப்பளை அணி வெற்றி


யாழ்ப்பாணம் —

பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்டமட்ட வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரதரும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி றொகான் ராஜசிங்கமும் கலந்துகொண்டனர்.

இந்த இறுதியாட்டத்தில் தெல்லப்பளை பிரதேச செயலகத்தை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலகம் மோதியது. இந்த இறுதியாட்டம் 4 பகுதிகளாக நடைபெற்றது.

இதில் தெல்லிப்பளை பிரதேச செயலகம் 15:8, 15:10, 18:8, 7:13 என்ற கோல்களைப் பெற்று - மொத்தமாக 65:33 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. (12)

## மேற்கிந்திய தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு



மும்பை —

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடருக்கான இந்திய அணி மும்பையில் அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் ஆடிய வீரர்களே இந்தத் தொடரிலும் இடம்பெற்றுள்ளனர். அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இவ்விரு அணிகளிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டிகள் அடுத்த மாதம் 23ஆம் திகதி முடிந்தபின்னர் டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்படும்.

தற்போதைய அணியில் இடம் பெற்றுள்ள ராவிட் மற்றும் ஹர்பஜன் சிங் ஆகிய இருவர் மட்டுமே இதற்கு முன்பு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பயணம் செய்து விளையாடியுள்ளனர். மற்றைய வீரர்கள் அனைவரும் தற்போதுதான் முதல் முறையாக மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லவுள்ளனர்.


மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் 4 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி விளையாடவுள்ளது. முதல் ஒருநாள் போட்டி மே 18ஆம் திகதி நடைபெறும்.

இதில் முதல் இரண்டு ஒருநாள் போட்டிகள் ஜமைக்காவிலும், மூன்றாவது போட்டி சென்கிட்சிலும், 4ஆவது போட்டி போல்ட் ஒப் ஸ்பெயினிலும், 5ஆவது மற்றும் கடைசி போட்டி ரினிடாட்டிலும் நடைபெறவுள்ளன.

முதல் டெஸ்ட் போட்டி அன்டிகுவாவில் நடைபெறவுள்ளது. ஜூன் 2ஆம் திகதி இந்தப் போட்டி தொடங்கவுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் சென்.லூசிகாவிலும், மூன்றாவது டெஸ்ட் சென்கிட்சிலும், நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஜமைக்காவிலும் நடைபெறவுள்ளன. இதற்கு முன்பாக இந்திய அணி மே 16ஆம் திகதி பயிற்சி ஆட்டம் ஒன்றிலும் ஆடவுள்ளது.

ஒருநாள் போட்டித் தொடருக்கான இந்திய அணி வீரர்களின் விபரம் வருமாறு -



ராவிட் (கப்டன்), றொபின் உதப்பா, ஷேவாக், யுவராஜ் சிங், கைவ், சுரேஷ் றெய்னா, டோனி, பதான், ஹர்பஜன் சிங், ரமேஷ் பவார், அகர்கர், முனாப் பட்டேல், வேணுகோபால் ராவ், ஸ்ரீசந்த் மற்றும் ஆர்.பி.சிங்.

### யாழ். பிரதேச செயலக மட்ட

## விளையாட்டுப் போட்டிகளில் பாடும்மீன் அணி முதலிடம்

கொக்குவில் —

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் மொத்தம் 6 அணிகள் பங்குபற்றின.

இந்தப் போட்டியின் இறுதியாட்டத்தில் பாடும்மீன் அணியும், பமிலியன் அணியும் மோதின. இதில் கடும் போராட்டத்தின் பின்னர் 24:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் பமிலியன் அணி வெற்றிபெற்றது.

பெண்களுக்கான கபடி போட்டியின் இறுதியாட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணியை 30:22 என்ற அடிப்படையில் பாடும்மீன் அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைத் தட்டிக் கொண்டது.

பெண்கள் எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணியை 4:1 என்ற ஓட்டங்கள் அடிப்படையில் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது.

ஆண்களுக்கான எல்லே போட்டியில் - பாடும்மீன் அணி, முதல் சுற்றில் கே.சி.சி அணியை 7-5 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், இரண்டாவது சுற்றில் 11-3 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், அரையிறுதியாட்டத்தில் சென்.றொக்ஸ் அணியை 6-0 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், இறுதியாட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணியை 5-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது.

ஆண்களுக்கான கபடி போட்டியின் இறுதியாட்டத்தில் பாடும்மீன் அணியும், குருநகர் அணியும் மோதின. இதில் பாடும்மீன் அணி சம்பியன் பட்டம் வென்றது.

ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் பாடும்மீன் அணியைத் தோற்கடித்து ஜெற்லைனேர்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்தப் போட்டிகளில் மொத்தமாக அதிக புள்ளிகளைப் பெற்று பாடும்மீன் அணி முதலிடத்தைப் பெற்றது. (206)

## ரேக்கி கிண்ண முதல்சுற்றில் மானிப்பாய் பரிஷ் வெற்றி

யாழ்ப்பாணம் —

இலங்கை கிரிக்கெட்டின் 3ஆம் பிரிவுக்கான சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட கழக அணியைத் தெரிவு செய்வதற்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 13 விளையாட்டுக் கழகங்களிடையே 50 ஓவர்கள் கொண்ட லீக் முறையிலான ரேக்கி கிண்ண முதல் சுற்றுப் போட்டியின் இரண்டாம் கட்ட போட்டி ஒன்றில் - சென்றலைட்ஸ் அணியை 139 ஓட்டங்களால் மானிப்பாய் பரிஷ் அணி வெற்றிகொண்டது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்றலைட்ஸ் அணித் தலைவர், மானிப்பாய் பரிஷ் அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணியினர் 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் விநோத் ஆட்டமிழக்காமல் 113, சிவாஸ்கர் 67, பாஸ்கரன் 47, நவநீதன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணியின் விமல் 3, யசிந்தன், மதூசன், பிரகாஷ், றொகான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 33 ஓவர்களில் 135 ஓட்டங்களை மட்டும் பெற்றதனால் 139 ஓட்டங்களால் மானிப்பாய் பரிஷ் அணியினர் வெற்றி பெற்றனர்.

இதில் றொகான் 52, பிரகாஷ் 19, பிருந்தாபன் 17, கார்த்தீபன் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சாத்வீகன் 3, சுபாஸ், ஜெயறூபன் மற்றும் பாஸ்கரன் ஆகியோர் தலா 2, விநோத் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். (58)

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் —

யாழ்.உதைபந்தாட்ட லீக் - பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையில் நடத்தவிருந்த உதைபந்தாட்டப் போட்டி காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அந்தோனிப்பிள்ளை தெரிவித்தார்.

இந்தப் போட்டி தீர்மானிக்கப்பட்ட அட்டவணைப்படி நேற்று பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவிருந்தபோதிலும் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டியை நடத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இளைஞர்களை தயார்படுத்தினாலே கலை கலாசாரங்களை காக்கமுடியும்

## மேலதிக அரச அதிபர் சிவசுவாமி

யாழ்ப்பாணம் —

கலை, கலாசார பாரம்பரியங்களை சமூகம் பேணுமாறு ஊக்குவிப்பதற்கு இளைஞர்களை தயார் படுத்த வேண்டுமென யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி தெரிவித்தார்.

வேலணை பிரதேச கலாசார பேரவையால் அண்மையில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட கலை இலக்கிய பெருவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவை - கலைத் தொண்டாற்றிய கலைஞர்களை அடையாளம் காண்பதையும், அவர்கள் குறித்த விபரங்களைத் திரட்டி ஆவணப்படுத்துவதையும் முக்கியமானதொரு பணியாக உணர்ந்து செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேரவையுடன் இணைந்து செயற்படும் பிரதேச கலாசார பேரவைகளும் இத்தகைய பணிகளில் ஈடுபட்டு வருவது பாராட்டுக்குரியது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் - பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், பேராசிரியர் என்.சண்முகலிங்கம், தீவக கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், வேலணைப் பிரதேசசபை செயலாளர் ஆ.மகேந்திரலிங்கம் உட்பட பலர் சிறப்புரையாற்றினர்.


# சங்கானை அராலி வீதியில் படையினர் வீடுகளில் சோதனை

சங்கானை —

சங்கானை தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் அராலி வீதியில் சங்கானை பொலிஸாரும், வட்டுக்கோட்டை இராணுவத்தினரும் திடீர் சோதனை நட வடிக்கையை நேற்றுமுன்தினம் மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின்போது ஒவ்வொரு வீட்டிலுள்ள அங்கத்தவர் பெயர், வயது விபரங்களைப் பதிந்து கொண்டதோடு மேலும் யாராவது புதிதாக வந்து தங்கினால் தமக்குத் தகவல் தரும்படியும் அறிவுறுத்தியுள்ளனர்.

இதனால் இந்தப் பகுதி மக்கள் அச்சநிலையில் உள்ளனர். (48)



யாழ். புனித மரியாள் வித்தியாலய மெய் வன்மைப் போட்டியில் உதவிப் பங்குத் தந்தை தயாபரன் அடிகளார் ஒலிம்பிக் தீபத்தை மாணவர் தலைவரிடம் வழங்குவதையும் க.ச. றோஸ்மேரி மாணவத் தலைவியிடம் பூச்செண்டு வழங்குவதையும் படத்தில் காணலாம். (206)

# வைத்தியசாலை வீதியை திருத்துமாறு கோரிக்கை

சங்கானை —

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதி சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் செல்வதற்குப் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

தற்போது மழை பெய்துள்ளதால் இந்த வீதியில் ஏற்பட்டுள்ள குழிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்கிறது. இதனால் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, இந்த வீதியைச் சம்பந்தப்பட்டவர்கள் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென நோயாளர்கள் தெரிவித்தனர்.

# மஹோற்சவம்

சங்கானை —

பொன்னாலை பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பமாகி அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை 11 நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

10 ஆம் நாள் தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (48)

# சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த எட்டு பேருக்கு அபராதம் விதிப்பு !

வல்வெட்டித்துறை —

அனுமதியின்றி மதுபானம் வைத்திருந்தமைக்காக ஒரு பெண் உட்பட 8 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் வல்வெட்டித்துறை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில்- வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவருக்கும் சமரபாகு இலந்தைக்காட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் 10 ஆயிரம் ரூபா அபராதமும், கம்பர் மலையைச் சேர்ந்த இன்னொருவருக்கு 5 மாதம் சாதாரண சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அனுமதியின்றி கள் வைத்திருந்தமைக்காக மதுவரித் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் புலோலி சாரையடியைச் சேர்ந்த ஒருவருக்கும் புலோலி மேற்கு தட்டுவனையைச் சேர்ந்த ஒருவருக்கும், கூவில் புலோலியைச் சேர்ந்த ஒருவருக்கும் அல்வாய் நாச்சிமார் கலட்டியைச் சேர்ந்த ஒருவருக்கும், அல்வாய் கிழக்கைச் சேர்ந்த மூவருக்கும் ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் தீர்ப்பளித்தார். (12)

# கைத்தொழிலாளர்களுக்கு பிரதேச செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம் —

கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் மேம்பாட்டு அமைச்சால் பிரதேச செயலக ரீதியாக பிரதேச செயலாளர்களின் தலைமையின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச் சபை உத்தியோகத்தரின் உதவியுடன் சிறிய நடுத்தர கைத்தொழிலாளர் சங்கம் ஒன்றை அமைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கத்தை ஸ்தாபிக்கும் வகையில் எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறிய நடுத்தர கைத்தொழில்களை மேற்கொள்வதற்கான கூட்டம் நடை பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிறிய, நடுத்தர கைத்தொழில்களை மேற்கொள்வோர் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு யாழ்.பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

# இலக்கிய நாடக நூல் வெளியீடு

பருத்தித்துறை —

தென்புலோலியூர் பரராஜசிங்கம் ரதீஸ் எழுதிய 'பாண்டியன் பாவை' இலக்கிய நாடக நூல் வெளியீட்டு விழா புற்றாளை மகா வித்தியாலய மண்டபத்தில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - கரவெட்டிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.அம்பலவாணர் பிரதம விருந்தினராகவும், புற்றளை மகா வித்தியாலய அதிபர் எம்.அனந்தீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை இளைப்பாறிய நூலகர் எஸ்.திருச்செல்வமும், நூல் மதிப்பீட்டுரையை எழுத்தாளர் எஸ்.தெணியானும் நிகழ்த்தவுள்ளனர்.

# காரைநகரில் வீடமைப்புக்கு தெரிவான பயனாளிகளுக்கான விளக்ககூட்டம்

யாழ்ப்பாணம் —

உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் வடக்கு - கிழக்கு வீடமைப்புப் புனர் நிர்மாணத்திட்டத்தின் (நேர்ப்) கீழ் - யாழ். மாவட்டம் காரைநகரில் 2006 ஆம் ஆண்டுக்கான பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குரிய விளக்கக் கூட்டம் கடந்த புதன்கிழமை நடை பெற்றது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் அனுசரணையுடன் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் - யாழ்.மாவட்ட நேர்ப் பிரதித் திட்டப்பணிப்பாளர், நேர்ப் உத்தியோகத்தர்கள், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு உத்தியோகத்தர்கள், தெரிவாகியுள்ள பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆயிலி, பாலாவோடை, ஊரி, நீலங்காடு ஆகிய நான்கு கிராமங்களைச் சேர்ந்த வறிய நிலையிலுள்ள 124 பயனாளிகள் வீடமைப்பு நிதியுதவி பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு இந்தத் திட்டத்தைப் பற்றிய அறிமுகவுரையும், வீடமைப்பு தொடர்பான தொழில்நுட்ப விளக்கங்களும் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டன. திட்டத்தால் வழங்கப்படும் விதிகள் ஒழுங்கமைவுக்கு ஏற்ப கட்டம் கட்டமாக வழங்கப்படும் நிதியுதவியை வீடமைப்புக்கே பயன்படுத்த வேண்டும் என்பது உத்தியோகத்தர்களால் வலியுறுத்தி விளக்கப்பட்டது.

மேலும் அத்திவாரம் நிர்மாணிக்கும் போது பயனாளிகள் அவதானிக்க வேண்டியவையாக -

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம் பற்றிய தகவல்கள் ஆகியன உள்ளடங்கிய பிரசுரங்களும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டதாக, வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மானத்திட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : ஜ.கிறிஷாலன்
முகவரி : வதிரி.


# பாடசாலை பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை!

நெல்லியடி —

யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 2005 ஆம் ஆண்டின் வருடாந்த பொருட் கணக்கெடுப்பின் பெறுபேறாக - ஏலத்தில் விற்பனை செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பொருட்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஏலத்தில் விடப்படவுள்ளது.

இதில் 30 இரும்புக் கதிரைகளும், 8 ஆசிரியர் மேசையும், 25 மாணவர் இரும்பு மேசையும், 20 மாணவர் கதிரைகளும் ஏலத்தில் விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் பாடசாலை நேரத்தில் பார்வையிடலாம் எனவும், 28 ஆம் திகதி நடைபெறும் ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுவோர் அன்றே அதற்குரிய முழுப் பணத்தைச் செலுத்துவதுடன், அன்றே பொருட்களையும் எடுத்துச் செல்லல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

# முதலுதவிப் பயிற்சி

தாளையடி —

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைத் தொண்டர்களால் சுன்னாகத்தில் அமைந்துள்ள மின்சாரசபை ஊழியர்களுக்கு மூன்று தினங்கள் முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சி முடிவில் எழுத்துப் பரீட்சையும் செயல்முறைப் பரீட்சையும் நடத்தப்பட்டு சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. (21)

# கமநலசேவை நிலையங்கள் இரண்டு இடங்களில் திறப்பு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்தில் புதிதாக இரு இடங்களில் கமநல சேவை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கரவெட்டியில் கமநலசேவை நிலையமும் வலி. தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மானிப்பாய் கமநலசேவை நிலையமொன்றும் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை யாழ். குடாநாட்டில் ஏற்கனவே 13 கமநலச் சேவை நிலையங்கள் இருக்கின்றபோதும் 4 பெரும்பாக உத்தியோகத்தர்கள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர். ஏனைய 9 பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் பல வருடங்களாக நிரப்பப்படாமலேயே உள்ளது.

இந்த நிலையில் குடாநாட்டிலுள்ள விவசாயிகளின் தேவைகளையும், பிரச்சினைகளையும் உடனுக்குடன் தீர்க்க முடியாதநிலை தோன்றியுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்.


வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ----------
முகவரி ----------
பிறந்த ஆண்டு ----------

கூப்பன்களும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்


# நாடக பயிலகத்துக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் —

திருமறைக் கலாமன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறியில் இந்த வருடத்துக்கான 13 ஆவது புதிய பிரிவு மே மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடகக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியை பெற விரும்புபவர்களுக்கும், நாடகமும் அரங்கியலையும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இந்தப் பயிற்சி நெறி அமையும்.

பயில விரும்புவோர் - யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று மே மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறு திருமறைக் கலாமன்ற பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கல்

தாளையடி—

பளை அஞ்சல் அலுவலகத்திலும், அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள தாளையடி, செம்பியன்பற்று, முள்ளியான், ஆழியவளை, சுண்டிக்குளம், சோரன்பற்று, இயக்கச்சி, முகமாலை, எழுதுமட்டுவாள் உப அஞ்சல் அலுவலகங்களிலும் இந்த மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவிப்பணம், காசநோய் புற்றுநோய் உதவிப்பணக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. (21)

## கருத்தரங்கு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் மாணவர்களுக்கான சதுரங்க விளையாட்டின் விதிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல் கருத்தரங்குகள் அண்மையில் நடைபெற்றது.

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில் சதுரங்க விளையாட்டு சம்மேளனக் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# வெட்டுக்காய இரத்தப் பெருக்கால் வேட்டைக்கு சென்ற மூவர் மரணம்!

## மரண விசாரணையில் தகவல்

வவுனியா—

வவுனியா - பெரியமடு காட்டுப் பகுதிக்குள் வேட்டைக்குச் சென்ற வேளை காணாமற் போய் உருக்குலைந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட மூவரும், வெட்டுக் காயங்கள் காரணமாக ஏற்பட்ட இரத்தப் பெருக்காலேயே மரணமடைந்துள்ளதாக, இந்த மரணங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரனைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மூங்கில் குளத்தின் அலைகரை காட்டுப் பகுதியில் மூவரதும் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதையடுத்து வவுனியா, ஓமந்தை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி கே.அமிர்தலிங்கத்துக்கு இந்த மரணங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட நீதிபதியின் உத்தரவைப் பெற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் சடலங்கள் இருந்த இடத்துக்கு சென்று பார்வையிட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பவ இடத்திலேயே மரண விசாரணையை நடத்தினார்.

இந்த மரண விசாரணைக்கென கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து வைத்தியர் ஒருவரை தமிழீழ காவல் துறையினர் அழைத்துச் சென்றனர்.

தலைகள், கை, கால்களில் வெட்டுக்காயத்துடன் காணப்பட்டதாக வைத்திய அதிகாரி தமது மரண விசாரணையின் போது கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வாகனங்கள் நிறுத்த படையினர் தடை விதிப்பு

வவுனியா—

வவுனியாவில் சில பகுதிகளில் வாகனங்களை நிறுத்துவதற்கு படையினர் தடை விதித்துள்ளனர்.

இதன்படி வவுனியா பறையனாலங்குள வீதி, வேப்பங்குள வீதி உட்பட அதன் சுற்றாடல்களிலும், வீடுகளிலுமே வாகனங்களை நிறுத்த படையினர் தடை விதித்துள்ளனர்.

தமது இந்தத் தடை உத்தரவை மீறி வாகனங்கள் நிறுத்தப்படுமானால் அவர்கள் சுடப்படுவார்களெனவும் படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## அக்கராயன் பிரதேசத்தில் எழுச்சிப் பேரவை சங்கமம்

இராமநாதபுரம்—

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு - அண்மையில் அக்கராயன் இல -01 அ.த.க பாடசாலையில் பேரவைத் தலைவர் சபாரெட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை பிரதேச தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவிப் பணிப்பாளர் கோ.நல்லையா, இளையோர் செயற்பாட்டுக் குழுத்தலைவர் சந்திரகுமார், ஊரக தேசிய எழுர்ச்சிப் பேரவையைச் சேர்ந்த பே.விஜயரட்ணம் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அருள் ஏற்றினார்.

சமகால அரசியல் பற்றி சி.பசுபதிப் பிள்ளை கருத்துரை நிகழ்த்தினார். தொடர்ந்து கிராமங்களின் பிரச்சினைகள் குறித்த அறிக்கைகளை ஊரக எழுச்சிப் பேரவைச் செயலாளர்கள் வாசித்துச் சமர்பித்தனர்.

இந்த நிகழ்வில் இளையோர் செயற்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் தமிழ்ப்பிரியன், நிர்வாக சேவையைச் சேர்ந்த சுதன், அக்கராயன் கிராம அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ)




காசிம் சிறுவர் போசாக்கு பகல் பராமரிப்பு நிலைய விளையாட்டுப் போட்டியின் போது பிரதம விருந்தினர்களை சிறார்கள் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம். பான்ட் வாத்திய கருவிகள் இல்லாத போதும் கிடைத்த பொருட்களுடன் அழைத்து வருவது குறிப்பிடத்தக்கது. படம் - கு.கிருஷ்ணா.

# வெடிபொருட்களிலிருந்து மக்களை காக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்!

## டொக்டர் ஜெயகுலராஜா தெரிவிப்பு

முல்லைத்தீவு—

வெடிபொருள் விபத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும். அதற்காக நூற்றுக்கு நூறுவீதம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என வெண்புறா நிறுவன தலைவரும், முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளருமான வைத்தியகலாநிதி ஜெயகுலராஜா தெரிவித்தார்.

உலக வெடிபொருள் விழிப்புணர்வு தின நிகழ்வுகள் கடந்த 4 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வெண்புறா நிறுவனம் உருவாக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டு 119 வெடி பொருள் விபத்துக்கள் நிகழ்ந்தன. அதில் 15 பேரின் உயிரை இழந்தோம். ஆனால், கடந்த 2005 ஆம் ஆண்டு 15 வெடி விபத்துக்களாகக் குறைந்ததுடன், எவரும் உயிரிழக்கவில்லை. இதுவே வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வு விழிப்பூட்டும் நிறுவனத்தின் வெற்றியாகும்.

உலக வரலாற்றில் இன்றைய நாள் முக்கியத்துவமான நாளாக அமைகிறது. கண்ணிவெடி விழிப்புணர்வு குறித்த சர்வதேச அங்கீகாரம் கிடைத்த நாள் இன்றைய நாள். உலக வரலாற்றில் ஒவ்வொருவருடமும் இது கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதன் மூலம் இங்கே வெண்புறா நிறுவனத்தின் வெடிபொருள் விழிப்புணர்வுப் பணி முக்கியப்படுத்தப்படுகிறது. வெண்புறா நிறுவனத்தின் பணி இன்று பலராலும் உணரப்பட்டுள்ளது.

வெண்புறா நிறுவனத்தில் பணிபுரிகின்ற அனைத்துப் பணியாளர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். இதுவும் நாம்பெற்ற வெற்றிக்கு ஒரு காரணமாகவுள்ளது. நான் கண்ணிவெடிகளை அகற்றும் வேலைத் திட்டத்துக்குப் பொறுப்பாக உள்ளவருடன் தொடர்பு கொண்டு அந்தப் பணிகள் பற்றிப் பேசினேன். அவர் சொல்கின்ற செய்தி சற்றுக் கவலையானது. புதைக்கப்பட்டுள்ள வெடி பொருட்களை அகற்றிவிட மூன்று ஆண்டுகள் தேவை என்கிறார் அவர்.

அதனால் எமது விழிப்புணர்வுப் பணி தொடரப்படவேண்டும். நூற்றுக்கு நூறு வீதம் வெடிபொருள் விபத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும். அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என அவர் தெரிவித்தார்.

## வீதிகளை திருத்துமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியில் கொட்டப்பட்டுள்ள கிரவல் மண் நீண்டகாலமாகப் பரவப்படாமல் உள்ளமையால், வைத்தியசாலைக்குச் செல்லும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியூடாகவே வைத்தியசாலைக்கு அவசர நோயாளர்களையும் கொண்டுவர வேண்டியுள்ளது. ஆனால், வாகனங்கள் இந்த வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலையில், வீதியை விட்டு இறங்கி வாய்க்கால் வழியாகவே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, இதுதொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அழிவுகளையும், துன்பங்களையும் தருகின்ற சமாதான சாக்கடையிலிருந்து மீட்டுத்தாருங்கள்

## வன்னியில் சமூக பிரதிநிதிகள்–விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை

வட்டக்கச்சி—

அழிவுகளையும், துன்பங்களையும் எமக்கு நாள்தோறும் தந்து கொண்டிருக்கும் இந்த சமாதான சாக்கடையிலிருந்து எங்களை மீட்டுத் தாருங்கள். ஐந்து வருடங்களுக்கு முன்னர் நாங்கள் அனைவரும் பரிபூரணமாக அணிதிரண்டு, போர் முனையில் உங்களோடு இணைந்து எமது தாயகத்தின் பெரும் பகுதியை மீட்டெடுத்தோம். அதுபோல இப்போது இறுதிப்போரை முன்னெடுத்து நிரந்தரமான சமாதானத்தை வென்றெடுப்பதற்கு உங்களோடு கைகோர்க்க வந்துள்ளோம் என வன்னிப் பெருநிலப்பரப்பின் சமூகப் பிரதிநிதிகள் கடந்த திங்கட்கிழமை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான பிரதிநிதிகளைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் கிளிநொச்சியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது -

எங்களது விடுதலைக்காக நாங்கள் கொடுத்த விலைகள் சாதாரணமானவை அல்ல. போராளிகள், பொதுமக்கள் எனச் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் தங்களது உன்னதமான உயிர்களை எமது விடுதலைக்காகத் தந்திருக்கிறார்கள். ஊரூராய் இடம்பெயர்ந்து நாடோடிகள்போல அலைந்தோம். காலம்காலமாக சேர்த்து வைத்திருந்த எங்கள் சொத்துக்களை இழந்தோம். வன்புறுத்தல்களைச் சந்தித்தோம். இத்தனை விலை கொடுப்புக்களின் மத்தியில் எமது நெஞ்சங்களில் நாம் சுமந்திருக்கும் சுதந்திரதாகத்தின் மகத்துவத்தை புரிந்து கொள்ளாத எந்தச் சக்திகளுடனும் சமாதானத்தைப் புரிவது அர்த்தமற்ற ஒரு முயற்சியாகும்.

ஆயுதப் போராட்ட சகாப்தத்துக்கு முற்பட்ட காலத்தில் சமாதானம் பேசி எமது எல்லா நம்பிக்கைகளையும், இழந்திருந்த காலத்தை நினைத்துப் பார்க்கின்றோம். அதன்பின் ஆயுதம் ஏந்தினோம். ஒவ்வொரு உயிர்களாய் கொடுத்துக் கொடுத்து எமது இனத்தின் இருப்பைக் காப்பாற்றினோம். எம்மை முற்றாக அழித்தொழிப்பதற்கான எல்லா நம்பிக்கைகளையும் இழந்துவிட்ட பின்னர் தான் எதிரிகளும், ஏனையோரும் சமாதானம் பேசி வந்தார்கள்.

இன்றைய சமாதானத்தின் ஆரம்ப நாட்களில் எங்கள் மனங்களில் ஏதோ ஒரு ஓரத்தில் நம்பிக்கை ஒளி தெரியத்தான் செய்தது. ஆனால், சொற்ப காலத்திலேயே எங்கள் காதுகளைச் சோக கீதங்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. எங்கள் ஊர்களுக்கும், வீடுகளுக்கும் சாவு ஊர்வலங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. சமாதான வீணையில் சோககீதம் இசைக்கப்படுவதை ஏற்பதற்கு நாங்கள் தயாராக இல்லை.

எனவேதான் எங்களது வாழ்வைக் காத்து இருண்டகாலத்திலிருந்து ஒளிபொருந்திய வாழ்வுக்கு எம்மை அழைத்து வந்திருக்கின்ற எங்களது பிரதிநிதிகளாகிய உங்களிடம் ஒரு விடயத்தை வலியுறுத்துகின்றோம். நாங்கள் உங்களுடன் எம்மை முழுமையாக இணைத்துக் கொண்டு செயற்படுவதற்கு தயாராக இருக்கிறோம். நீங்கள் எங்களை இந்தக் கொடூரமான சமாதானத்திடமிருந்து மீட்டெடுத்து, நிரந்தர சமாதானத்துக்கான போரைத் தொடங்கி நிம்மதியைப் பெற்றுத் தாருங்கள் என அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் பொது அமைப்பின் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (09)

# முழங்காவில் இரணை மாதாநகரில் காசநோய் குறித்த மருத்துவசேவை!

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவையினர் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு கண்காட்சியையும், விடியோ படக்காட்சிகளையும், கருத்தூட்டல் நிகழ்வையும் மற்றும் மருத்துவ பரிசோதனையையும் முழங்காவில் இரணைமாதா நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தியுள்ளனர்.

ஐ.ஓ.எம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை முழங்காவில் பரப்புரைப் பொறுப்பாளரும், தமிழீழ தேசியக் கொடியை முழங்காவில் அரசியற்துறைப் பொறுப்பாளரும் ஏற்றினர். கண்காட்சி மண்டபத்தை கிளிநொச்சி மாவட்ட ஐ.ஓ.எம் நிறுவனப் பிரதிநிதி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் இரண்டு புதிய காசநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். நால்வர் காசநோயாளிகள் என சந்தேகிக்கப்படுகின்றனர். இவர்கள் அரச மருத்துவமனைகளுக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்தச் செயற்பாட்டில் தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் பற்சுகாதாரப் பிரிவும், நடமாடும் மருத்துவப் பிரிவும், பங்குபற்றி பற்சுகாதார கண்காட்சியும், பற்சிகிச்சையும் , மருத்துவ சிகிச்சையும் மேற்கொண்டதுடன், அவற்றுக்குரிய மருந்துகளையும் வழங்கினர். இந்தச் சேவையில் 500 பேருக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்தச் சேவைக்கு முழங்காவில் அரசியற்துறை புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் மற்றும் இரணை மாதா நகர் பாடசாலை அதிபர் ஆகியோர் தமது முழுமையான ஆதரவை வழங்கியதாக தமிழீழ சுகாதார சேவைகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





முஸ்லிம் இளைஞனின் படுகொலையைக் கண்டித்து முஸ்லிம் மக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதியிடம் மகஜர் கையளிப்பதையும், கதவடைப்பின் காரணமாக வர்த்தக நிலையங்கள் வெறிச்சோடிக் கிடப்பதையும் படங்களில் காணலாம். படங்கள் - தர்சன்





திருகோணமலை - சேருநுவர பகுதியில் பொலிஸார் மீது நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலையடுத்து படையினர் சம்பவ இடத்தில் தாக்குதல்களில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

# கிழக்கில் ஆயுதக் குழுக்கள் இயங்குவதற்கு சாத்தியமுண்டு

## என்கிறார் பாலித கொகன்ன

கொழும்பு

வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை விடுதலைப் புலிகள்தான் ஏற்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை உருவாகக்கப்பட்டால் தான் பேச்சுக்கள் சாத்தியம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், விடுதலைப் புலிகள் தான் இயல்பு நிலையை உருவாக்க வேண்டும் என்று அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார்.

றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில்:-

அமைதிப் பேச்சுக்கள் நடைபெறாது என்று நான் கூற மாட்டேன். சமாதான செயலகத்தின் பணிப்பாளர் என்கின்ற முறையில் பேச்சுக்கள் கண்டிப்பாக நடைபெறும்.

அரசாங்கம் பொறுமையின் எல்லையில் நின்று செயற்படுகிறது. ஏனெனில் விடுதலைப் புலிகளை ஜெனிவாப் பேச்சு மேசைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

இயல்பு நிலை திரும்பாத வரை பேச்சுக்களுக்கான சூழ்நிலை இல்லை என்று புலிகள் கூறுகின்றனர்.

யார் இயல்பு நிலைமையை ஏற்படுத்த வேண்டும்?

எங்களைப் பொறுத்த வரையில் இயல்பு நிலைமை என்பது நாளாந்தம் கிளைமோர், கண்ணிவெடி தாக்குதல்கள் இல்லாத - பொதுமக்கள், சந்தைகள் மீது குண்டுகள் வீசப்படாத - பொதுமக்கள் கொல்லப்படாத நிலைமைதான் இயல்பு நிலைமை என்கிறோம். நாளாந்தம் ஆத்திரமூட்டும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் அமைதிப் பேச்சுக்கள் நடைபெறுவதற்காக உலகில் எந்தவொரு நாடும் இப்படியாக வளைந்து கொடுத்தாக காணமுடியாது.

கிழக்குப் பிரதேசத்தில் கருணா குழுவினருடன் இராணுவத்துக்கோ, அரசாங்கத்துக்கோ எதுவித தொடர்பும் இல்லை. கிழக்குப் பிரதேசம் முழுமைக்கும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லை.

அந்தப் பிரதேசத்தில் பாரிய வனப் பகுதிகள் உள்ளன. அவை எமது கட்டுப்பாட்டில் இல்லை. ஆகையால் அங்கே சில ஆயுதக்குழுக்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் உண்டு. நோர்வே சிறப்புப் பிரதிநிதி ஜோன் ஹன்ஸன் பௌயரின் முயற்சிகள் இனியும் தோல்வியடையுமானால் விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் தான் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு கொண்டுவந்து இத்தகைய அனைத்து சர்வதேச சமூக அழுத்தங்களும் கொடுக்கப்பட வேண்டும் என பாலித கொகன்ன மேலும் தெரிவித்தார்.

# கடற்படையினரின் படகுமீது கடற்புலிகள் தாக்குதலாம்!

முல்லைத்தீவு

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினரின் கடற்படைப் படகுமீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகப் படையினர் தரப்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கடற்படையினரின் படகு ஒன்று முல்லைத்தீவுப் பகுதியில் ரோந்து சென்றுகொண்டிருந்தபோது கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட கண்ணாடி இழைப் படகுகளை அவதானித்ததாகவும், பின்னர் மேலும் 5 தாக்குதல் படகுகள் அவற்றுடன் இணைந்துகொண்டதாகவும் தெரிவித்துள்ள கடற்படையினர் - சாலைக் கடற்பரப்பில் இருந்துவந்த மேலும் 4 படகுகளும் இணைந்து தமது படகுமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரிவித்துள்ளனர்.

பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குறிப்பிட்ட கடற்படைப் படகில் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதியும் இருந்ததாக கடற்படையினர் குறிப்பிட்டிருந்தனர்.

ஆயினும் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் இந்தத் தகவலை உறுதிப்படுத்தவில்லை.

## முஸ்லிம் வர்த்தகர் கொலைக்கு

# எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் கதவடைப்பு!

யாழ்ப்பாணம்

யாழ். நகரில் முஸ்லிம் இளைஞன் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.நகர் உள்ளிட்ட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. இதனால் வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

புதுவருடத்தினத்தன்று யாழ். நகரில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த வேளை இளம் முஸ்லிம் வர்த்தகர் யுனைட் முகமட் அஸ்மின் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஜும்மா பள்ளிவாசல் அழைப்பு விடுத்திருந்தது.

இதற்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ். நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. சன நெரிசல் மிகுந்த யாழ்.நகரம் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. துக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் கறுப்புக் கொடி பறக்க விடப்பட்டிருந்தது. தவிர புற நகரங்களான சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை, மானிப்பாய், ஆகிய பகுதிகளிலும் மருந்தகங்கள், உணவகங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இதேவேளை, முஸ்லிம் இளைஞர் ஒருவரின் படுகொலையை கண்டித்து நேற்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரை நாவாந்துறை முகம் மதியா ஜும்மா பள்ளிவாசல் உப தலைவர் சியானாஸ் தாதீர் யாழ். மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழு பிரதிநிதியிடம் கையளித்தார். அத்துடன், மனித உரிமைகள் ஆணைக்குழு, அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றுக்கும் மகஜர் கைய[illegible]க்கப்பட்டன.

அதேவேளை, தமது அழைப்பை ஏற்று வர்த்தக நிலையங்களை மூடி கதவடைப்புக்கு ஆதரவளித்த வர்த்தகர்களுக்கும், தமிழ் உறவுகளுக்கும் யாழ். முஸ்லிம் சமூகம் நன்றி தெரிவித்து ள்ளது. (ரி,த,12)

## பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தில் பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்துக்கு அமைவாக பாடசாலை பஸ் சேவைகள் இடம்பெறும் என இலங்கை போக்குவரத்து சபையின் வடக்கு செயலாற்று முகாமையாளர் செ.கமலநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது காலை 8 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பமாகின்றன. இதற்கேற்ற வகையில் பாடசாலை பஸ்கள் சேவையில் ஈடுபடும் எனவும் பாடசாலை அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# பெருமளவு ஆயுதங்கள் மட்டுவிலில் சிக்கியதாம்!

மட்டுவில்

தென்மராட்சி - மட்டுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட வீடு ஒன்றினுள் இருந்து பெருமளவு ஆயுதங்களைப் படையினர் கைப்பற்றியிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

12 கிளைமோர்கள், 39 கைக் குண்டுகள், 50 டெட்டனேற்றர்கள், 10 மிதிவெடிகள், 8 ஆர்.பி.ஜி. ஷெல்கள், 110 டி.என்.ரி. வெடிமருந்துக் குச்சிகள், 9 மி.மீ பிஸ்டல் ரவைகள் 250, 0.38 ரவைகள் 10, ரி.56 மகசீன்கள் 5, ரி.56 ரவைகள் 1400, உருமறைப்புச் சீருடை தொகுதிகள் 10 உள்ளிட்ட ஆயுதங்கள் தம்மால் கைப்பற்றப்பட்டதாகப் படையினர் தெரிவித்துள்ளனர்.

## அநாதரவான நிலையில் பெண்ணின் சைக்கிள்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் கடந்த இரண்டு வாரங்களாக அநாதரவான நிலையில் பெண்கள் சைக்கிள் ஒன்று உள்ளதாகவும், தபாலகப் பொறுப்பிலுள்ள இந்தச் சைக்கிளை உரியவர் ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறும் அஞ்சல் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

# காயமுற்ற சிப்பாய் மரணம்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - கிரானில் கடந்த 17 ஆம் திகதி விமானப்படையினரின் வாகனம்மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் படுகாயமடைந்த விமானப்படை சிப்பாய் நேற்று மரணமானார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் நேற்றுக்காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மேலும் 3 விமானப்படைச் சிப்பாய்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

# உரிமைகளை வென்றெடுக்கும் காலம் நெருங்கிவருகிறது!

## புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன்





கிளிநொச்சி —

வெற்றியின் விளிம்பில் இருக்கும் எமது விடுதலைப்போராட்டத்தை, எமது பலத்தை வெளிப்படுத்தி உரிமையை வென்றெடுக்கும் காலம் நெருங்கிவிட்டது என விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க. வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அரச பணியாளர்களுக்கான சமகால அரசியல் தொடர்பான ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் அரசியல்துறைப் போராளி சு. பசுபதிப்பிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய க.வே.பாலகுமாரன் மேலும் தெரிவிக்கையில்:

தேசவிரோதி கருணாவின் செயற்பாட்டால் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரைவாசிப்பலம் குறைந்துள்ளதாகவும், அதன்பின்னர் ஏற்பட்ட சுனாமியால் விடுதலைப் புலிகளின் மீதிப்பலமும் குறைந்துள்ளதாக நம்பிக்கொண்டு மகிந்த ராஜபக்ஷ செயற்படுகிறார்.

நோர்வேயின் சமாதான நடவடிக்கையினாலேயே விடுதலைப்புலிகள் இன்னமும் இருக்கிறார்கள். இந்த நிலையில் நோர்வேயையும் வெளியேற்றிவிட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாகவே செயலிழந்து விடுவர் என்ற கொள்கையுடனேயே மகிந்த ராஜபக்ஷ அரசு செயற்பட்டு வருகிறது.

தமிழ்பற்றாளர்களை பட்டியல் இட்டு படுகொலைசெய்ய மகிந்த அரசு தொடங்கியுள்ளது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெல்லுவதற்காக தமிழ் மக்களை படுகொலை செய்கிறது மகிந்த அரசு.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழினத்தின் உரிமைகள், அபிலாசைகள் சிங்கள தேசத்தால் புறக்கணிக்கப்பட்டு வந்த போதிலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழினத்துக்கு தலை நிமிர்வைத் தந்துள்ளது.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சாதகமான சூழலே தென்னாசியாவிலும், சர்வதேச ரீதியிலும் காணப்படுகிறது. தமிழ்தேசம் விரைவில் நல்லதொரு முடிவை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு இறுதிக்கட்டத்தில் வெற்றியின் படிகளில் நிற்கிறது.

எமது பலத்தை வெளிப்படுத்தி எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான காலம் நெருங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தூயவன், அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா, ஓய்வு பெற்ற ஆசிரியர் கு.மேகநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

## படையினர் கிளைமோர் தாக்குதல் பாலமோட்டையில் குடும்பஸ்தர் பலி!

வவுனியா —

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

புதூர் - பாலமோட்டைப் பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் - 6 பிள்ளைகளின் தந்தையான புளியங்குளம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நவ்வி கிளையின் விற்பனை முகாமையாளரான மு.கந்தசாமி என்பவரே உயிரிழந்தார்.

சம்பவ இடத்தை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பார்வையிட்டனர்.

## கல்லடி கடற்கரையில் மற்றொரு சடலம் மீட்பு

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - கல்லடி கடற்கரையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து கடற்கரைக்குச் சென்ற பொலிஸார் இரவு 7.30 மணியளவில் சடலத்தை மீட்டு காத்தான்குடி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

கடந்த 18 ஆம் திகதி கல்லடி பூநொச்சிமுனையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒரு இளைஞரின் சடலமும், கடந்த 11 ஆம் திகதி கல்லடி - வேலூரில் 17 வயது இளைஞரது சடலமும் மீட்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. அடையாளம் தெரியாத இந்தச் சடலங்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## இனந்தெரியாத நபர்களின் சூட்டில் வவுனியாவில் குடும்பஸ்தர் பலி!

வவுனியா —

வவுனியா - மணிபுரத்தில் வீடொன்றுக்குள் நுழைந்து இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இலும்நிசார் (வயது 35) என்பவர் கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் மேற்படி நபரின் விட்டுக் கதவை முதலில் தட்டியுள்ளனர். ஆனால்,. அவரும் அவரது மனைவியும் கதவைத்திறக்கவில்லை. இதையடுத்து வீட்டின் பிரதான கதவை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த ஆயுததாரிகள் துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தனர்.

அதில் நிசார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது மனைவி நிசார் பாபீ படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா கண்ணகை (சின்னப்பிள்ளை)

தும்பளை தெற்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி செல்லையா கண்ணகை அவர்கள் நேற்று முன்தினம் (20.04.2006) காலமாகிவிட்டார்.

இவர் செல்லையாவின் மனைவியும், அன்னலட்சுமி, இந்திராணி, அரியமலர் ஆகியோரின் தாயாரும், ஜெகன்மோகன், ரகுநாதன் ஆகியோரின் மாமியும், பாமினி, துஷ்யந்தினி யின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை (22.04.2006) 9.00 மணிக்கு நடைபெற்று, ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனக் கிரியை இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை தெற்கு,
பருத்தித்துறை. (இ)

தகவல்
சி.மார்க்கண்டு

## ஜெனிவா...

தொடர்பாக அவர் விவாதித்து வருகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான நடைமுறைச் சாத்தியமான பயண ஒழுங்குகள் தொடர்பாகவும் சமாதானப் பேச்சுக்களுக்கான புதிய திகதி தீர்மானிப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டுவருகிறது என்று நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அடுத்தடுத்த...

கொல்லப்பட்டனர்.

மேலும் சப் இன்ஸ்பெக்டர் திஸநாயக்கவும் ஊர்காவலர் ஒருவரும் படுகாயமடைந்தனர். காயமுற்ற இருவரும் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பொலநறுவ வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

அதேவேளை மற்றொரு கிளைமோர் தாக்குதல் அனுராதபுரம் சந்திப் பகுதியில் இடம்பெற்றது. கன்னியாவுக்கு சென்றுகொண்டிருந்த அரச பஸ்மீது நடத்தப்பட்டது. நேற்று மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவத்தில் சாரதி காயமுற்றதாவும் , பயணிகளுக்குச் சேதம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மீண்டும்...

வீடுகள், 8 கடைகள், 6 உழவு இயந்திரங்கள், 3 மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட தமிழர்களின் பெருமளவான சொத்துக்களை தீயிட்டு அழித்தனர்.

அங்கு ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையைத் தணித்து வழமைக்கு கொண்டுவருவதற்காக கந்தளாய், மூதூர் மற்றும் சேருவல பகுதியிலிருந்து பெருந்தொகையான பொலிஸாரும் இராணுவத்தினரும் சேருநுவர, மேன்காமம், தெகிவத்தை பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - மகிந்தபுரம் கிராமத்துக்குள் நுழைந்த சிங்களக் காடையர்கள் நடத்திய வெறியாட்டங்களில் ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்தனர். இவர்கள் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காடையர்களின் தாக்குதல்களால் அச்சமடைந்த தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான கிளிவெட்டி பகுதியை நோக்கி இடம்பெயர்ந்து வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமாலை வரை 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

அதேவேளை, ஊர்காவற்படையினரால் 7 பேர் பிடித்துச்செல்லப்பட்டதாகவும், இவர்களின் கதி குறித்து அறியமுடியாதிருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன. (04-10)

## புதிய...

பிராந்திய தளபதிகளின் கிளிநொச்சிப்பயணம் தொடர்பாக மேலதிக ஆலோசனைகள் மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்கள் ஆகியவற்றுடன் உல்ப் ஹென்றிக்சன் கிளிநொச்சிக்கு சென்றிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் சந்திப்பார் என கண்காணிப்புக்குழுத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் மத்திய குழுக்கூட்டத்தில் கிழக்குப்பகுதி தளபதிகள் பங்கேற்றால்தான்- ஜெனிவா பேச்சுக்களுக்கு செல்வது தொடர்பான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும், அதுவரை பேச்சுக்களுக்கு செல்ல இயலாத சூழ்நிலை என்றும் விடுதலைப்புலிகள் அறிவித்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுமுன்தினம் இது விடயமாக சந்தித்த இலங்கை சமாதான முயற்சிகளுக்கான நோர்வே சிறப்புப் பிரதிநிதி ஜோன் ஹன்சன் பௌயர் புதிய போக்குவரத்து ஒழுங்கு தொடர்பாகவும் விவாதித்தார்.

புதிய பயண ஒழுங்கு குறித்து விடுதலைப்புலிகள் தரப்பில் சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டு இருந்தன.

இதையடுத்து கொழும்பு சென்ற ஜோன் ஹன்சன் பௌயர் அரசாங்கத் தரப்பினருடன் ஆலோசனை நடத்தினார்.

அதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின் மீண்டும் அவர் கிளிநொச்சிக்கு சென்று விடுதலைப்புலிகளுடன் ஆலோசனை நடத்துவார் என்றும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.


AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Your Training Partner
Aim 01: Microsoft Office
Introduction, Word, Excel, Access, PowerPoint.
Morning & Evening Batches
Morning : 9.30 am
Evening : 3.30 pm
Starts on 24/04/06
Fast Track
1500/-
Introduction, Generation & Types, Components, Assembling, Basic DOS Commands, O/S Installation, Setup & Configuration.
Aim 02: Computer Hardware
10 நாட்கள் மட்டும்
Center for FOSS & LAMP
Director AIMS
#118, பலாலி வீதி,
தபால் பெட்டிச் சந்தி அருகில்,
திருநெல்வேலி



பணியாளர்கள் தேவை

1. வரவேற்பாளர் 2. கணக்காளர் 3. காசாளர்

* முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி :

முகாமையாளர்,
மூர்த்தி கலர் லாப்,
62/16 ஸ்ரான்லி லிங் வீதி, யாழ்ப்பாணம்.

(அ-5274)



திருமறைக் கலாமன்றம்
நாடகப் பயிலகம்
விண்ணப்பம் கோரல்

எமது மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2006 ஆம் ஆண்டுக்கான 13 ஆவது புதிய பிரிவு எதிர்வரும் 14.05.2006 இல் ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களுக்கும், நாடகமும் அரங்கியலையும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இப் பயிற்சிநெறி அமையும்.

பயில விரும்வோர் யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 04.05.2006 இற்கு முன்னராக ஒப்படைக்கவும்.


238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [C/5269]

பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தமிழ் ஈழநாடு
# வாரமலர்

மலர்:01 2006.04.22 சனிக்கிழமை இதழ்:02


பக்கம் - IV


பக்கம் - X

# முறுகல் நிலை தீருமா?

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய தளபதிகளின் கடற்பயணம். கடற்படையினரின் குறுக்கீட்டால் கடைசி நேரத்தில் கைவிடப்பட்ட துடன்–

ஜெனிவாவில் எதிர்வரும் 24ஆம். 25ஆம் திகதிகளில் நடைபெறத் திட்டமிட்டிருந்த இரண்டாம் கட்டப் பேச்சுக்களும் ஒத்திப் போடப்படும் நிலை உருவாகியுள்ளது,

முதல் கட்ட ஜெனிவா பேச்சுக்களின் இணக்கப்பாட்டை அமுல்படுத்தாமல் அரசு – துணை ஆயுதக் குழுக்களைக் கொண்டு நடத்தும் படுகொலை அரசியலால் சமாதான முயற்சிகள் கேள்விக்குறி யாக்கப்பட்டிருக்கின்றன,

இந்தச் சூழலில் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளான கேணல் சொர்ணம். கேணல் பானு ஆகியோர் தமது தலைமைப் பீடத்தைச் சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னரே ஜெனிவா செல்லும் முடிவு எடுக்கப்படும் என்பது தான் புலிகளின் நிலைப்பாடு,

பேச்சுக்களுக்கு முன்னர் அரசு தனது குழுவினருக்கு வெளிநாட்டு நிபுணர்களைக்கொண்டு பயிற்சிப்பட்டறை நடத்தும்போது – நாம் மட்டும் கிழக்குத் தளபதிகளுடன் ஆலோசனை நடத்தக்கூடாதா என்பதுதான் புலிகளின் கேள்வி,

கண்காணிப்புக்குழுத் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் ஏற்படுத்திய இணக்கப்பாட்டுக்கு அமைய கடந்த சனியன்று தனியார் கப்பல் மூலம் புலிகளின் தளபதிகளின் கடற்பயணம் இடம்பெறுவதாக இருந்தது,

ஆனால். இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான கப்பலில். கடற்படையினர் எரிபொருள் நிரப்பி – பாதுகாப்புக் கொடுத்து முல்லைத்தீவுக்குக் கொண்டு வந்த போதுதான். இதன் பின்னணியில் ஏதோ சூழ்ச்சி இருப்பதை உணர்ந்து கொண்டனர் புலிகள்,

தனியார் கப்பல் என்று விட்டு அரசுக்குச் சொந்தமான கப்பலைக் கொண்டு வந்துதும். அதனருகே நான்கு டோறாப் படகுகள் தொடர்ச்சியான கட்டளைகளைப் பிறப்பித்ததும் புலிகளுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது,

பின்னர் தமது தளபதிகளைத் தாக்கிக் கொல்வதற்கான ஒரு திட்டம் கடற்படையிடம் இருப்பதாகப் புலிகள் கண்டறிந்தனர்,

இதன் காரணமாக கிழக்குக்குச் செல்லவிருந்த பதில் தளபதிகளும். 30 போராளிகளும் தமது பயணத்தை ரத்துச் செய்துவிட்டு திரும்ப நேரிட்டது,


டெக்கான் அவியேசனிடம் உள்ள இலகுரக ஹெலி – பெல் 407

அத்துடன் கடற்படையின் ஒழுங்கு கேள்விக்குறியாகி மீளவும் இறுக்க நிலை ஏற்பட்டது,

இதன் பின்னர் நெருக்கடி தோன்றிய போது – அரச தரப்பு புலிகளின் தளபதிகளின் பயணத்துக்கு தனியார் ஹெலிகளைப் பயன்படுத்த இணக்கம் தெரிவித்தது, நோர்வே ஏற்பாட்டில் ஹெலிகளை ஒழுங்குபடுத்தலாம் என்று புலிகளுக்கு நோர்வே மூலம் கடிதம் அனுப்பப்பட்டது,

இந்த யோசனை புலிகளால் முற்றாக நிராகரிக்கப்படாவிடினும் இதில் உள்ள ஆபத்துகள் குறித்து புலிகள் ஆழமாக யோசிப்பதாகத் தெரிகிறது,

இந்தியாவின் டெக்கான் அவியேசன் நிறுவனம் தமது ஹெலிகளை இந்தப் பயணத்துக்கு வழங்க இணங்கியுள்ளது, இந்தியாவிலேயே அதுதான் ஹெலிகளை வாடகைக்கு விடும் மிகப்பெரிய தனியார் நிறுவனமாகும்,

ஆனால். இந்த நிறுவனத்திடம் இருப்பதோ பெல் – 407. பெல்–206 ஜெட்ரேஞ்சர். ஈகுரேல் போன்ற சிறிய – இலகு ரக ஹெலிகள்தான்,

இவை ஆகக் கூடிய வேகத்திலோ. உயரமாகவோ பயணிக்கக் கூடியவை அல்ல,

இவற்றில் ஆகக்கூடியது ஆறு அல்லது ஏழு பேர்தான் பயணம் செய்யலாம், இவை தயாரிக்கப்பட்டதே தேடுதல். மீட்பு மற்றும் நோயாளரைக் கொண்டுசெல்லும் பணிகளுக்கே, இவை பயணிகளுக்காக தயார் செய்யப்பட்டவை அல்ல. இவை ஆகக்கூடியது 13 ஆயிரம் அடிகளுக்கு மேல் பறக்க முடியாதவை. ஆனால். எம். ஐ 17 போன்ற ஹெலிகள் 19 ஆயிரம் அடிகளுக்கு மேலும் பறக்கும் திறன் படைத்தவை. இலகுரக ஹெலிகள் அதிக உயரத்தில் பறக்க முடியாதென்பதால் சாதாரணமான இயந்திரத் துப்பாக்கியாலேயே சுட்டு வீழ்த்தக்கூடிய ஆபத்து உள்ளது,

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் காடுகளுக்கு மேலாகவோ. அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மேலாகவோ குறைந்த உயரத்தில் பயணிக்கும் இந்தக் ஹெலிகள் இலகுவாகவே சுட்டு வீழ்த்தப்படக்கூடும்,

ஆயுதக் குழுக்களின் மூலம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படக் கூடும் என்ற அச்சம் நிலவுகிறது,

அதைவிட கிழக்குக்கு பதில் தளபதிகள் உட்பட 32 புலிகள் பயணிக்க வேண்டியுள்ளதுடன். அங்கிருந்தும் தளபதிகளுடன் 32பேர் பயணமாகவும். பின்னர் மீண்டும் அதே ஒழுங்கில் பயணத்தைத் தொடரவும் வேண்டும்,

இதனால் தனியாரிடம் வாடகைக்கு எடுக்கக்கூடிய ஹெலிகளின் மூலம் இந்த பயணத்தை நிறைவேற்ற முடியாது, இதுவும் ஒரு சிக்கல்,

அதேவேளை சுமார் இருபது பேர் வரை பயணம் செய்யும் ஹெலியை வாடகைக்கு அமர்த்தும் யோசனையும் நோர்வே சமர்ப்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது,

ஆனால். அயல்நாடான இந்தியாவிடம் கூட இந்தளவு பெரிய ஹெலிகள் தனியாரிடம் இருப்பதாக தெரியவில்லை, பெரிய ரக ஹெலிகளை வேறுநாடுகளில் இருந்து கொண்டு வந்து சேர்ப்பது இன்னொரு பிரச்சினை,

மேலும் – தனியார் ஹெலிகளில் புலிகளின் தளபதிகள் வரும்போது திட்டமிட்டு ஆபத்து விளைவிக்கப்படவும் கூடும், நோர்வேயை தனியார் ஹெலிக்கு ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டு –

அமைச்சர் றோகித போகொல்லாகம– டெக்கான் அவியேசன் நிறுவனத்துடன் பேச்சு நடத்தியிருப்பதும் சந்தேகத்துக்குரியதுதான்,

அதைவிட. தென்சூடானில் விடுதலை இயக்கத் தலைவர் ஜோன் கராங் கடந்த ஜூலையில் உபஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட மூன்றே வாரங்களில் ஹெலி விபத்து ஒன்றில் கொல்லப்பட்டார்,

இது சூடான் அரசாங்கத்தின் சதி வேலை என்றே சந்தேகிக்கப்படுகிறது, 21 வருடங்கள் ஆயுதப் போராட்டம் நடத்தி சமாதானப் பேச்சுக்கள் மூலம் – உப ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட மூன்றே வாரங்களில் இவர் கொல்லப்பட்டார்,

இது போன்ற சதி விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் அரங்கேற்றப்படலாம், அமைச்சர் அஷ்ரப் விமானப்படை ஹெலியில் சென்றபோதே – சதி காரணமாக விபத்து நேரிட்டு மரணமானதாக குற்றச்சாட்டு இருக்கும்போது – தனியார் ஹெலிகளில் இத்தகைய சதி வேலைகளைச் சுலபமாக அரங்கேற்றிவிடலாம்,

எனவே. விடுதலைப் புலிகள் தமது கிழக்கு தளபதிகளின் பயண ஒழுங்கில் பூரண பாதுகாப்பு திருப்தி ஏற்படும் வரை தனியார் ஹெலி பயணத்துக்கு ஒத்துவரமாட்டார்கள் என்றே கருதப்படுகிறது,

கடல்வழிப்பயண ஒழுங்கில் அரசு கட்டுப்பாடுகளை விதித்து ஜெனிவா பயணத்துக்குத் தடை ஏற்படுத்திய அரசு – புலிகளுடன் பேச்சுக்களை நடத்த விரும்பினால் விமானப்படை ஹெலி யொன்றை பயணத்துக்காக வழங்கவேண்டும்,

இல்லையேல் புலிகள் தமது ஹெலிகளில் பயணத்தை மேற்கொள்ள அரசு இணங்கினால் இந்தச் சிக்கல் தீர்க்கப்படும், ஆனால். அரசு இதற்கு ஒருபோதும் இணங்காது,

இல்லையேல் சுய பாதுகாப்பு டன் புலிகள் கடல்வழியாக பயணிக்க அனுமதிக்க வேண்டும். இந்த வாய்ப்புகளையும் விட வேறு தெரிவு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.


இலங்கை விமானப்படையிடம் உள்ள 30 பேரை ஏற்றக்கூடிய ஹெலி – எம்.ஐ 17

# உங்கள் பதில் என்ன?



நமது ஈழநாடு பத்திரிகையில் புதிதாக அறிமுகமாகும் இப்பகுதியில் - அரச அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் பொதுமக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் வெளியிடப்படும்.

எமக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் - பொதுமக்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் தங்களது கருத்தையும் வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

பொதுமக்களின் பிரச்சினைகள், குறைகள், சந்தேகங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தட்டிக்கழிக்காமல் இந்தப் பகுதியூடாக தமது பதிலை வழங்குவதன் மூலம் அவர்களைத் திருப்திப்படுத்த முடியும் எனக் கருதுகிறோம்.

- பிரதம ஆசிரியர் -

## பத்து மாதத்துக்கு மேலாக ஓய்வூதிய கொடுப்பனவின்றி இன்றுவரை காத்திருக்கும் மாநகரசபை ஓய்வூதியர்கள்

மாநகர சபையில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்களின் ஓய்வூதியத்தினை உரிய காலத்தில் வழங்காது இழுத்தடிக்கும் வேலையை மாநகரசபை மேற்கொள்வதாக கர்த்தமுத்தருக்கு கடிதங்கள் வந்துள்ளன.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களை கொண்டுள்ள மாநகர சபையில் பலதரப்பட்ட வேலைகளில் பணியாற்றி மூப்பின் காரணமாக ஓய்வடைந்த உத்தியோகத்தரின் ஓய்வூதியம் கொடுக்கும் வரை ஒரு கொடுப்பனவு 2000ம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்டது. பின்னர் 03மாத காலத்தில் வழங்க வேண்டிய ஓய்வூதியத்தை பல மாதங்கள் கழித்தும் கொடுக்க முடியாத நிலை மாநகரசபையில் காணப்படுவது வேதனையே.

மாநகர சபை தாபனக்கிளையில் பிரதம லிகிதர், தட்டெழுத்தாளர் உட்பட பதினாறு உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர். வேலைப்பகுதி, சுகாதாரப்பகுதி, பொதுவான பகுதி என மூன்று பிரிவுக்குமான சம்பள கொடுப்பனவுக்கு நால்வரும் பொது விடயங்களுக்கு போக மீதி ஆறுபேர் ஓய்வூதியத்துக்கும் கடமையாற்றுகின்றனர். (இதில் மூவரே ஓய்வூதியத்துக்கு நேரடியாக நியமிக்கப்பட்டவர்கள்) இவ்வாறு இருக்கும்போது ஓய்வூதிய தாமதத்திற்கு கடமையாற்றும் உத்தியோகத்தரின் அசண்டையீனமே தவிர வேறு எதைக் கூற முடியும்?

முன்னர் கடமையாற்றி ஓய்வு பெற்ற ஒருவர் கூறுகையில் 23.06.2005ம் ஆண்டு தான் ஓய்வு பெற்றதாகவும் ஆனால் இன்று வரை தமக்கு ஓய்வூதியம் வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை எனக் கவலையுடன் தெரிவித்தார். குறித்த உத்தியோகத்தர்களும் ஒரு காலத்தில் ஓய்வடையப் போவதாகவும் அப்போது அவர்களுக்கு தன்னைப் போன்றவர்களின் நிலை விளங்கும்? எனத் தெரிவித்தார். இதே போல ஆரம்பம் முதல் ஓய்வடையும் வரை மாநகர சபையிலேயே கீழ் நிலை உத்தியோகத்தராக கடமையாற்றிய ஒருவர் தான் 2005ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஓய்வு பெற்றதாகவும் தான் இன்று வரை ஓய்வூதியம் இல்லாது குடும்பத்துடன் ஒருவேளை சோற்றுக்கும் கஸ்ரப்படுவதாகவும் வேதனையுடன் தெரிவித்தார்.

தற்போது மாநகர சபையின் ஆணையாளரும் ஓய்வு பெற்ற ஒருவர் என்பதும் அவரே யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சங்க தலைவர் என்பதும் மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எது எப்படியிருப்பினும் ஓய்வூதியர்களின் உரிமைகளை காலந் தாழ்த்தாது கிடைக்கச் செய்வது ஏனைய உத்தியோகத்தர்களினதும் அவர்களை நிர்வகிக்கின்ற நிர்வாகிகளதும் கடமையுமாகும். ஆகவே இனி மேலாவது ஓய்வூதியர்களின் ஓய்வூதியங்கள் உரிய காலத்தில் கிடைக்க மாநகர சபை ஆவன செய்யுமா?

- போனா.காத்தமுத்தர் -

# ஓங்கி ஒலித்த குரலொன்று அமுங்கிப் போகின்றது

ஓங்கி ஒலித்த குரல் ஒன்று மெல்ல மெல்ல அமுங்கிக் கொண்டு போகின்றது.

அனைத்து அதிகாரங்களை தன் வசமே வைத்துக்கொண்டு இலங்கையை ஆட்டிப்படைத்த அந்தக் குரல் இன்று அரசியல் அரங்கில் பலத்த அவமானங்களையும் அவமதிப்புக்களையும் சந்தித்து வருகின்றது.

ஆட்சியில் இருந்தபோது அவர் கதிரையை சுற்றி வளைத்து நின்றவர்கள் இன்று ஆளைவிட்டால் போதும் என்பதுபோல் ஒவ்வொருவராக விலகி நிற்கும் துப்பாக்கிய நிலையும் இடம்பெற்றுவருகிறது.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்து விலகிய ஜனாதிபதிகள் அரசியலை துறந்து கௌரவத்தோடு காலம் கழித்துக் கொண்டார்கள். அதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆட்சியில் இருந்து அகன்ற போதிலும் அதிலிருந்து மீள முடியாது அரசியலில் இறங்கி பல அவமானங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

வீரமும் காலத்தே விட்டு வெறுங் கையோடு இலங்கை புக்கான் என்று இராவணனை கம்பர் இராமாயணத்தில் சித்தரித்துக் காட்டியது போன்று அரசியலில் பல தோல்விகளைச் சந்தித்து நிற்கும் சந்திரிகாவின் காட்சி புலப்படுகிறது.

ஸ்திரமான பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை இரவோடிரவாகக் கலைத்து பேரினவாதக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி யோடு கூட்டுச் சேர்ந்து பின் அவர்களது அழுத்தங்களையும், அவமானங்களையும் ஓரங்கட்டிவிட்டு ஆட்சியை நடத்திக் கொண்டவர் இவராவர்.

ரணில் விக்கிரமசிங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் நாட்டைக் காட்டி கொடுத்தவர். நாங்கள் பதவிக்கு வந்தால் அந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிந்து குப்பைக் கூடையில் போடுவேன் என்று சூழுரைத்தவர். பின்பு நோர் வேயை சமாதானப் பேச்சுவார்த்தைக் அனுசரணையாளராக அழைத்து அந்த புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க ஆவல் அல்ல.. அழுத்தங்களுக்குள்ளாவர்.


சந்திரிகா ஆட்சிக்காலத்தில் அமைச்சரவையில் அவருக்கு வழங்கப்பட்ட மடிவெல காணிக்கு எதிராக ராவய ஆசிரியர் விக்டர் ஜபனாப கொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு வெளியாவதற்கு முன்பு காணியை மீண்டும் அரசாங்கத்துக்கு கையளித்து பரிகாரம் தேடிக்கொண்டவர்.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் போது தனியார் நிதியத்துக்கு வழங்கிய 60கோடி ரூபாவை மகிந்த ராஜபக்ஷ நிராகரித்தபோதும் அதற்கு ஒப்புதல் வழங்குமாறு ஜனாதிபதியிடம் மண்டியிட்டு தோல்வி கண்டவர்.

பெரிய ஆரவாரங்களோடு ஆரம்பிக்கப்பட்ட ஜெனிவாப் பேச்சுவார்த்தை பற்றிய இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தம்மிடம் கட்சித் தலைவி என்ற முறையில் எதுவும் தெரிவிக்கவில்லை என்று ஆதங்கப்பட்டுக் கொண்டவர். அதனால் மகிந்தவுக்கும் தனக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்திக் கொண்டவர்.

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வேட்பாளராக நியமிக்கப்பட்ட பல கோணங்களில் தன் எதிர்ப்பை வெளியிட்டவர் ஒரு கட்டத்தில் மகிந்தவை அழைத்து

நான் உங்களைப் பிரதமராக்கிய போது பலர் என்னை எச்சரித்தனர். துரதிஸ்டவசமாக நான் கொல்லப்பட்டால் என்று என்னைப் பயமுறுத்தினர். நீங்கள் ஜனாதிபதி பதவியை கைப்பற்றுவீர்கள் என்று என்னை பயமுறுத்தினார். இப்போது அதே ஆட்கள்தான் உங்களை சூழ்ந்து இருக்கிறார்கள் என்று குழைவாகப் பேசி மகிந்தவை தம்பக்கம் இழுக்க



முயற்சி மேற்கொண்டவர்.

இறுதியில் லண்டன் செல்வதற்கு முன்பு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை கையளித்து விட்டுச் சென்றவேளை. மீண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு மகிந்தவை கட்சியின் பிரதித்தலைவராக நியமித்துள்ளது. ரட்ணசிறி விக்கிரமநாயக்காவே அந்தப் பதவியை மகிந்தவுக்கு தாரை வாத்திருந்தார்.

மகிந்தவின் நியமனம் கட்சியின் சட்ட திட்டங்களுக்கு முரணானது என்று சந்திரிகா லண்டனில் இருந்து காரசார மாக கடிதம் எழுதியிருந்தார். ஆனாலும் அது கண்டுகொள்ளப் படவே இல்லை.

ஆணை பிறப்பித்த குரல் ஒன்று அமுங்கிப் போகிறது என்பது தெளிவாகவே தெரிகிறது.

**நரேன்**

# தமிழக தேர்தலில் சினிமா நடிகர்கள்

சுப்பிரமணிய சுவாமி இந்திய அரசியலில் ஒரு கோமாளி. கோமாளித்தனமாக அவ்வப் போது அறிக்கைகளை வெளியிட்டு தானும் அரசியலில் இருப்பதாகக் காட்டிக் கொள்பவர். ஆனால், சிற்சில வேளைகளில் பல நல்ல கருத்துக்களையும், தெரிவித்துக் கொள்வார். அண்மையில் சினிமா உலகத்தைச் சேர்ந்தவர்களை அரசியலில் அனுமதிக்கக் கூடாது என்று ஒரு கருத்தை வெளியிட்டார்.



சினிமா ஒரு அறிவு நுட்பமான சாதனம். அதன் மூலம் உலக அரங்கில் பல உன்னத தயாரிப்புக்களை தயாரித்து கொடுத்திருக்கின்றார்கள். ஆனால், தென்னிந்திய சினிமா மிகவும் கீழ்த்தரமான, சூழலைக் கருத்திற் கொண்டு, மக்களிடையே உணர்ச்சிகளை கிளப்பி, அதன்மூலம் சமுதாயம் எக்கேடு கெட் டாலும் பரவாயில்லை என்று அரைகுறை ஆடைகளுடன் படங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் உள்ள கேரளாவில் கூட சினிமாத் தயாரிப்பாளர்கள் தங்கள் மக்களின் சினிமாத் தரத்தை உயர்த்துவதற்காக உன்னத தயாரிப்புக்களை வழங்கி வருகின்றார்கள். கேரளாவில் கல்லூரியில் படம் பார்க்கும் சினிமா ரசிகன் கூட "செம்மீன்" தரத்தையொத்த சினிமாப் படங்களையே இன்று பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற சுப செய்தியும் இன்று வந்துகொண்டுதான் இருக்கிறது.

இன்று சினிமாவை ஆக்கிரமித்த இந்த தென்னிந்திய நடிகர்கள் சட்டசபைத் தேர்தலில் சிலருக்கு ஆதரவு தெரிவித்து, வாக்குகள் சேகரிக்க புறப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே - சிவாஜி, ராஜேந்தர், பாக்கியராஜ் போன்றவர்கள் தனிக்கட்சி அமைத்து அரசியலில் இறங்கி கரிபூசிக் கொண்டவர்கள் வரிசையில் - நடிகர் விஜயகாந்த் தனி கட்சியை அமைத்து, தென்னிந்திய மக்களிடம் தனது கட்சியை ஆதரிக்குமாறு மாநிலமெங்கும் சூறாவளிப் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். நடிகர் ரஜினிகாந் கூட மறைமுகமாக அரசியலில் பிரவேசித்து, தோல்வியைத் தழுவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக 90 நாட்களில் 27 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பயணம் மேற்கொண்டு, முதற் கட்டப் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளார். தமிழகத்தில் 234 தொகுதிகளிலும், புதுவையிலும் 27 இடங்களிலும் இந்தக் கட்சி போட்டியிடுகிறது. சில இடங்களில் கல்லெறிகளும், தாக்குதல்களையும் சந்தித்துள்ளது. ஒரு பத்திரிகையின் கருத்துக் கணிப்பின்படி இவருக்கு 5 வீதமான வாக்குகளே கிடைக்குமென்று கண்டறியப்பட்டுள்ளது.

நடிகர் சரத்குமார் தி.மு.கவில் இருந்து விலகியுள்ளார். அவரது ரசிகர் மன்றத்தினர் ஆதரவு வழங்கியுள்ளனர். சரத்குமாரின் பதவி விலகலை மறுபரிசீலனை செய்யுமாறு கருணாநிதி கேட்டிருந்தார். ஆனால், சமரச முயற்சிகள் தோல்விகண்டுவிட்டன. அவர் அ.தி.மு.க அணியிலே இணைந்துவிட்டார்.

திரைப்பட நடிகரும், இயக்குநருமான பாக்கியராஜ் தி.மு.க தலைவரைச் சந்தித்து தி.மு.கவில் சேரப்போவதாக அறிவித்துள்ளார். ஏற்கனவே தன்னால் தொடங்கப்பட்ட எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகம் என்ற கட்சியையும் அமைத்துள்ளார்.

இன்று அ.தி.மு.கவுக்காக நடிகர்கள் எஸ். எஸ் சந்திரன், முரளி, செந்தில், ராமராஜன், ராதாரவி, ஆனந்தராஜ், குண்டு கல்யாணம் என்பவர்களோடு நடிகை சிம்ரன், விந்தியா, கோவை சரளா போன்றோர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். பெரும்பாலும் நடிகர்களையே கடவுளாக நடிகர்களுக்காக உயிர் கொடுக்கக்கூடிய தமிழக மக்களின் வாக்குகள் எப்பக்கம் சேரும் என்பதில் எல்லோருக்கும் தெரியும்.




தி.மு.கவுக்கு ஆதரவாக நடிகர் சந்திரசேகர், தியாகு, பாக்கியராஜ் ஆகியோர் களத்தில் இறங்கியுள்ளார்கள்.

ஆனால், அண்மையில் இந்து, சி.என்.என் ஆகியவை மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் முன்னால் பிரபல நடிகையும், முத லமைச்சருமான ஜெயலலி தாவை 42 சதவீத மக்கள் விரும்புகின்றார்கள். கருணாநிதி முதலமைச்சராக வேண்டுமென்று 39 வீதத்தினரே விரும்பு கிறார்கள்.

இந்த நிலையில் தமிழக தேர்தலின் சினிமா அலையின் தாக்கம் எவ்வளவு பிரதிபலிக்கப் போகின்றது என்பது எதிர்வரும் சட்ட சபைத் தேர்தல் முடிவுகள் புலப்படுத்தும்.

**சோமு**

# யாருக்கு யார் பாதுகாப்பு?

கொஞ்சம் கோடரிக்காம்புகளின் உதவியுடன் இனவாத ஊடகங்களின் ஆதரவுடன் பயங்கரவாதப் பிரசாரத்தை பொய்க்கு மேல் பொய்யாகப் பரப்பி இன ஒழிப்பை வெற்றிகரமாக நிறைவேற்றி சர்வதேச சமூகத்தையும் முட்டாளாக்கலாம் என்பதை சிறிலங்காவிடம் உலக நாடுகள் பாடமாகப் படித்துக் கொள்ளலாம்!

இன ஒழிப்புக்குத் துணைப் படை களைத் தயாரித்து வைக்கவேண்டு மென்பது மகிந்த சிந்தனைக்கு வழிகாட்டிய பண்டார நாயக்க சகாப்த காலச்சிந்தனையாகும். 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதி சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்பட்டபோது அதை எதிர்த்து செல்வநாயகம் தலைமையில் தமிழர்கள் சாத்வீகப் போராட்டம் நடத்தினர். இதை எதிர்த்து சாத்வீக சக்தியாக்கிரத்திலீடுபட்டவர்கள் மீது வன்செயல் கட்டவிழ்த்து விடப்பட்டது. அரச காவல்துறையினர் கைகட்டிப் பார்த்திருக்க கல்லுகளும், பொல் லுகளும் ஏந்திய காடையர் கூட்டமே அன்று பண்டா அரசுக்குத் துணைப் படையாகச் செயற்பட்டது. இதுவே தமிழர்களுக்கு எதிராக இன ஒழிப்புத் தொடங்குவதற்கு ஒத்திகை பார்க்கப்பட்ட முதல்



நடவடிக்கையாகும். 1956ஆம் ஆண்டின் பின் 1958ஆம் ஆண்டில் இன ஒழிப்பின் திட்டமிட்ட முதல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. நாடாளுமன்றத்தில் வவுனியாப் பிரதிநிதியும் அடங்காத் தமிழன் என்று பெயர் பெற்றவருமான செல்லப்பா சுந்தரலிங்கம் தமிழர்களுக்கு எதிராக இன ஒழிப்புக்கான நடவடிக்கையாக - தேர்தல் வாக்காளர் பட்டிய லிலிருந்து கொழும்பு நகரில் மக்க ளின் குடியிருப்புகள் குறிப்பெடுத்து அடையாளமிடப்படுகின்றன என்று பிரதமர் பண்டார நாயக்கவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். பிரதமரோ, அரசோ கவனத்தில் எடுக்க வில்லை. கொழும்பிலும், நாடுமுழு வதிலும் தமிழ் மக்களுக்கெதிராக இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டது. தமிழர்களின் வியாபார நிலையங்கள் உடைத்துக் கொள்ளையடிக்கப் பட்டு எரியூட்டப்பட்டன. பாணந்துறைக் கந்தசாமி கோவிலில் ஒரு ஐயரே உயிருடன் எரியூட்டிக் கொலை செய்யப்பட்டார். மற்றும் பலர் கொலை செய்யப்பட்டனர்.


பெண்கள் மானபங்கப் படுத்தப் பட்டனர். தமிழர்களின் வீடுகள் கொள்ளை யடிக்கப்பட்டன.

1958ஆம் ஆண்டில் காவல் துறையில் சேர்ந்தவர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தின் பின் கல்வி கற்றதுடன் காவல்துறையிலும், பாதுகாப் புத்துறையிலும் சிங்களத்தில் தேர்ச்சி பெற்றவர்களே சேர்ந்திருந்தனர். இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டதுடன், சிங்கள இனவெறியும் ஊட்டப்பட்டது.

இதனால் 1972ஆம் ஆண்டில் காவல்துறையினரே தமிழர்களுக் கெதிரான இனக்கலவரத்தைத் தூண் டிவிட்டனர். இந்தக் காலத்தில் செல்வ நாயகம் தலைமையில் தமிழரசுக்கட் சியும் தமிழர் மக்கள் காந்திய வழியில் சாத்வீகப் போராட்டங்களை நடத் தினர். இதனால் தமிழ் இனத்தையே ஒழித்துக்கட்டிவிடுவதற்கு சிங்களப் பேரினவாதிகள் முடிவு செய்தனர். 1983 ஆம் ஆண்டில் திட்டமிட்ட இன ஒழிப்பு மேற்கொள்ளப்பட்டது. மிக உச்சப் பாதிப்பான சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஐம்பத்தி ரெண்டு தமிழ்க் கைதிகள் அதுவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திலீடுபட்டுச் சிறையிலடைக்கப்பட் டிருந்த போராளிகள் உட்பட கோரமானமுறையில் சித்திர வதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். அன்னை இந்திரா தலையிட்டதால் இலங்கையில் இனப்படு கொலை தடுக்கப்பட்டது.

1958முதல் 1983 வரை நாட்டில் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு இன அழிப்புத் தொடர்ந்ததுடன் தமிழ் மண்ணும் அபகரிக்கப்பட்டது. இதன் விளைவாகத் தமிழ் இளைஞர்கள் தங்களையும், தமது மக்களையும் தமது மண்ணையும் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினர். ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் சிலர் திசை மாறிப் போயினர். வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழத் தாயக மண்ணில் கணிசமான அளவு இடத்தை அரச படைகளுடன் போராடி மீட்டு விடுவித்தனர். தமிழீழம் முழுவதையும் விடுவிக்கும் போராட்டத்தை வலுப்படுத்துவதில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருக்கும் காலத்தில்தான்- போரில் வெற்றி கொள்ள முடியாதென்பதை உணர்ந்த சிங்கள ஏகாதிபத்தியம் சில தமிழர்களின் பலவீனத்தை அறிந்து சதி செய்து அவர்களைக் கோடரிக்காம்புகளாக மாற்றி தமிழ் இனப்படுகொலைகளை வேறு வழிகளில் நிறைவேற்றி இன ஒழிப்பில் ஈடுபட்டு வருகிறது.

போரில் வெற்றி கொள்ள முடியாதென்பதை ஆனையிறவுச் சமரிலும், ஜயசிக்குறு மோதலிலும் ஏற்பட்ட தோல்விகளை நன்குணர்ந்து கொண்ட சிங்கள ஆதிக்க சக்திகளும், பேரின வாதிகளும், பணத்துக்கும், பதவிக்கும், பட்டத்துக்கும் மயங்கும் பேர் வழிகளைக் கண்டுபிடித்து- மேலும் மேலும் அவர்களுக்கு ஆசையூட்டி தமது வழிக்குத் திருப்பினர். தமிழ் இனம் அழிந்தாலும் பரவாயில்லை, தமது



வாழ்வு செழித்தால் போதும் என்று நினைப்பவர்கள் ஆதிக்கசக்திகளின் வலையில் வசமாகச் சிக்கிக் கொண்டனர். இப்பொழுது இவர்கள் கண்முன்பாகவே இவர்களின் உதவியுடன் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பாகவே இலங்கையில் நடைபெறும் கொலை கள் எல்லாவற்றுக்கும், விடுதலைப் புலிகள் மீதே பழியைச் சுமத்துவதற்கு கொழும்பிலுள்ள ஊடகங்கள் பழக்கப்படுத்தப்பட்டன. இனவாதிகளான ஜே.வி.பி, ஹெல உறுமய கட்சிகளைச் சேர்ந்தவர்கள்- டக்ளஸ் தேவானந்தா, ஆனந்தசங்கரி போன்றவர்களின் உதவியுடன் கொலைகள் யாவற்றுக்கும் புலிகள் மீதே பழியைச் சுமத்தி வந்தனர். கொழும்பிலும், இந்தியாவில் சுப்பிரமணியம் சுவாமி போன்றவர்களையும் சேர்த்து விமல்வீரவன்ச போன்றவர்களும் பொதுக்கூட்டங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கொலைப் பழிகளைச் சுமத்தி வந்தனர்.

போதாக்குறைக்கு வெளிநாடுகளிலுள்ள சில அமைப்புக்களையும், இங் குள்ள இனவாதிகளும், இனவாத ஊடகங்களும் தங்கள் பக்கம் சேர்த்து ப் புலி எதிர்ப்புப் பிரசாரத்துக்கு இணைத்துக்கொண்டன. இப்பொழுது நாளும் பொழுதும் கிளைமோர் கண்ணி வெடிகள் வெடிக்கின்றன. துப்பாக்கிகள் வெடிக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலுடன் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டுப் பின் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்துடன் சேர்த்துப் பணமாகக் கொட்டித்தீர்த்த ஜனநாயகப் பிரசாரப் பீரங்கிகள் - புலிகளுக்கு ஆதரவாக விளங்கிய வர்த்தகர்கள் பொதுமக்கள், பிரமுகர்களை அடையாளம் கண்டு இப்போது தீர்த்துக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் புலிகளுக்கு ஆதரவானவர்களைப் புலிகளே கொலைசெய்வதாகக் கொழும்பு ஊடகங்களும், காவல்துறை தகவல் தரவல்லவர்களும் அறிவிப்பதுதான்.

எந்தப் பாகுபாடுமின்றி எல்லோருக்கும் நீதியும், நியாயமும் கிடைக்கக் கூடியமுறையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகத் தெரிவித்து மகிந்த சிந்தனையில் தெரிவு செய்யப்பட்டு மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்தான் தமிழர் படுகொலை என்றுமில்லாதவாறு அதிகரித்திருக்கிறதே ஏன்?

**எஸ்.எம்.ஜி**

படையினர் முழத்துக்கு முழம் முகாம் அமைத்துப் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கும் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அப்பாவிப் பொது மக்கள் முகாம்களுக்கருகிலேயே கொலை செய்யப்படுகிறார்கள்.

படையினரைக் குறி வைத்தும், குண்டுகள் வைக்கப்பட்டு உயிரிழப்பில்லாமல் தப்பிவிடுவதாகவும் செய்திகள் தெரி விக்கின்றன. படையினரின் கண்முன்னாலேயே இந்தக் கொலைகள் நடைபெறுவதாயின் எதற்காக இங்கே பாதுகாப்புப் படைகள் இருக்க வேண்டும்? யாருக்கு யார் பாதுகாப்பு?

# பேரழிவுக்குள் சிக்குமா இலங்கைத் தீவு?

ஜெனிவாவில் இடம்பெற்ற முதல் சுற்றுப்பேச்சில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை அரசாங்கம், முழுமையாக அமுல்படுத்துவதுடன் – தமது கிழக்கு மாகாணத் தளபதிகளின் கிளிநொச்சிக்கான போக்குவரத்து வசதியை முறையாக செய்தாலே இரண்டாவது சுற்றுப்பேச்சில் தம்மால் கலந்து கொள்ள முடியும் என விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக அறிவித்து விட்டநிலையில், அரசாங்கமோ ஒவ்வொரு அறிக்கையையும் குளறுபடியாக வெளியிட்டு வருகிறது.

ஜெனிவா பேச்சில் துணை இராணுவ ஆயுதக்குழுவினது ஆயுதங்களை களைவதாக உறுதியளித்த அரசதரப்பு பிரதிநிதிகள்– நாடு திரும்பியதும் வெவ்வேறு விதமான அறிக்கைகளை வெளியிட்டனர். இதிலும் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஒரு படி மேலே சென்று துணை இராணுவக்குழுவினர் அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இயங்கும் இடங்களை விடுதலைப்புலிகள் தெரிவித்தால் தாம் அவர்களை பிடிப்பது இயலுமாக இருக்குமென்றார்.


இந்த நிலையிலேயே மட்டக்களப்பு நகரின் கோவிந்தன் வீதியில் விடுதலைப்புலிகளால் துணை இராணுவக்குழுவினர் என தெரிவிக்கப்படுகின்ற கருணா குழுவினர் தமது அரசியல் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளதுடன், ஆயுதங்களுடன் சுதந்திரமாக நடமாடித்திரிகின்றனர். அது மட்டுமின்றி, வர்த்தகர்களை அச்சுறுத்துவது, அவர்களிடமிருந்து வலுக்கட்டாயமாக பணத்தை பறிமுதல் செய்வது, படுகொலைகளைப் புரிவது உட்பட பல இன்னோரன்ன செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இது பொலிஸ் மா அதிபருக்கு தெரியாத விடயமல்ல.

இறுதியாகஅவுஸ்ரேலியதொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தியாளர் மட்டக்களப்பிலுள்ள இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணாகுழுவினரின் பயிற்சி முகாமென்று கூறப்படும் ஒரு இடத்துக்குச் சென்று கருணாகுழுவினரின் அரசியல் பிரிவுத் தலைவர் என்று கூறப்படும் பிரதீப் உட்பட்ட குழுவினரை சந் தித்ததை ஆதாரங்களுடன் வெளி யிட்டார். இதனைவிட, அங்கு வலுக்கட்டாயமாக பிடிக்கப்பட்டு பயிற்சியில் ஈடுபடுத்தப்படுபவர்களையும் அவர் கண்டுள்ளார்.

இவ்வாறு துணை இராணுவக் குழுக்களுக்கு அரசாங்கம் ஆதரவு தெரிவித்துவரும் நிலையில், யுத்தமொன்று ஏற்பட்டால் கருணா குழுவினரின் துணையுடன் புலிகளை தம்மால் இலகுவாக தோற்கடிக்க முடியும் என பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். அவ்வாறெனில், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் சமாதானப் பேச்சில் எவ்வாறு முழுமனதோடு ஈடுபட்டு புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையை தீர்க்கமுடியுமென நம்பலாம்?

இந்த நிலையில் தமது கிழக்கு மாகாணத்தளபதிகளுடன் கலந்துரையாடி அங்குள்ள நிலைமைகளை அறிந்து ஜெனிவாவில் நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றுப்பேச்சில் கலந்து கொள்வதற்கு அவர்களுக்கு போக்குவரத்து வசதியை வழங்குமாறு விடுதலைப்புலிகள் நோர்வே ஊடாக விடுத்த வேண்டுகோளை மறுத்த அரசாங்கம்– கப்பல் மூலமும், தனியார் ஹெலி மூலமும் அவர்களுக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்பட வுள்ளதாக அறி வித்து வருகிறது.

ஆனால், விடுதலைப்புலி கள் பயணிப்பா ளர்களா என்பது கேள்விக்குரிய விடயமாகும். ஏனெனில், இலங்கை அரசாங்கத்தின் உறுதிமொழியை எவ்வாறு நம்புவதென்பதே விடுதலைப்புலிகள் முன்னுள்ள சந்தேகமாக இருக்கலாம். ஏனெனில் அரசு உறுதிமொழிகளை வழங்குவதும், அவற்றை காற்றில் பறக்க விடுவதையும் தனது வழக்கமாகக் கொண்டுள்ளது.



மட்டு.கோவிந்தன் வீதியில் உள்ள கருணாகுழு முகாம்

கிழக்கு மாகாண தளபதிகளுக்கான ஹெலிவசதியை வழங்காத அரசாங்கம் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வை வழங்குமென எதிர்பார்க்க முடியாதென திருகோணமலை மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் புரட்சி கூறியிருப்பதும் இந்த அர்த்தம் பொதிந்துள்ளதாகவே இருக்கும்.

இந்தநிலையில், திருகோணமலையில் தமிழ் மக்கள் மீதான திட்டமிட்ட படுகொலை, அதனால் மக்களின் இடப்பெயர்வுகள் என அவல வாழ்வு இடம்பெற்றுக்கொண்டிருக்கையில்– திருகோணமலையில் வன்செயல்கள் இடம்பெற்றதனாலேயே சிங்களவர்கள் சட்டத்தை தமது கையில் எடுத்ததாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் இந்தக் கூற்றுப்படி–திருமலை சிங்களவர்கள் சட்

**கரன்**

டத்தை கையில் எடுப்பது நியாயம் என்றால் – யாழ்ப்பாணத்தில் நடக்கும் நிகழ்வுகளுக்கு தமிழர்கள் சட்டத்தை கையில் எடுத்தால் என்ன நிகழும் என்பதை உணர்ந்துகொள்ளவேண் டும்.

சமாதானத்தை நிலைநிறுத்தி தமிழர்களுக்கு கௌரவமான தீர்வொன்றை வழங்குவதற்கு அரசாங்கமும், தென்னிலங்கையிலுள்ளவர்களும் செயற்படுவதாக தெரியாத நிலையில் – பேச்சுமேசைக்கு சென்று அரைத்த மாவையே திரும்ப திரும்ப அரைக்க விடுதலைப்புலிகள் விரும்பாமல் இருக்கலாம். இதுவே அவர்கள் பேச்சுக்கு செல்வதையும் நிறுத்தியிருக்கலாம்.

ஆகவே, சமாதானத்தை இலங்கைத்தீவில் நிலைநிறுத்த வேண்டுமெனில் அரசாங்கம் உருப்படியான செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இல்லையெனில் இலங்கைத்தீவு பேரழிவுக்குட்படுவதை எவரும் தடுக்கமுடியாது போகும்.

# புலனாய்வுப் பார்வை

இரகசிய புலனாய்வுச் சேவை தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உபாய மார்க்கங்களும் நிலவுகின் றன. சம்பந்தப்பட்டவருக்கு பெருமளவு பணம் கொடுக்கப்பட்டு தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

உதாரணமாக ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் குறித்த தகவலை வழங்கியவருக்குக் கோடிக்கணக்கான பணத்தை அமெரிக்கப்படை வழங்கியது. அல்கொய்டா தலைவர் குறித்த தகவலை வழங்குபவருக்கும் அது போன்ற பெருமளவு பணத்தை வழங்க அமெரிக்கா தயாராக வுள்ளது.

தமது கருத்தைத் தேவையான நபருக்குத் தெளிவாக்கி தமது அமைப்புச் செயற்படுகின்ற நல்ல நோக்கம் என்ன என்பதனை தெளிவுபடுத்தி அந்த நல்ல நோக்கத்துக்காக உதவி வழங்குவதற்காக குறித்த நபரை நியமிக்கிறார்கள்.

அடுத்து தமது போட்டியாளரது புலனாய்வுச் சேவை குறித்து தகவல்களைத் திரட்டும் போது அந்த நபரின் பலவீனம் என்ன என்பது குறித்து கவனத்திலெடுக்கப்படும். அப்பொழுது அந்த பலவீனத்தின் புகைப் படங்கள் அல்லது சாட்சியங்கள் சேகரிக்கப்படும். பின்பு அவரை அழைத்து எம்மிடமுள்ள விபரங்களை பகிரங்கப் படுத்தப்போவதாக எச்சரிக்கை விடுப்பார்கள்.

அந்த எச்சரிக்கை மூலம் தேவையான மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்ளப்படும். தேவையெனில் இவ்வாறான நபருக்கு பணமும் வழங்கப்படும். இவை அனைத்தும் இரகசியமாக நிகழும். தகவல்கள் பரிமாறப்படும் இதன் மூலம் குறித்த நபரின் நான் எனும் ஆணவம் (EGO) கடந்து விடுவதனால் புகழுக்கும், செல்வாக்குக்கும் விருப்பம் உண்டாகும். அதன்படி தகவல்கள் வழங்கப்படுமெனில், அவருக்கு வேண்டிய புகழும் மற்றும் அதிகாரமும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்தவிதமாக உயர் மட்டத்திலுள்ளவர்களே அகப்பட்டுக் கொள்வர். பேராசிரியர்கள், அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள் போன்றவர்கள் இதில் சிக்குவார்கள். இலங்கையின் புலனாய்வுச் சேவை மிகவும் பலவீனமான மட்டத்திலேயே உள்ளது. தேசிய மட்டத்தில் தகவல்களை சேகரிப்பது போதுமானதென்ற கருத்து அரச தரப்பிடம் நிலவுகிறது.

ஆனால், வலய மற்றும் சர்வதேச மட்டத்தில் இந்த புலனாய்வுச் சேவைகளை மேற்கொள்ள முடியும். தூதரக சேவைகள் எந்தப் போர்வையில் அநேகமான நாடுகள் இரகசிய புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. தூதரகங்களில் பதவிகளை வகித்துக் கொண்டு தகவல் களை தமக்குத் தேவையான அமைப்புகளுக்கு அல்லது தாய்நாட்டுக்கு அனுப்புகின்றனர். தகவல்கள் வெளியே போகும் எதிர் புலனாய்வு சேவைகளும் அதிகநாடுகளில் உள்ளன.

தகவல்களை வெளியே அனுப்புவது தொடர்பாக ஊடகங்கள் மீது குற்றச்சாட்டு எழுந் தாலும் உண்மையாக வேறொன்றே நிகழ்கிறது. இது போன்ற இரகசிய புலனாய்வாளர்கள் கணப் பொழுதில் குறித்த தகவல்களை உரிய இடத்துக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.



புலனாய்வாளர்கள் செய்கின்ற பணிகளுக்கமைய அவை பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. கூரியர், இரட்டைமுகவர், பகுப்பாய்வாளர், கொலைகாரன் என பல வகைப்படும்.

முன்சொல்லப்பட்ட விபரங்களைப் பெற்றுக் கொண்டு அவற்றைப் பகுப்பாய்வு செய்வது, அறிக்கை தயாரிப்பது பகுப்பாய்வாளரின் பணியாகும்.

இதற்காக அவர் புதிய தொழில்நுட்பங்களைப் பயன் படுத்திக் கொள்வார். அரசியல் தீர்மானங்கள் எடுக்கும்போது இவரது அறிக்கையும் கவனத்தில் கொள்ளப்படும்.

தங்கள் நோக்கத்துக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்பவரை கொலை செய்வது, கொலைஞரின் பணியாகும். அதேபோல் அங்கு இரகசிய புலனாய்வு சேவைகளுக்கு துரோகமிழைத்தால் அவரைக் கொல்லும் பணியும் இவருடையதே.

இரகசிய புலனாய்வு சேவை என்பது இரகசியமானதாகும். ஒவ்வொரு நபர்களை கண்டறியும் வேறு சிலரும் இருப்பார்கள்.

**இரகசிய புலனாய்வுச் சேவைகளின் ஆரம்பம் என்ற தலைப்பில் சுசந்த செனிவிரட்ண என்ற முன்னாள் இராணுவ அதிகாரி லங்காதீப நாளிதழில் எழுதிய கட்டுரை.**




சிலீப்பர் எனும் இரகசிய புலனாய்வு அமைப்பு தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மிகவும் முன்கூட்டியே ஒரு இரகசிய புலனாய்வாளனை அறிமுகப்படுத்தியது. அவனது பெயர், ஊர் என்பன கூட முழுவதுமாக மாற்றப்பட்டன.

தன்னுடைய பணி என்ன என்பது தெரியாமல், சந்தேகம் ஏற்படாத விதமாக அவன் செயலில் ஈடுபட்டான். அவன் வர்த்தகம் செய்திருக்க வேண்டும். தனக்கு செய்தி கிடைக்கும் வரை காத்திருந்ததுடன் செயற்படாமலிருந்தான். அவன் செயற்பட்டது இரகசிய புலனாய்வு செய்தி கிடைத்த பின்பே. இது போன்ற சிலீப்பர் நபர்கள் தற்போதும் கொழும்பில் இருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ கொலையில் சிலீப்பர் ஒருவரே பயன்படுத்தப்பட்டார். பாபு என்று பெயரில் உலகின் முன்னால் சென்ற ஒரு வியாபாரி முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா அடிக்கடி செல்லும் சுசரித்த சிறுவியாபார நிலையத்தில் ஒருவர்த்தக நிலையத்தை நடத்தி வந்தார். ஆனால், நேரடியாக தற்கொலைக் குண்டுதாரிகள் ஆடைத் தொகுதியுடனேயே அவர் செயற்பட்டார். இந்த ஆடைத் தொகுதியை அவ ருக்கு அறிமுகமில்லாத ஒருவரே வழங்கினார்.

இதனால் கொலையுடன் தொடர்புடைய நபர் பற்றிய விபரமெதுவும் வெளியாகவில்லை.

பொருளாதார மத்திய நிலையத்தை இலக்குவைத்து இரகசிய புலனாய்வுச் சேவை நடவடிக்கையை எதிர்காலத்தில் எதிர் பார்க்கலாம்.

அதன்போது பொருளாதார செயற்பாட்டை குற்றுயிராக்குவதற்கு முடியும். பல்வித தொழில் நுட்ப உபாயங்களைப் பயன் படுத்தி தகவல்களை சேகரிப்பது நிகழும். இதேபோன்று எதிர் புலனாய்வுப் பிரிவின் மூலம் கணினி வைரஸ் மூலமாக தகவல்களை அழிக்கும் நடவடிக்கைகள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

**தமிழில்**
**நாடோடி**

தகவல் தேடும் தொழில் நுட்பம் இலங்கையர்களுக்கு புரியாது. ஆனால், 1861 இல்ஆரம்பமாகிய அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின்போது முதற்தடவையாக எலக்ரோனிக் ஊடகம் இரகசிய புலனாய்வுச் சேவைக்கு பயன் படுத்தப்பட்டுள்ளது.

(அடுத்த வாரம் வரும்)

# ஒரு தேசத்துரோகியின் மரணம்

இரண்டாம் உலக மகாபோரின் போது நாசிப் படைகளுக்கு தனது நேசமான பிரான்ஸை அடைவு வைத்த மிகப்பெரிய தனது வீரனுக்கு முடிவில் பிரெஞ்சு உயர் நீதிமன்றம் மரணதண்டனையைத் தீர்ப்பாக வழங்கியது.




"மறேஷால்" பெத்தன் என்னும் பெயர் இன்றும் பிரெஞ்சு மக்களினதும் பிரெஞ்சுத் தேசத்தினதும் இழுக்குச் சின்னமாகக் கருதப்படுகிறது. உலகப்புகழ் பெற்ற பிரெஞ்சு இராணுவக் கல்லூரியான ''சன்சீர்'' இன் சாதாரண இராணுவ வீரர் பிலிப்பெத்தன் 1914ஆம் ஆண்டில் வெறும் கேணல் பதவியில் மட்டுமே இருந்தார்.

ஆனால், முதலாவது போரின் போது ஜேர்மனியப் படைகள் பிரான்சின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வேர்தன் மலைப்பிரதேசத்தின் பாதுகாப்பு முன் அரண்மனை தொடர்ந்து ஐந்து மாதங்களாக தீவிர தாக்குதல்களுக்கு உட்படுத்தியும் அவர்களால் அதைக் காப்பாற்ற முடியாத போதிலும் பிரெஞ்சுப் படைகளில் மன உறுதி உடைந்த நிலையில் இந்தப் பகுதியின் பாதுகாப்பைப்பலப்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட்டு பிரிகேடியர் ஜெனரலாக நியமிக்கப்பட்டதன் பின்னரே பிலிப் பெத்தனின் இராணுவத் திறமைகள் வெளிப்படுகின்றன.

இந்தக் காலத்தில் இராணுவ மட்டத்தில் நிலவிய ஒழுங்குச் சீர்குலைவுகளை நிவர்த்தி செய்து புதிய நம்பிக்கையை தனது வீரர்களுக்கு ஊட்டிப் பல போர் முனைகளில் வெற்றியீட்டி பிரெஞ்சு இராணுவத்தை வெற்றிப் பாதையில் நடைபோட வைத்தார் பிலிப்பெத்தன்.

1917இல் ஜெனரல் பெத்தன் தனது இராணுவச்சாதனைகளைத் தொடர்ந்து



பிரெஞ்சு இராணுவத்தின் அனைத்துப் பிரிவுக்கான கொமாண்டராக நியமனம் பெற்றார்.

இராணுவத்துக்குள் ஏற்பட்ட உள் எதிர்ப்பைச் சமாளிக்க 554 படையினருக்கு மரண தண்டனையை வழங்கிய கொமாண்டர் பெத்தன் இராணுவத்தைப் புனரமைத்து, புதிய வியூகங்களை உருவாக்கி 1918 நவம்பரில் பிரெஞ்சு இராணுவத்தின் ஜேர்மனியின் மீதான இறுதி வெற்றிக்கு வழி வகுக்கிறார்.

வெற்றியைத் தொடர்ந்து பிலிப் பெத்தனுக்கு அதிஉயர் இராணுவத் தேசிய விருதான "மறோஷால்" பட்டம் வழங்கி பிரான்ஸ் அவரைக் கௌரவித்தது.

1925இல் மொறொக்கோ கொலனிக்குக் கலவரத்தை அடக்கப் பிரத்தியேகமாக அனுப்பப்படும் மறேஷால் பெத்தன் 1934இல் பிரான்ஸின் போருக்கான அமைச்சராகவும் நியமிக்கப்படுகிறார். 1936இல் இவர் ஸ்பெயினுக்கான தூதுவராலய உயர்ஸ்தானிகராக நியமனம் பெறுகிறார்.

1940ஆம் ஆண்டின் வசந்த காலம் பிரான்சுக்கு வசந்தமாகப் பிறக்கவில்லை. நாசிப்படைகள் பிரெஞ்சு நிலப்பரப்பின் எல்லைக்குள் நுழைந்து ஆக்கிரமிப்புச் செய்தது. லட்சக்கணக்கில் மக்கள் அகதிகளாக்கி இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் பிரஞ்சுப் படைகள் நாசிகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தார்கள். தேசியம் சிதைந்து மக்கள் அகதிகளாகச் சிதறியோடிக் கொண்டிருந்தவேளையில் அரசின் முக்கிய பதவிக்கு அழைக்கப்படும் மறோசால் பெத்தன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மக்கள் தன் மீது கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையைப் பயன்படுத்தி நாசிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்திடுகிறார்.

நாசிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சின் வட பகுதியை நாசிகளிடம் விட்டுவிட்டு, அதுவரை காலமும் அமுலிலிருந்த அரசியற் சாசனத்தையும் குடியரசையும் குப்பையில் போட்டுவிட்டு தெற்கில் தன்னைத் தலைமைப்படுத்திய ஒரு சர்வாதிகார அரசை நிறுவும் பெத்தன் நாசிகளுடன் கூட்டு ஒப்பந்தங்களையும் ஏற்படுத்திக் கொள்கிறார்.

இந்த நிலைமைக்கு எதிராக நாசிகளுடன் போரைத் தொடர்ந்து மேற்கொண்டு நாட்டை முழுமையாக விடுவிக்க வேண்டும் என்னும் அழைப்பை ஜெனரல் துகோல் லண்டனில் இருந்து விடுத்து நாட்டுப்பற்றாளர்களைத் தன்னுடன் இணையுமாறு அழைப்பு விடுத்தார். இவருக்கெதிராக மறோசால் பெத்தன் மரண தண்டனை வழங்கப்பட்டதாக அறிவிக்கின்றார்.

பெத்தனது துரோகத்தன்மை சிறிது சிறிதாக மக்கள் மத்தியில் புலப்பட1, சார்ல் தகோல்ன் தலைமை மக்களால் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரின் தலைமையில் நேச நாடுகளின் உதவியுடன் இறுதியில் நாசிப்படைகளிலிருந்து தேசம் விடுவிக்கப்பட்டது. ஜேர்மனிக்குத் தப்பியோடிய மறோகால் பெத்தன், (VIII ஆம் பக்கம் பார்க்க)

**(வரலாற்றுச் சம்பவங்கள் எவையுமே ஒரு முறை வந்து ஓய்ந்து விடுவதில்லை. அது மீண்டும் மீண்டும் தன்னைக் காலமேடையில் அரங்கேற்றிய வண்ணமே இருக்கிறது. ஒரே நேரத்தில் ஒரு இடத்தில் நடந்தேறிய சம்பவம் அதே வடிவத்தில் இன்னொரு இடத்தில் இன்னொரு கால கட்டத்தில் நடந்தேறியது என்பது கண் முன்னாலேயே காணக் கூடியதாக உள்ளது ஆச்சரியமளிக்கக் கூடிய ஒன்றல்ல.)**

# மக்கள் சக்தி - தமிழர் போராட்டத்தின் பலம்

இந்தக்கட்டுரையை எழுத ஆயத்தமான போது மேசையில் தாள்களையும், பேனாவையும் வைத்துவிட்டு மின் விசிறிக்கான அழுத்தியை அழுத்திவிட்டு மேசையை நோக்கி வருவதற்குள் மின்விசிறியின் வேக சுழற்சியால் எழுதுவதற்காக வைத்திருந்த தாள்களும் பேனாவும் கீழே விழுந்தன.

ஆம். போர் மீண்டும் வெடிப்பதற்கு ஒரு கணப்பொழுதில் இடம்பெறும் சம்பவங்கள் காரணியாக அமையக் கூடும். அவ்வாறான சம்பவங்கள் எம் கண்முன்னே நடந்தேறிக்கொண்டிருக்கின்றன. இருப்பினும், போர் ஏன் இன்னும்மூளவில்லை?

சமாதானப் பேச்சுக்கள் தொடங்குமா? சண்டை தொடங்குமா? புலிகள் என்ன செய்கிறார்கள்? போன்ற கருத்துக்கள் மூலை முடுக்கெல்லாம் கேட்கத் தொடங்கிவிட்டன.

ஆனால், இதுவரை எல்லாவற்றுக்கும் பதிலாக மயான அமைதி ஒரு பக்கமாகவும், மரண ஒப்பாரிகள் மறுபக்கமாகவும் கேட்கிறது. இவற்றையெல்லாம் கடந்து ஒரு நம்பிக்கை ஓங்கி நிற்கிறது. இதுயாதெனில், புலிகள் எது செய்தாலும் தமிழரின் நலனின்பால் அக்கறை கொண்டதாகவே இருக்கும்.

புலிகளினுடைய நேரடிப்பதிலடிகள் எதுவும் இடம்பெறாததால் அவர்களின் எதிரிக்குகூட கலக்கம். எங்கே? எப்போது? என்ன நடக்கப் போகிறது என்று மண்டையை வெடிக்க வைக்கும் ஆய்வில் எதிரி. தமிழர்கள் மீதான வன்முறைகளுக்கு தகுந்த பதிலடியை புலிகள் என்றோ வழங்குவார்கள் என்ற கருத்து திடமாக நிலவுகிறது. இப்போது புலி பதுங்குகிறது. புலிபாயும் நாள் எப்போது என்பதே இப்போதைய பெறுமதி வாய்ந்த கேள்விகளில் ஒன்று.



கனடா பொங்குதமிழ் நிகழ்வில்

ஏனெனில், புலி களுடைய வெற்றியை ஒட்டுமொத்த தமிழினமும் கொண்டாடுகிறதோ இல்லையோ ஆனால், புலிகளுக்கு ஏற்படும் பின்னடைவு என்பது முழுத்தமிழினத்துக்கும் தோல்வி. ஆகவே, தமிழர்கள் தோல்வியை விரும்பவில்லை.

தமிழர்கள் தோல்வியை விரும்பாத அதேநேரம், விடுதலைப்புலிகள் மிகப்பலம் பொருந்தியவர்களாக திகழ்கிறார்கள். அதேவேளை, தமிழ் தேசிய விடுதலைப்போராட்டம் சர்வதேசமயப் படுத்தப்பட்டதன் விளைவாக சர்வதேசத்தின் ஆழமான பார்வை எம்மீது பதிந்துள்ளது. ஆதலால், ஆயுதப்போராட்ட காலங்களில் நிலவிய நெருக்கடியிலும் பார்க்க மேலதிக நெருக்கடியை தமிழ்தேசிய விடுதலைப்போராட்டம் எதிர்கொண்டு நிற்கிறது.

அரசியல் இராஜதந்திரம் ஒரு புறமாகவும், நிழல் யுத்தம் மறுபுறமாகவும் நகர இவையிரண்டுக்கும் பொதுவாக விடுதலைப் புலிகள் மீதான பொய்ப் பிர சாரம் சர்வதேச ரீதியாக வேகமாகப் பர விவருகிறது.

இவையனைத்துக்கும் தகுந்த பதிலை உரிய நேரத்தில் வழங்க வேண்டியவர்களாக வரையறுக்கப்பட்ட வளங்களோடு புலிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இராணுவம் புரிகின்ற அட்டூழியங்கள்கூட புலிகளே மேற்கொண்டதாக சர்வதேசரீதியில் பொய்பிரசாரங்களை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அண்மையில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த வெள்ளையின பிரஜை பின்வருமாறு கேட் டார்,

தமிழ் மக்களுக்காக போராடுவ தாகக் கூறும் புலிகள் ஏன் தமது மக்களையே கொல்கிறார்கள் என்று. ஒரு வாரகாலத்தில் தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தவர்களும் அப்பாவிகளுமான 16 தமிழ் மக்கள் இராணுவத்தினராலும், ஒட்டுக் குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதே உண்மை. ஆனால், அந்தப்பழிகள் எல்லாம் புலி கள் மீதே சுமத் தப்பட்டுள்ளதுடன் – அது சர்வதேசமயப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான பொய்ப்பிரசாரங்களை முறியடிக்க வேண்டிய அவசிய தேவைப்பாடு புலிகளுக்கு எழுந்துள்ளது.

அத்துடன், போராட்டத்தின் நியாயப்பாடுகளை ஆழமாகவும், தெளிவாகவும், ஆணித்தரமாகவும் தொடர்ச்சியாக சர்வதேசத்துக்கு எடுத்துரைக்க வேண்டிய கட்டாய தேவையுமுள்ளது.

ஏனெனில், எமது போராட்டத்தில் எந்தளவு நியாயம்இருந்தாலும், தமிழர்படைநிலையை ஒரு இறைமை பொருந்திய அரசுக்கு எதிராக போராடும் விடுதலைப் போராளிகளாக சில நாடுகளும், பயங்கரவாதிகளாக சில நாடுகளும் நோக்குகின்றன. ஆதலால், அரசினுடைய கருத்துக்களே சர்வதேசத்திடம் அதிகம் பதிய முற்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் எமது போராட்ட நியாயம் அவர்களுக்கு விளங்கினாலும், கண்டும் காணாது இருப்பது போன்ற நிலையிலோ அல்லது தாமதமாகப் புரியும் நிலையிலோதான் சர்வதேச சமூகம் உள்ளது.

ஆகவே, மயக்கத்திலும், மாயையிலும் வாழும் சர்வதேச சமூகத்தை விழிப்படையவைக்க வேண்டுமாயின் – போர்க்களங்களில் தமிழர்

**சிவஒளி**

படை காட்டிய ஈகத்தை, வீரத்தை அதன் தீரத்தை அரசியல் இராஜதந்திர களத்தில் ஆழமாகவும், தொடர்ச்சியாகவும் காட்டவேண்டும்.

நாய் குரைக்கும் தான். அதே வேளை, வண்டியும் நகர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். பலமுள்ளவர்கள் காக்கின்ற பொறுமை எப்போதும் வெற்றிக்கே வழிகோலும் என்பது உலகவரலாறு எமக்குச் சொல்லும் பாடம்.

1945 ஆம் ஆண்டு ஐப்பானிய நகரங்கள் மீது அனுகுண்டை வீசியதன் மூலம் ஐப்பானை அடிபணிய

(XIIஆம்பக்கம் பார்க்க)

# குடாநாட்டுப் புற்றுநோயாளர்கள் சபிக்கப்பட்ட மனிதர்களா?

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்று நோயாளர் சிகிச்சைப்பிரிவு அடிப்படை வசதிகள் ஏதுமின்றி இயங்கி வருவதால் அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் 26 ஆம் இலக்க விடுதியில் அமைந்துள்ள புற்று நோயாளர் சிகிச்சைப் பிரிவில் அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் தொகை அதிகரித்து வருவதால் சிகிச்சை பெறவருவோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

எனினும் புற்றுநோய் சம்பந்தப்பட் சிகிச்சைகளுக்காக இங்கு வரும் நோயாளர்களின் தொகைக்கு ஏற்றவிதத்தில் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவும் அதற்கான வைத்திய விடுதியும் போதிய வசதிகளுடன் அமைந்திருக்கவில்லை.

இந்த விடுதியில் இடநெருக்கடி ஓர் முக்கிய பிரச்சினையாகவுள்ளது. குறிப்பாக விடுதியில் 150 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்ற போதும் 30 இற்கும் குறைவான நோயாளர்களுக்கான படுக்கைக் கட்டில்களே உள்ளன.


எனவே ஒருவருடைய சுவாசம் மற்றவரில் படுமளவுக்கு இடநெருக்கடி! நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் இந்த நோயாளிகள் இரவில் நடைபாதையில் தான் தங்கள் படுக்கை வசதியை ஏற்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளதுடன் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய நிலையில் உள்ள நோயாளர்கள்கூட அரைகுறை சிகிச்சைகளுடன் வீடுகளுக்கு அனுப்பப்படுகின்ற நிலையும் உள்ளது.

அத்துடன் வைத்திய விடுதிக்குள் உள்ள இடவசதியீனத்தால் மிக ஒடுக்கமான வைத்திய விடுதியில் நோயாளர்களின் சிகிச்சைக் கட்டில்கள் மிக நெருக்கமாக அடுக்கி வைக்கப்பட்டு அவற்றில் வைத்தே நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதனால் நோயாளர்கள் நெருக்கமாகத் தங்கியிருப்பதால் நீர்ப்பீடனம் குறைந்த புற்று நோயாளர்கள் பல தொற்று நோய்களுக்கு ஆளாக வேண்டிய அபாய நிலையும் தோன்றியுள்ளது.

இதைவிட இந்தப் புற்று நோயாளர் சிகிச்சை விடுதிக்கான மலசலகூடம் ஒன்று மட்டுமே உள்ளது. அதுவும் விடுதிக்கு வெளியே புறம்பாக அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மழைகாலங்களிலும் குளிர்காலங்களிலும் இந்த மலசல கூடத்தைப் பயன்படுத்துவதற்கு நோயாளர்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக புற்றுநோயால் கடுமையாகப் பீடிக்கப்பட்ட நோயாளி மலசல கூடத்தைப் பயன்படுத்த வேண்டுமாயின் அவரைத் தள்ளுவண்டியிலோ அல்லது ஏனையவர்களின் உதவியுடனோ நீண்ட தூரத்துக்கு அழைத்து வந்து மலசலகூடத்தைப் பயன்படுத்த வேண்டிய அவல நிலையும் உள்ளது.




ஆண் நோயாளர்களுக்கு மட்டுமன்றி பெண் நோயாளர்களுக்கும் ஒரே ஒரு மலசல கூடம் மட்டுமே உள்ளது. இதனால் தாம் பெருஞ் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக நோயாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

மற்றும் ஆண்கள் விடுதிக்கு ஆண் பராமரிப்பாளர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். இரவு வேளைகளில் ஓர் நோயாளி இறந்தாலோ அல்லது கடும் நோயால் வருந்தினாலோ அவரைத் தூக்கி ஏற்றிச் செல்ல பராமரிப்பாளர்களும் இல்லாத நிலையே உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடுதிக்கு பராமரிப்பாளர் பற்றாக் குறையால் கடும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளோர் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இந்தப் புற்று நோயாளர் விடுதி மிகவும் கவனிக்கப்படாத நிலையில் யன்னல்கள் சுவர்கள் மின்விசிறி கள் போன்றவை தூசிபடிந்த நிலையில் துப்பரவு செய்யப்படாமல் உள்ளன.

இதனால் நோயாளர்கள் அசுத்தமான காற்றையே சுவாசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதுடன் பெரும் சுகாதாரச் சீர்கேட்டையும் நோயாளர்கள் எதிர்நோக்கிவருகின்றனர்.

இவற்றைவிட யாழ்.குடாநாட்டில் புற்று நோயாளர்கள் உரிய சிகிச்சை வசதிகளைப் பெறமுடியாத நிலை இருப்பதால் நோயாளர்களின் உயிரிழப்புக்களும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்று நோய் சிகிச்சைப்பிரிவில் புற்று நோய் சிகிச்சைகளுக்கு பயன்படுத்தக்கூடிய நவீன தொழில் நுட்ப உபகரணங்கள் கருவிகள் எதுவும் இல்லாத நிலையிலேயே இயங்கி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என மூன்று வகையானோர் புற்றுநோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

ஆண்கள் வாய் மற்றும் தொண்டைப் புற்று நோயாலும் பெண்கள் பெரும்பாலும் மார்பகப் புற்றுநோயாலும் சிறுவர்கள் பொதுவாக இரத்தப் புற்றுநோயாலும் பாதிக்கப்பட்டு வருவதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் புற்று நோயை இனங் காண்பதற்கான வசதிகளும் யாழ்.குடா நாட்டில் மிகக் குறைவாகவே உள்ளது.



நோய் அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்கள் அங்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் கதிரியல் ஸ்கானிங் போன்றவை மூலமே கண்டறியப்படுகின்றனர்.

இதனை உறுதிப்படுத்துவதற்காக நோய் கூற்றியலாளர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாமையால் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றனர். ஆனால் எல்லா நோயாளர்களும் கொழும்புக்குச் செல்லக் கூடிய வசதிகள் இல்லாமையாலும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை பெண்களைப் பொதுவாகப் பாதிக்கும் மார்பகப் புற்றுநோயை இனங் காண்பதற்கான இயந்திரம் வடபகுதியில் இல்லாமையால் இந்த நோயை ஆரம்பத்தில் இனங் காண முடியாத நிலை உள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த நோயை ஆரம்பத்தில் இனங் காணமுடியாத நிலையில் நோயின் தன்மை அதிகரித்த நிலையில் நோயை இனங்காண்பதால் ஆபத்தான நிலைக்கு நோயாளர்கள் தள்ளப்படுவர். இதனால் நோயாளர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் புற்று நோயாளர்களுக்கான கதிர்வீச்சு முறையிலான சிகிச்சையைப் பெறுவதற்காக அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியநிலை உள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையின் ஒரு பகுதியான கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதில் புற்றுநோயாளர்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள மேற்படி சிகிச்சை நிலையத்துக்கு செல்வதில் இராணுவ நெருக்கடிகளை எதிர் நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அசாதாரண சூழ்நிலை ஒன்று

**தர்சன்**

ஏற்படுமாயின் இந்த சிகிச்சை நிலையம் இயங்காத நிலை உருவாகலாம். அப்படியானால் யாழில் உள்ள புற்றுநோயாளர்கள் பெருந்துன்பங்களை அனுபவிக்க வேண்டியேற்படுவதுடன் சிகிச்சைகளையும் பெறமுடியாத நிலையே உருவாகும்.

மற்றும் புற்றுநோய்களுக்குரிய விலையுயர்ந்த மருந்துகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் யாழ்.குடாநாட்டில் உள்ளது. எனவே மொத்தத்தில் யாழ்.குடாநாட்டு புற்று நோயாளர்கள் உரிய விடுதி பராமரிப்பு சிகிச்சை வசதிகளின்றிய நிலையில் பெரிதும் அல்லற் படுகின்றனர்.

எனவே யாழ்.குடாநாட்டு புற்றுநோயாளர்களின் இந்த அவல நிலையைக் கருத்தில் கொண்டு அரச அரசசார்பற்ற தொண்டரமைப்புக்களும் சம்பந்தப்பட்டவர்களும் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா?

* *

சிறுகதை

# எழுத்தில் மட்டும் போதாது...

நமது ஈழநாடு 3ஆம் ஆண்டு கலை, இலக்கிய போட்டிகளில் இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை.

அந்த வாகனத்தைக் காணும் போதெல்லாம் மனம் பதறிப்போகும். ஆனால் ஏதோ என்னால் செய்யக்கூடியதைச் செய்து கொண்டு தான் இருக்கிறேன். என் பிள்ளைகளுக்கு ......

எப்படியும் இந்த வருடம் மூன்றாவது மகனைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்க வேண்டும் என்ற நினைவுடன் தான் இருக்கிறேன். ஆனாலும் கட்டப்போற டொனேசனை நினைச்சாத்தான் மனம் "பக்கு பக்கு" என்று அடிக்குது. படிக்க வேண்டும் என்றால் ஏதோ கஷ்டப்பட்டாவது பணத்தைத் திரட்டியே ஆக வேண்டும். "பணம் இருந்தால் தான் படிப்பு" இது சட்டமாக எழுதப்படாத சட்டம். ஏதோ இலவசக் கல்வி என்று சொன்னாலும் பணம் தானே வேண்டும். என்று மனதில் குமுறிய ஆதங்கத்துடன் தான் தருமனின் கடைக்குள் சென்றேன்.

சந்தைக்கு வரும் போது உந்தக் கடையில் கொஞ்ச நேரம் இருந்து அலட்டிப்போட்டு ஒரு ரீயும் சூடாய் குடித்துப் போட்டால் உடம்புக்கு கொஞ்சத் தெம்பு ஏறினது போல இருக்கும்.

ஆரம்பத்தில் சின்னக் கடையாகத்தான் இருந்தது. தருமனின் முகராசியோ என்னமோ?.. தெரியல்ல மூன்று நாலு மாதத்தில் தருமா கடையைத் தெரியாதவர்கள் இருக்க முடியாத அளவுக்கு நல்ல முன்னேற்றம். எல்லாமே அவர் எடுக்கிற முயற்சிதான். முயற்சி திருவினையாக்கும் என்று சும்மாவா நமது முன்னோர் சொன்னாங்க.... தருமனை நினைச்சா ஒரு விதத்தில் மகிழ்ச்சி இதற்கெல்லாம் உழைப்புத்தான் காரணம் என்று எண்ணிக்கொண்டு படிகளைத் தாண்டி உள்ளே நுழைகிறேன். ஒழுங்காக அடுக்கப்பட்ட மேசைகள் கதிரைகளை இழுத்துப் அமர்ந்து கொள்கிறேன்.

இடியப்பம்...றொட்டி...தோச... என்ன சாப்பிடப் போறீங்ககள் என்று கூறிக்கொண்டே விசாரித்த முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். ஒரே ஆச்சரியம்! பிரமிப்பு.... பால் முகம் மாறாத சிறுவன். சிரிக்கும் உதடு...மிருதுவான முகவெட்டு...கள்ளம் கபடமற்ற கண்ணசைவு கறுப்பு நிறக் காற்சட்டையும்...மருண் கலர் சேட்டும் அணிந்த குட்டிப் பயல். "தருமா யார் இந்தக் குட்டிப்பயல்"....குரலை உயர்த்திக் கேட்டேன். இவன் எங்கட தூரத்துச் சொந்தக்காரப் பெடியன். வீட்டில் கஷ்டம் தாய் கொண்டு வந்து விட்டுட்டுப் போனா.... எனக்கும் எடுபிடி வேலைக்கு ஆள் தேவைதானே அதுதான் வைச்சிருக்கிறன்.

தம்பி என்ன பெயர்? ........சிவா

எந்த ஊர் ? .......

மணிப்புரி? ............

என்ன வயது? ........

பதினொரு வயது......

பாடசாலைப் பக்கம் மழைக்காவது ஒதுங்கி இருக்கிறாயா?

என்று நக்கலாகவும் நாசுக்காகவும் கேட்டேன்.

அந்த நக்கல் அவனுக்கு விளங்கி விட்டதா? ........

சற்று முகம் கறுத்துவிட்டது. கோபம்...விரக்தி...வேதனை...ஏக்கம்... எல்லா உணர்வுகளும் அவன் முகத்தில் எத்தனை ஜால வித்தை "பளிச் பளிச்" என மாறி மாறி தோன்றி மறைந்தது. ஆனாலும் அவன் சிறுவன் என்பதாலோ? என்னமோ? தலையைக் குனிந்து கொண்டு சொன்னான். "படித்துக் கொண்டு தான் இருந்தேன்.... இன்னும் படிக்க ஆசை... என்ற ஆசையைப் பார்த்தால்..... எங்கட குடும்பம் நடுத்தெருவில தான் நிக்க வேண்டும்.

எனக்கு அவன் கூறிய விரக்தி மொழிகள் மேலும் அவனோடு கதையை வளர்க்க வேண்டும் போல இருந்தது.

நான் சிறுவனோடு கதைப்பது தருமனுக்குத் தெரியாதா என்ன? ஆனால் அதற்குத் தடை போட மாட்டான். ஏனென்றால் அவனும் நானும் ஒன்றாகத்தான் படித்தோம்... படிக்க வசதியிருந்தும் படிக்காது ஊர் சுற்றித் திரிந்தவன். நான் எப்படியோ கஷ்டப்பட்டுப் படிச்சு....அரசாங்க உத்தியோகம் பார்த்துக் கொண்டு இருக்கின்றேன். எப்பவுமே எனக்கு இரக்க குணம் இருப்பது அவனுக்குத் தெரியும். இது என் கதை வளர உதவியாக இருந்தது.

ஏன் தம்பி உங்களுக்கு அப்பா...வீட்டில வேற யாரும்?... என்று கூறிக் கொண்டு போன என்னை இடைமறித்து.

அப்பா இருக்கிறார்....கூலி வேலை செய்துதான் எங்களை அப்பா படிக்க வைத்துக் கொண்டிருந்தார்....ஒரு மாசத்துக்கு முன்... இந்த கண்ணு மண்ணுத் தெரியாமல் ஓடித்திரியிற வாகனம் தட்டிப் போட்டுது. கண்களில் கண்ணீர் ததும்ப ....குரல் கரகரக்க ...தந்தை பாசம் குரலை தடை போடுவதை உணர்ந்தேன்.

வீட்டில தான் இருக்கிறார். கால் முறிஞ்சு போச்சு...எனக்குக்கீழ மூன்று சகோதரிகள் ... அதுகளென்றாலும் படிக்க வேண்டும்.

அவனது பதில் திருப்திகரமாய் இருந்தாலும் அவன் முகத்தில் இருக்கும் ஏக்கம்... எதையோ சொல்லிக் கொண்டிருந்தது.



"உங்களுக்கு என்ன சாப்பாடு".

"தம்பி எனக்கு ஒரு ரீ தந்தால் போதும்"...

காலை வேலைக்குப் புறப்படுவோர் அவசர அவசரமாக வந்து அங்கும் இங்கும் அமர்ந்து கொள்கிறார்கள். ஒவ்வொருவரையும் அருகே சென்று விசாரித்தபடி அவர்களுக்கு வேண்டிய உணவுகளைப் பரிமாறிக் கொண்டு இருக்கிறான். எனக்கும் ரீ கொண்ட வந்து வைத்துவிட்டுச் சென்றான்.

ஆனாலும் அவனது நடையிலும் முகத்திலும் இனம் புரியாத சோகம் நடமாடுகிறது. ஒரு வேளை நான் கேட்டது ஏதும் அவன் மனதை பாதித்திருக்குமோ...? அவன் என்னைக் கவனிக்கா விட்டாலும் அவனது மனதை பாதித்திருக்குமோ...? அவன் என்னைக் கவனிக்கா விட்டாலும் அவனது ஒவ்வொரு செயலையும் அவதானித்துக் கொண்டிருந்தேன். பாவம் சின்னக் குழந்தைதானே என்ற பச்சாதாபம்...........

கை தடுமாறி நிலத்தில் உணவு சிந்திவிடுகிறது....பதறிப்போனான்

என்னடா செய்கிறாய்? ...விடியக்காலத்தோட.

உருப்படாத மாடு.... வேலைய ஒழுங்காய் பார்.....

தருமனின் அதட்டல்.

சின்னப்பெடியன் தான். போகப் போக எல்லாம் சரியாகப் போகும். என்று சமாளித்தேன். ஆனால் அவர் விடுவதாயில்லை....

உதுகளை இப்ப திருத்த இல்லை என்றால் எப்ப திருத்திறது....

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமோ? ... வார்த்தைகளை அளந்து கொண்டே போனார்.

சரி தருமா! என்று ஒத்தாசை போல் தலையை ஆட்டிக் கொண்டு அமைதியாக்குகின்றேன்.

வந்து போவோர் கணக்குகளைச் சரி பார்த்துக் கொண்டு கடன் சொல்வோரைத் திட்டிக் கொண்டும் இருந்தான் தருமன்.

தருமன் என்ற பெயர் எவ்வளவு சிறந்தது. ஆனால் இப்படி இருக்கிறானே? பெயருக்கேற்ற வாழ்க்கை பலருக்கு அமைவதில்லை. சிலருக்கு அது அதிஸ்டம் தான்.

தேனீர் கோப்பையை கையில் எடுக்கிறேன். நன்றாக ஆறிவிட்டது. எல்லாமே காலம் செல்லச் செல்ல இப்படித்தான்.

சந்தைக்குப் புறப்படும் போது மனிசி சொல்லி விடுவது எல்லாம் ஞாபகத்தில் நிற்காது என்று ஒரு ஒற்றையிலதான் எழுதிக் கொண்டு வந்தன். ஏனென்றால் சந்தை விலையைப் பக்கத்தில் போட்டுக் கணக்குப் பார்க்கிறது சுகம்.

இப்படித்தான் ஒரு நாள்.... அவள் சொன்ன பொருளை மாறி வாங்கிக் கொண்டு போய் வாங்கிக்கட்டினன்... ஐஞ்சு ஆறு பொருள் என்றால் ஞாபகம் இருக்கும். ஒரு கிழமையில் ஒருக்கா சந்தைக்கு வாறாது அப்ப எல்லாத்தையும் ரொக்கமாய் வாங்கிப் போட்டாத்தானே நல்லம். வேலை வெட்டி என்று நான் போய் விட்டால் பின்ன உதுகளை யார் வேண்டுறது? பிறிச்சுள் வைத்து பக்குவமாய் பயன்படுத்திற என்ர மனுசி இருக்கும் வரை குறையில்ல.

மடமட என்று தேநீரைக் குடித்து முடித்துவிட்டு மேசையில் கப்பை வைக்கிறேன். சில்லறை எதுக்கும் கிடக்கும் என்று பையைத் துலாவுகிறேன். ஐந்துரூபாய்க் குத்தியோடு நான் பத்திரப்படுத்திய பொருள் பட்டியலும் வெளியே எட்டிப் பார்க்கிறது.

அதை இனி வெளியதான் எடுக்க வேண்டும். ஒரு தடவை எடுத்துப் பார்ப்போம். என்று வெளியே எடுக்கிறேன்.

ஓரங்கள் மடிப்பு கசங்கி...என் கிறுக்கல் எழுத்துக்கள் முக்கிய பொருட்களையும் உப பொருட்களையும் வேறாகத்தான் பட்டியலிட்டிருந்தேன்.

ஏதும் தவறிப் போனால் திரும்ப வெயிலுக்கால் வாறது கஷ்டம் தானே. மனிசி பொன்னாங்காணிக் கட்டை மறக்காமல் வாங்கிவரச் சொன்னவள். கண்ணுக்குக் குளிர்ச்சி ஞாபக சக்திக்கும் அது நல்ல உணவு. சரி சரி இனி நடையைக் கட்ட வேண்டியது தான். சில்லறைக் காசை எடுத்து கையில் வைத்துக் கொண்டு தம்பி சின்னவன் போட்டு வாரண்டா. என்று கூறிக் கொண்டே தருமனிடம் காசை நீட்டுகிறேன். அவனும் தலையசைத்து விடை தருகிறான்.

படிகளைத் தாண்டி வெளிப்பாதைக்கு வருகின்றேன். கடுகதியில் உலாவும் மனிதருடன் கலக்கிறேன். என் பின்னே வேகமாக வந்த வெள்ளை வேன் உசிப்பிக் கொண்டு போவது தெரிகிறது.

ஓ என்னை அடிக்கடி ஏளனம் செய்யும் வேன் தான் அது. அந்த வெள்ளை வேனை யார் ஓட்டுகிறார்கள் என்றோ? அது யாரை ஏற்றிப் போகின்றது என்பதோ? எனக்குத் தெரியாது. ஆனால் அதன் பின்னே எழுதப்பட்ட சிவப்பு வர்ண எழுத்துக்கள்தான் என்னை அடிக்கடி பயமுறுத்தும் ... எப்படியோ? அது என்னைக் கடந்து சென்றுவிட்டது.

என் எழுத்துச் சுவடியைப் பார்த்து எல்லாப் பொருட்களையும் வாங்கிக் கொண்டு வீடு திரும்புகிறேன். பசுமையாக என் உள்ளத்தில் பதிந்து விட்ட தருமன் கடைச் சிறுவனின் முகம் மீண்டும் மீண்டும் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தது.

ஒரு கிழமை கடந்த பின்பு தான் மீண்டும் சந்தைக்குப் பயணம் வைத்தேன். நேராக தருமன் கடைக்கே சென்று உட்கார்ந்து கொண்டேன். ரீ குடிப்பதைவிட..... அந்தப் பையனோடு அளவளாவ வேண்டும் என்ற விருப்பில் உள்ளே ஏதோ செய்து கொண்டிருந்தவன் வெளியே வந்தான். தூரத்தே என்னைக் கடைக் கண்ணால் பார்த்தான். நெருங்கி வந்தான். "தருமன் அண்ணன் ஏதோ ஜீ.எஸ்.ஐ. சந்திக்கப் போய்விட்டார். இப்ப வருவார்" என்றான்.

அவனது கண்கள் கலங்கி இருந்தன. எனக்கு ஏதோ இனம் புரியாத பாசம்... அருகே அழைத்தது...

என்ன தம்பி சுகமாய் இருக்கிறாயோ? அம்மா வந்து பார்த்தவையோ என்று கேட்டேன்.

அவன் என்னைக் கவனியாது தன் கையைக் கவனித்தான்....

அவனது செயலை உணர்ந்த நான்... என்ன? கையில்.. என்று பிடித்துத் திரும்பிப் பார்த்தேன். இரண்டு சூட்டுக் காயங்கள் என்ன நடந்தது. பதறிக் கொண்டே கேட்டேன்.

அது ஒன்றுமில்லை அண்ணே...கொதி எண்ணபட்டிட்டு என்று மழுப்பினான்.

என் கண்கள் அவன் சொல்வதை நம்ப மறுத்தன. உது அப்படித் தெரியலையே.?

யாருக்கும் சொல்லிப் போடாதேயுங்க....

தருமன்....அண்ணா...தான்..

தளதளத்த குரலில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சொன்னான். பொறு வரட்டுக்கும் தருமன் இப்படியா? தண்டனையைக் கொடுக்கிறது.

வி.ஜெயபால்
(அரியாலை)

அண்ண அண்ண தய்வு செய்து... இதைப்பற்றி தருமன் அண்ணைக்குச் சொல்ல வேண்டாம்..அவர் பிறகு என்னை வேலையால நிப்பாட்டிப் போடுவார். எனக்கு வேறு வேலையும் தெரியாது... என்று கெஞ்சும் குரலில் மன்றாடினான்.

இவனும் ஒரு மனுசனா? உள்ளூரக் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. சிறுவனுக்காக மனதை ஆறுதல் படுத்த வேண்டியதாயிற்று.

அண்ணா ரீ கொண்டுவாரன் குடியுங்க.என்று சொல்லிக் கொண்டு உள்ளே சென்றான். குழந்தைகள் கால் முளைத்த

(VIIIஆம் பக்கம் பார்க்க)




## நிமிருங்கள்

எனக்குத் தெரியும்
அந்த அடைப்புக்குள்
இருண்ட குடில்களுக்குள்
பயங்கரப் பேய்கள்
பதுங்கி இருப்பது.
என்னவர்களோ



இன்னும் நம்பாமல்...
ஒரு நாள்....
பகலிருண்ட வேளையிலே
பேய்கள் வெளியே வந்தன.
கோர முகங்களும்,
இரத்த வெறியுமாய்
என்னை இழுத்து பிய்த்தன
இரத்தம் உறிஞ்சி சிரித்தன.
சாவுவரை என்னை
கொண்டு போய் விட்டன
நான் கத்திய சத்தம்
கேட்கவில்லையாம்
என்னவர்க்கு.

இதோ என்னில்
கண்டல்கள், காயங்கள்
பல் அடையாளங்கள்
இன்னுமுள்ளதே
என்னவர்களோ நம்பாமல்
குடில்களைப் பார்த்து
கோயிலென்று கும்பிட்டு
கைகாட்டிச் சிரித்து
ஏதேதோ படைத்து
மிகுந்த சினேகமாம்...
இப்போதும் பேய்கள்
இருண்ட வேளைகளில்
வந்து போகின்றன
தின்னும் வெறியுடன்
ஒட்டி ஒட்டி நிற்கின்றன
எட்டி எட்டி பார்க்கின்றன
என்றோ ஒரு நாள்
எல்லோரும் காண
பேய்கள் வெளியே வரும்
என்னிடம் வந்ததை விட
குரூரமாய்...
அதனாற் தான்
எச்சரித்து கத்துகிறேன்
என்உடல்மனவலிமைகளையும்
தாங்கிக் கொண்டு
தலை கவிழ்ந்து திரியும்
என்னவர்களை நோக்கி.....

- அவ்வொல்லையான் -

## விடிவை நோக்கி

பெண்ணே!
தங்கக் கலசமே!!
கோபுரத்தின் உச்சியே!!!
ஈழத்தாய்....
உன்வரவுக்காய்
அடிமை சிறகொடிக்க
வழி மேல் விழி வைத்து சந்தியில்....
மௌனித்தால் ஊமை;
பேசினால் வாயாடி;
உம்மை எரிப்பதற்கு
காரணங்கள் குறைவில்லை.
பாலும் சுவையுமாய்
பூவும் மணமுமாய்
தேனும் அமுதுமாய்
இசையும் தமிழுமாய் இருக்கையில்
உங்களுக்கு கண்ணீர் சொத்துக்களாம்.
இது......
சமுதாயம் தந்த பரிசு!
அகப்பை பிடித்த கைகள்
ஆயுதம் ஏந்தும் காலம்
தரைபார்த்து நடந்த பெண்கள்
ரொக்கெட் செலுத்தும் காலம்
இயற்கையும் நீங்களும் ஒன்றே!
கைகளேந்தி....!
இன்னொரு பாரதியைப் பார்த்து
காலத்தை ஓட்டாது
பாரதியை மிஞ்சிய புதுமைப் பெண்ணாய்
இம்மண்ணில் .....!
உன் பாதம் தொடரட்டும்
விடிவை நோக்கி.

- புலோப்பளையூர் -
பே.பாஸ்கரன்

## தவிப்பு



புன்னகை சிந்திடும் உன்முகம் மீதிலே - என்
மன்விழி பாயுதெடி!
உன் கண்களில் தவழும் கருவிழியோ - எனை
கண்டதுமேனோ சிவக்குதெடி!

பெண்மையின் மறுப்பா சிவப்பு - என்
கண்மணி நடிப்பா முறைப்பு!
வெண்மதி போன்ற உன் வனப்பு - எனை
வாட்டுதெடி நின் குறும்பு!

தண்கயத்தின் தாமரையோ - என்
தவிப்புக்களின் முழுவடிவோ!
வெண்கலத்தின் ஒளிவடிவோ - இல்லை நீ
வெங்காயத்தின் நீர்வடிவோ!

சொர்ணமுகி உன்னிமையின் வனப்பு - அதை
கார்முகிலை நிகர்ப்பதுவே சிறப்பு!
மாரிமழை பொழிவதுதா னதன் பொறுப்பு - என்
பருவிழியில் தேம்புவதோ உவர்ப்பு!

- சுப்புதாஸன் -

## கடலாடிய கதை

வியர்வைத் துளிகள் வெள்ளிக்காசுகள்
இரண்டுக்கும் என்ன சம்மந்தம்
கடலிடம் கேட்டேன்.

முன்னையதை எனக்குள் சொரிந்தாய்
சிலிர்த்துப் போய் பின்னயதை
அள்ளித் தந்தேன் நான், சொன்னது கடல்.

என் சயனமஞ்சத்தை ஞாபகித்து
மின்னும் உன் மணல்ப்படுக்கை
அதை உதைத்தவாறு
இந்தப் பூமிப் பந்தையே
ஒரு குட்டித் தீவைப் போலாக்கி
சூழ்ந்து நிற்கும்
உன் வியாபகம்தான் என்னவோ?
மீண்டும் கேட்டேன் கடலை.

பலஇலட்சம்
வியாழவட்டங்களாய்
வான் பொழிந்த
நீராமிர்தம்
உஷ்ணம் ஏறிக்கிடந்த
நிலமடந்தையை
குளிரவைத்து
பரிசுத்தமாக்கி
என்னுள் வந்து
சேர்ந்ததை
அறிவாயோ நீ...
அதுதான் என்
வியாபக
விருத்தாந்தம்
பெருமை கொட்டிற்று கடல்.

காற்றை உதைத்து தினவெடுக்கும்
உன் அலைத்தோள்கள்
தோள்களின் இடுக்குகளில்
என் மனந்திருடியவளின்
கூந்தல் பூக்களை ஞாபகமூட்டும்
நுரை மலர்கள்
இந்த அதிசயம் தான் என்னவோ கடலே!

பஞ்ச பூதங்களில் எனக்கும்
காற்றுக்கும் நிகழும்
மற்போரை எதிர்கொள்ளவே
தினவெடுக்கிறது என் அலைத்தோள்கள்
வெற்றியீட்டிய என் தோள்களுக்கு
இயற்கை சூடும் வீரமாலைதான்
நுரை மலர்கள்
வீரமொழி பகர்ந்தது கடல்.

மார்கழி இருபத்தாறு....
தினவெடுத்தவுன் தோள்களை முறித்தெறிந்து
கடலேறிஉன்னில்பயணித்தானே
கடல் சாத்தான்
ஓடிவந்து ஒளிந்துகொண்டாயே
என் வீட்டுக்குள்
நினைவிருக்கிறதா கடலே....
கடலின் சப்த நாடி ஒடுங்கியது.

அதோ.. உன் விஷஊற்று
உச்சியில் ஊற்றிக் கொண்டதில்
வம்சமழிந்து கிடக்கிறது என் முற்றப்பனை
இதோ... வெறுமையப்பிக் கிடக்கிறது
என் சயனமஞ்சம்
நில மடந்தையின் தோள்களுக்கு
மாலையானது என் மரபணுப்பூக்கள்



எப்படி நேர்ந்ததிக் கொடுமை கடலே
நிசப்தம் கூட மௌனமானது.

பரட்டைபற்றிக் கிடக்கும் என் தலைக்கேசம்
காவியேறிய வாயும் பற்களும்
அழுக்குமூடையாய் சரீரச்சதை
பீழையைப் பிழிவதே
தனது பிழைப்பாய்க் கொண்ட கண்கள்
எங்ஙனம் பெற்றேன் இவ்வலங்கோலத்தை
யாரிதன் காரணம் கடலே...

குரல்நாணின் ஓசை நரம்புகளை
ஒருங்கிசைத்து ஓலமிட்டு
ஒலியெழுப்பி கடல் எனக்களித்த பதில்
சுனாமி... சுனாமி...... சுனாமி

- வேல் லவன் -

## ஈன்றெடுக்கும் காலம்

பெட்டகங்களில் பூட்டிய
சட்டங்களால்
பட்டது போதும்



விட்ட தவறுகள் - இனியும்
விடமாட்டோம்

இதயம் திறந்து பேசினோம்
இரக்கம் வரவில்லை - அவர்களுக்கு

ஈழம் தான் முடிவென்றான் - எம்
இனத்தின் தலைவன்
ஈன்றெடுக்கும் காலம் - மிக
விரைவில் வரும்

மலைகள் அல்ல தமிழன் - அவன்
மௌனமாய் இருப்பதற்கு
உற்றுப்பார் தெரியும் - உறுமும்
எரிமலைகள் என்று
திருமலையில் தீராப்பகை காட்டினாய் - நாம்
தீர்த்தமாடும் காலம் விரைவில் வரும்
வீட்டிற்கா போக விடமாட்டேன் என்றாய்
பொறுத்திருந்துபார் காலம் பதில் சொல்லும்
வீரர்களுக்கு ஊர்வேட்டைத் திருவிழா வரும்
விரல்கள் வில்லின்மேல் விளையாடும் - என்
வீட்டு வாசல் வீரனை வரவேற்க காத்திருக்கும்
வீடு செல்வேன் நான் - அப்போது
விறைத்திருப்பாய் நீ!

- வீரமுரசன்-

## சீருடன் மண் சிருஸ்டிப்போம்!

வசீகரங்கள் வாழ்வை
ஆட்கொண்ட போதினிலும்
வாழ்வுதரும் துணிவும்
தீமிதிக்கும் திடமும்
நெஞ்சினிலே ......
வந்தமர்ந்த பின்னர்
வச்சுரமாய் கொள்கை
விரலோடு சேர்ந்திற்று

வீடெரிக்கும் வேள்வித்தீ
வீணரிங்கு மூட்டுகையில்.....
வேதனையில் வீழ்ந்தழியின்
வரலாறு எமை விரட்டும்.

ஊரறிய உயர்ந்த தீரம்
உலகிலென்றும் நிமிர்ந்துநிற்க,
வேரறாத விருட்சமென
ஆரமுத அன்னை மண்ணை
சீருடனே சிருஸ்டிப்போம்!

- சு.க.சிந்துதாசன் -
பொலிகையூர்

## தாய் என்னும் சூரியன்

சேய் ஏன் விழிமலர்த்தி - இப்
பூவுலகில் காண்பது முதன்
தாயெனும் சூரியனை

மாந்தராய் பிறந்திட
மாதவம் செய்தாலும்
செய்தனை மடிதாங்கி



பாலெனும் அமுதூட்டி
தோளெனும் மலை தூக்கி
வாழ்என வழிகாட்டும் - அந்த
தாயெனும் சூரியனைத்தான் - இச்
சேய் தன் வழிமலர்த்தி பார்க்கிறது

- தென்றல் -

## மனதளவில்...



நெற்கொழுதாசன்
வல்வை.

விடலை வயது - மனதில்
சுடலை ஞானம்
எட்டடுக்கில் யாக்கை - இருந்தென்ன
முட்டறையில் இதயம்
தேகத்தை விட!
ஆசைத் தேக்கத்தின்
நிறையதிகம்
அறிதலை விட!
அறிந்தவர்கள் முறையாய்
புரிந்து கொள்வரோ - என்ற
ஏக்கத்தின் முளையதிகம்!
தனிமையில்
தனிமையை நினைத்து
வெறுப்பதில் சுகமதிகம்!

கிறுக்கனாக - சிலருக்கு
பொறுக்கியாக,
தள்ளிவைக்கப்பட்டும்
எள்ளி நகையிடப்படும்
இளமை அலக்கழிக்கப்படுகிறது.
உங்களால்
எனக்கு நான்
பூட்டிய விலங்குகூட
வலிப்பதில்லை!
வாழ்க்கை எனது தான் - ஆனால்
வாழ்வது உங்கள் முன்னல்லவா?
அதனால்.....
பெயரளவில் இராச்சியம் - நான்
மனதளவில் பூச்சியம்.

## காலம் ஆகி வந்த கதை

# என் கண்ணல்லவா நீ

பாகம் - 2

## குறுநாவல்

## இரவி அருணாசலம்

எழும்பி கைகழுவிவிட்டு நல்ல வாசம் வீசும் நைற்அன்டே சவர்க்காரத்தாலை முகத்தைக் கழுவினன். பூங்காவனத்துக்குப் போகவேணுமெண்டு வேட்டியைக் கட்டி, முழங்கைக்குக் கீழே கையை மடிச்சுவிட்டன். நல்ல வாசம் வீசட்டும் என்று கோயா பவுடரைப் பூசினன். கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் பூங்காவனத்துக்கு அஞ்சுரூபாவுக்கு வாங்கின வெள்ளை சங்கிலியைக் கழுத்திலை கொழுவினன். தலைமயிர் சோளகத்துக்குக் குழம்பாதவாறு கையால் அமத்தி அமத்தி கோஷ்டி கேட்டன். கச்சான் உடைத்துத் தின்றாளோ என்னவோ, முன்னால் கச்சான் உடைச்சுத் தின்னத்தக்க சிறு இடைவெளி விட்டு நந்தினி, கோஷ்டி பார்த்துக்கொண்டிருந்தாள்.

அம்மாள் கோயில் திருவிழாவில் அது ஒன்று நடந்ததுதான். சில பொடியங்கள் சில பெட்டைகளுக்குக் கடலைக்கொட்டைச் சரை வாங்கிக் குடுத்தான்கள். சீக். எவ்வளவு வெட்கங்கெட்ட வேலை. பெட்டைகளுக்கு முன்னால நடந்தாலே எனக்கு கால் தடக்குப்படுது. கொஞ்சமெண்டால் கால் தடக்குப்பட்டு விழுந்தும் போடுவன். பெட்டைகளுக்கு முன்னாலை சைக்கிள் ஓடினாத்தான் எனக்கு இப்பிடி ஒண்டும் வாறதில்லை. அதுவும் நேர ஓடுறனோவும் தெரியாது. பெட்டைகள் நக்கல் அடிச்சுச் சிரிக்குதுகளோ எண்டு முதுகு கூச்சத்திலே நெளியும். இஞ்சை என்னடா எண்டால் இந்த வழியலுகள் கடலைச் சரையே வாங்கிக் குடுக்குதுகள்...

நந்தினிக்கு முன்னாலை எனக்கு அப்பிடி கூச்சம் ஏதும் வந்ததில்லை. தூரத்தில் என்னைக் காணுகிறபோதே எனக்கென்று ஒளித்து வைச்ச சிரிப்பை நந்தினி எடுத்து வைப்பாள். அது வெட்கம் கலந்து மாதிரியும் இருக்கும். அது எனக்கான சிரிப்பு எண்டு தெரியிறது. பெரிய வேலையில்லை. கப்பல் வாழைப்பழம் கனிஞ்சு வெடிச்ச சிரிப்பு அது. கன்னம் றோஸ் நிறத்திலை மின்னும்.

அவளுக்கும் ஆரும் கச்சான் சரை குடுத்திருப்பினமோ? அவளுக்கு முன்னாலை கச்சான் கோதுகளைக் காணேல்லை, இருக்காது. அவள் அப்பிடி வாங்கிற சாதியில்லை. எனக்கென்று மட்டும்தான் இந்த வசீகரச் சிரிப்பு சிரிக்கிறாள். மற்றும்படி வெட்கப்பட்டுத் தலை குனிகிறவள். எண்டாலும் அவளுக்கு முன்னாலை ஏன் கொஞ்ச இடம் இருக்கு? கச்சான் உடைக்கத்தானே? உந்த வழியலுகள் யாரும் கச்சான் வாங்கிக் குடுத்திருப்பினமோ? ஏன் அவள் போய் வாங்கியிருக்கக்கூடாதோ? அல்லது அவளின்ரை பிரெண்ட்ஸ் ஆரும் வாங்கியிருப்பினமோ? அருந்ததி, மாலினி எண்டு அவளின்ரை பிரெண்ட்ஸையும் நம்பேலாது. பொடியங்களுக்கு வழியிற நாய்கள்!

அந்த வருசத்து சோளகம் பனையை உசுப்பின காலங்களில், நான் மிகத் துயரப்படத்தான் செய்தேன். அது நெஞ்சை அரித்துக்கொண்டேயிருக்கிற வெப்பியாரம். நினைத்து நினைத்தாற்போல் அழுகை வருகிறது. சுவரில் தலை சாய்த்து நிற்கிறேன். மேசை முன் இமை மடியாது இருக்கிறேன். பசியில்லை. கோப்பை வந்தாலும், அதில் அமிர்தமேயிருந்தாலும், கோப்பையில் கைவைக்க மனம் வரேல்லை. நெஞ்சு அரிபட்டுக்கொண்டேயிருக்கிறது. எனக்கெண்டு ஏன் இப்பிடி நடக்குது? ஓமெண்டும் இல்லை, இல்லையெண்டும் இல்லை. எல்லாம் அரைகுறையிலை நிக்குது. நானும் கேக்கேல்லை. கேக்கவும் மாட்டன். கேட்டால், "என்ன ரவி, நான் அப்பிடி ஒண்டும் நைக்கேல்லையே!" எண்டு சொன்னால், பிறகு என்னெண்டு அவளின்ரை முகத்திலை முழிக்கிறது, றோட்டிலை என்னெண்டு திரியிறது? சீக். எவ்வளவு பெரிய வெட்கம்!

பனையிலிருந்து ஒரு கண் ஈய்க்கப்பட்ட நொங்கு விழுது. காவோலை விழுது. கொக்காரை, பன்னாடை எல்லாம் விழுது. சோளகம் பனையை உலுப்பி அப்படி விழுத்தப் பண்ணுவது. வெய்யில் மங்கினாப்பிறகு குளிர் வரத்தான் செய்யுது. தட்டிவான் நிரம்ப கடலைக்காரிகள் போகினம். அனேகமாக எல்லா இடங்களிலும் கோயில் திருவிழாக்கள் நடக்கின்றன. தூரத்து லவுட்ஸ்பீக்கரிலையிருந்து பாட்டு விட்டு விட்டுக் கேட்கிறது. அனேகமாக எல்லாரும் விரதம் பிடித்தபடி இருக்கிறார்கள். தோய்ந்து தலை சிலுப்பிக்கொண்டு திரிகிறார்கள். எல்லோருடைய நெற்றியிலும் விபூதிக்குறி தெரியாவிட்டாலும், சந்தனப்பொட்டு மின்னுகிறது. மாம்பழம்; அல்லாட்டில் பலாப்பழத்தோடை அரிசிமாக் குழல்புட்டு சாப்பிடுறம். றோட்டிலை மீன்காரர்களைக் காணேல்லை. ஐஸ்பழக்காரர்களை, தள்ளுவண்டில் காரர்களைக் காணுறம்.

தள்ளுவண்டில்காரர்களை மறித்து அம்மா பருப்பு வாங்கிறா. ஒன்றும் தானும் துயரைத் தணிக்கச் செய்யவில்லை. எனக்கு மனசு நொந்து அறித்து வெப்பியாரப்பட்டுக் கொண்டேயிருந்தது.

நான் அப்போது சுத்தமாக இருக்கத் தொடங்கினேன். ஒழுங்குக்கு வரத் தொடங்கினேன். அடுப்புக் கரியால் பல்லுத் தேய்த்து காலம் போய் உமிக்கரியால் பல்லுத் தேய்த்த காலம் போய், கோபால் பல்பொடியால் பல்லுத்தேய்த்த காலம் போய், நான் பற்பசையும், பிரஷ்சும் வாங்கி பல்லு விளக்கினேன். நைற் அன்டே சவக்காரம் வாங்கி, ஒவ்வொருநாளும் காலமை குளிச்சன். வேர்த்தால் பின்னேரமும் குளிச்சன். கிளினிக் ஷாம்பு போத்தல் வாங்கி கிழமைக்கு இரண்டு தரம் தோய்ஞ்சன். தலையிலை எண்ணெய் படாமல் தற்காத்தன். நான் அறியா நேரம் அம்மா என் தலையிலை எண்ணெய் தப்பினா. ஓடிப்போய் மூன்றுதரம் ஷாம்பு போட்டு முழுகினன். அம்மா "இனிமேல் உனக்கு எண்ணெய் வைக்கமாட்டன்" எண்டா அம்மா அப்பிடிச் சொன்னபோது நிறையக் கவலைப்பட்டேன் தான். ஆனால் அது தான் நல்லது என்றும் யோசித்தேன். தோய்த்துலர்ந்த ஆடையே எப்போதும் தரித்தேன். ஆயினும் மனசு பிளந்து பிளந்து வலித்தது.

சோளகம் தன் கடைசி உசுப்பலையும் உதிர்த்து விட்டுப் போயிற்று. மழை பெய்யத் தொடங்கிற்றுப்பொழுது. நான் நந்தினி வீட்டு ஒழுங்கையால் சைக்கிளில் போனேன். ஒழுங்கைக் கரையின் கிணற்றடியில் அவள் குறுக்குக் கட்டுக்கட்டி தோய்த்துக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டு அவளுக்கு வெட்கமாக இருந்தது. எனக்கும் வெட்கம் வந்தது. நான் ஏது செய்வதென்றறியாமல் சைக்கிளை வேலிக்குள் விடப்பார்த்தேன். சைக்கிளை மடக்கி வெட்டி ஒழுங்கையில் உருண்டேன். உருண்டுதான் போனேன். கைகால் நடுங்கத் தொடங்கிச்சு. கோணல் ;மாணலாக சைக்கிள் ஓடிப்போச்சு. நேரே அம்மாளிடம் போனேன். சாரம் கட்டியிருந்ததிலை வெளி மண்டபத்திலை நிண்டு உயரக் கை கூப்பினேன். அம்மாளே என்று இறைஞ்சி அழப்பார்த்தேன். மலை வேம்பு சிலுசிலுத்துக் கிடந்தது. அது வாடைக்காற்றுக்கு பொழுதுபட்டு இருண்டபிறகு கோயில் வீதியில் நின்ற வெள்ளத்தில் மழை தூறத் தொடங்கியது. சின்னச் சின்னப் பொக்களங்கள் வந்து வெடித்தன. கோயில் லைற் அந்த வெள்ளத்தில் ஆடியது. ஆடி ஆடிக்கொண்டிருந்தது.

பிறகு மழை பெய்து பின்னேரங்கள் எனக்கு வற்றிப் போயிற்று. வெளிக்கிடவே முடியவில்லை. முன் யன்னல் திறந்தால் மழை சீறியது. மழை பெய்வதைப் பார்த்தவாறே இருந்தேன். யன்னலுக்குள்ளால் தூவானம் அடிச்சுது. துமி தெறிச்சுது.

(இன்னும் வரும்)



## கலைந்தது கூடு அலையவல்ல

நமது ஈழநாடு 3ஆம் ஆண்டு கலை, இலக்கிய போட்டிகளில் முதலாம் பரிசு பெற்ற கவிதை.

கலைந்தது கூடு
அலையவல்ல உயரப் பறந்து
உச்சியை எட்டுவதற்கு!

அலகால் இறகு கீறி
உடலில் ஒட்டிய கிருமிகளைப்



பிடித்தழித்து
குஞ்சுகளுக்காய்அடைகாத்தோம்

வல்லூறுகள் எங்கள்
கூட்டைக் குழப்பிப் போட்டது.
நிர்க்கதியில் வாழ்வு
சாவோடு போராடியது

வேருக்கு மட்டுமன்றி
விழுதுகளுக்கும்
எரிநீர் ஊற்றப்பட்டது

கட்டிலில் போட்ட பூக்களெல்லாம்
கல்லறையில்விழுந்துஉடைந்தது
தொட்டிலில் முகிழ்ந்த
மொட்டுக்களெல்லாம்
இடி விழுந்து
கருகியது.

வானத்தில் (ஆட்சியில்)
சூரியனும்– நிலவும்
மாறி மாறி வந்து போயின
சூடும் குளிரும் எமது உடலுக்கு
ஒத்துவராமலேயே போயின
இதை விட வேறொரு கிரகம்?

இப்போதெல்லாம்
எங்கள் வாய்க்குள்
நீதிதேவதையின்கண்ணைக்கட்டிய
கறுப்புத்துணியை அறுத்தெடுத்து
திணிக்கப்படுகின்றன.....
அவள் கண்களில் இருந்து
நீர் வடிய.....

மௌனத்தை
உணர்வுகளால் உடைத்தெறிந்து
வானுயர ஓங்கிக் குரல் கொடுத்தோம்.

பறித்தெடுக்கப்பட்ட
சொந்த நிலம் கேட்டோம்
அங்கே எங்களின்
சுயநிர்ணய உரிமை கேட்டோம்.
அபிலாசைகள் கேட்டோம்.

எதுவுமே எவரும் தருவதாய் இல்லை!
ஆனாலும் உயிரோடு
அலையும் பிணமாய் இருக்க
இனியும் நாம் தயாராய் இல்லை!
அடிமை விலங்குகள் என்பது
குழந்தையின் கையிலுள்ள
பொம்மையைப் போல

மீண்டும் அடைகாத்தோம்
அக்கினிசாட்சியாக
அத்தனையும் பொரித்தது
திசையெட்டும் விரிந்து ஒன்றாய்க் கூவியது
தேச விடுதலைக்காய் தேசிய உரிமைக்காய்
சங்கென முழங்கியது

கலைந்தது கூடு
அலையவல்ல உயரப் பறந்து
உச்சியை எட்டுவதற்கு!

– எம்.பிரிந்தா –

## ஒரு தேசத்துரோகியின்...

பின்னர் சுவிசுக்குச் சென்று தன் விருப்பின் பேரில் மீண்டும் பிரான்சுக்கு வருகை தந்தார்.

பிரான்சின் மிகப்பெரிய வெற்றிகளையீட்டிய மறோஷால் பெத்தன், பிரஞ்சுத் தேசியத்துக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த இந்தப்பெரு வீரர் இறுதியில் வீரியத்தைவிட்டு, சுயநலத்துக்காக, கோழைத்தனமாக தனது தாய் மண்ணின் ஆக்கிரமிப்பாளர்களான நாசிகளுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி நாட்டை நாசப்பாதையில் இட்டுச் சென்றது மட்டுமல்லாது, தேசத்தை விடுவிக்கப் போராடியவர்களுக்கு முட்டுக்கட்டையாக இருந்து தேச ஆக்கிரமிப்பாளர்களுடன் ஒத்துழைத்து தேச விடுதலையைத் தாமதமாக்கினர்.

தேசத்தையும், மக்களையும் இரண்டாகக் கூறுபோட்ட இந்தத் தேசத்துரோகிக்கு, இறுதியில் பிரெஞ்சு உயர் நீதிமன்றம் மரணதண்டனை தீர்ப்பு வழங்கியது.

## எழுத்தில் மட்டும் போதாது...

கவிதைகள் என்று எவ்வளவு அழகா கூறியிருக்கிறார் கவிஞர்... ஆனால்....

தருமன் வேர்த்து விறுவிறுக்க... கடையினுள்ளே வந்தவன் என்னைக் கண்டு விட்டான். ஒரு புன்னகையை என் பக்கம் வீசிவிட்டு கதிரையில் அமர்ந்து கணக்குப் பார்க்கத் தொடங்கினான்.

அந்தக் காலத்தில் கணக்கு வாத்தியிட்ட அதிகம் அடிவாங்கிறது தருமன் தான்... பதினைந்தும்... இருபதும் புள்ளி எடுத்தால் பின்னென்ன? ஆனால் இண்டைக்கு காசுக் கணக்கு மிக நேர்த்தியாய்ப் பார்க்கிறான். இவனே இப்படி என்றால்?

மேசையிலே ரீயை வைத்துவிட்டு தன் கடமையைச் செய்து கொண்டு நின்றான் சிவா. தட்டுக்களை எடுப்பதும் தேநீர் கோப்பைகளைக் கழுவி அடுக்குவதும் வருவோரிடம் சிற்றுண்டிகளை விசாரித்துக் கொடுப்பதுமாக இருந்தான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. என்ன செய்வது இதைப் போல எத்தனை கடைகளில் எடுபிடி வேலை பட்டறை வேலை பொருட்களை விற்கும் வேலை. சுருட்டுச் சுத்துதல் கஞ்சா கடத்துதல்.... கடத்தல்...

நேற்றுக்கூடப் பேப்பரில் படிச்ச அந்தச் சம்பவம் கூட வன்முறையால சிறுவர்கள் தான்... பாதிக்கப்படுகினம்.

எத்தனை சட்டங்கள் ..அமைப்புக்கள் இருந்தும் என்ன பிரியோசனம்.

எல்லோருமே வாய்ப் பேச்சில் வீரர்கள் தான்.

கோபத்தையும் வேதனையையும் அடக்கிக் கொண்டு தருமனின் பணத்தைக் கொடுத்து விட்டு வெளியே வருகின்றேன். அதே வேளை நிற வேன் என்னைக் கடந்து போகிறது. குறுக்கே ஆட்டோ ஒன்று கடந்திருக்க வேண்டும். சற்று மெதுவாகி செல்கிறது. அதன் பின் பக்கத்தில் எழுதியிருந்த சிவப்பு வர்ண வசனத்தை வாசித்துப் பார்க்கிறேன். சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி அவசியம். என்பது தான் அது. எழுத்தில் மட்டும் போதுமா? இதை நடைமுறைப்படுத்துவது யார்? எத்தனை எத்தனை சிறுவர்கள் தருமனின் கடை சிவாவைப் போல் படிக்கும் ஆசையிருந்தும் பாதைமாறி பயணங்களைத் தொடர்ந்தோர். இதற்கெல்லாம் யாரை நொந்து கொள்வது... சிறுவர் உரிமைச் சட்டங்களும் அமைப்புக்களும் எதுவரை செல்லுபடியானவை? பேசா மடந்தைகளாய் செக்கிழுக்கும் மாடுகளாய் வாழ்வதா? சிறுவர் உரிமை...?

பக்கச் சார்பின்றி எல்லோரும் செயற்பட்டால் உணர்ந்து நடந்தாலே போதும். சிவாவைப் பற்றி எப்படியும் தகவல் கொடுக்க வேண்டும் என்று உறுதியுடன் விரைந்து நடக்கிறேன்.

சிறுவர் பாதுகாப்பு அமைப்பைத் தேடி..

எப்படியும் இந்த வருடம் எனது மகனைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்தே ஆக வேண்டும் என்ற உறுதியுடன் வேகமாக நடக்கிறேன்.

# ஈரானைத் தாக்குமா அமெரிக்கா?

ஈரானின் ஜனாதிபதி மகமூட் அகமதினெஜ்ஜாத் (Mahmoud Ahmadinejad) ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். ஈரானிடம் செறிவூட்டப்பட்ட யுரேனியம் (Uranium enrichment) கையிருப்பில் இருப்பதாக மகமூட் அகமதினெஜ்ஜாத் தெகரான் தலைநகரில் அந்தச் சாதனையைக் கொண்டாடும் முகமாக நடந்த அரச நிகழ்ச்சியில் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் ஈரானின் மதத் தலைவர் ஆயத்துல்லா கொமேனியும் கலந்து கொண்டார்.

அதேசமயம் அணு ஆற்றல் தொழில்நுட்பத்தில் ஈடுபட்டிருக்கும் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த ஆயத்தமாகி வருகிறது என்ற செய்தி மேற்கு ஆசியா முழுவதும் பதகளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல் பேச்சால் உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 69 அமெரிக்க டொலருக்கு மேல் விற்பனையாகிறது. இந்த விலையுயர்வு அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தைப் பாதிக்கவே செய்யும். இதனால் ஈரான் நாட்டுடனான மோதல் போக்கு இந்த நாடுகளுக்கு மிக ஒறுப்பாகவே இருக்கப் போகிறது.

அணு ஆற்றல் ஆய்வு தொடர்பாக ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் ஒரு பனிப்போர் நீண்ட காலமாகவே நடந்து வருகிறது.

ஈரான் அணுசக்தி ஆய்வை நிறுத்த வேண்டும். ஈரான் அணுகுண்டுகளை உற்பத்தி செய்வதையோ, உற்பத்தி செய்யும் ஆற்றலைப் பெறுவதையோ, அவற்றை இஸ்ரேல் மீது வீசுவதையோ அமெரிக்கா கண்டிப்பாக அனுமதிக்காது என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈரானை பலமாக எச்சரித்துள்ளார்.

ஈரான் தனது அணுசக்தி ஆய்வை நிறுத்த வேண்டும். நிறுத்தாவிட்டால் ஈரானின் அணு ஆலைகள்மீது தாக்குதல் நடத்தப்படும் எனவும் புஷ் மிரட்டியுள்ளார்.

மேலும், பொருளாதாரத் தடைகளையும் ஈரான் சந்திக்க நேரிடும் எனவும் அமெரிக்கா பயமுறுத்தியுள்ளது.

ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை ஒன்றும் புதிதல்ல. ஈரானுக்கு எதிரான அமெரிக்க நாட்டின் பொருளாதாரத் தடை கடந்த 20 ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஆனால், அந்தப் பொருளாதாரத் தடை ஈரானைப் பலவீனப் படுத்தத் தவறிவிட்டது. ஈரானின் எண்ணெய் உற்பத்தியை மட்டும் அது கொஞ்சம் பாதித்திருக்கிறது.

மேலும் ஈரான், ஈராக், துருக்கி,


ஈரானியத் தயாரிப்பு ஏவுகணை


அமெரிக்க போர் விமானங்கள்

பாகிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய குடியரசுகள் ஆகியவற்றோடு நட்புறவு கொண்டிருப்பது - பொருளாதாரத் தடை அதனைப் பெரிதும் பாதிக்காததற்கு இன்னொரு காரணமாகும்.

புலனாய்வு நிருபர் Seymour Hersh என்பவரால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழில் வெளிவந்தது. அதில் பெயர் குறிப்பிடப்படாத இந்நாள், முன்னாள் அதிகாரிகளை மேற்கோள் காட்டி அமெரிக்கா தெஃரானுக்குத் தெற்கே நதன்ஸ் (Natanz) நகரில் உள்ள ஈரானின் பாதாள அணு ஆற்றல் உற்பத்தி நிலையங்களை அணு ஆயுதங்களைப் பயன்படுத்தி அழிக்கத் திட்டம் இடுவதாக தெரிவித்திருக்கிறார்.

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் தொடுக்கத் திட்டம் தீட்டுவதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருக்கிறது.

ஜனாதிபதி புஷ்ஷின் ஆலோசகர்கள் அவர் இழந்துவிட்ட செல்வாக்கை தூக்கி நிறுத்த ஈரான் நெருக்கடியைப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள். அமெரிக்க காங்கிரஸுக்கான இடைக்காலத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெற இருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக் மீது இராணுவத் தாக்குதல் மேற்கொண்ட அமெரிக்கா - இன்று அதனை முடிவுக்குக் கொண்டுவர முடியாமல் திணறுகிறது. இருக்கவும் முடியாமல், வெளியேறவும் முடியாமல் அமெரிக்கா இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளது.

இவ்வாறு ஈராக்கில் மாட்டுப்பட்டுப் போய் இருக்கும் அமெரிக்கா - ஈரான் மீதும் படையெடுத்தால் அது அமெரிக்காவுக்கு மேலும் இக்கட்டாக முடியாதா எனக் கேட்கத் தோன்றும்.

முதலாவது - ஈரான் மீது அமெரிக்கா தன்னிச்சையாகவோ அல்லது ஒருதலைப் பட்சமாகவோ தாக்குதலை நடத்தாது. பாதுகாப்பு அவையின் ஒப்புதலோடுதான் தாக்குதல் இடம்பெறும்.

இரண்டாவது - அமெரிக்கா மேற்கொள்ளும் தாக்குதல் ஈராக் மீது மேற்கொண்ட தரை - வான் தாக்குதல் போல் இருக்காது. ஈரான் மீது வான் தாக்குதலை மட்டுமே அமெரிக்கா நடத்தும். அது நீண்ட நாட்கள் நீடிக்காது. ஈரான் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலின் எதிரொலி ஈராக்கில் கேட்கக்கூடும்.

செல்வாக்கும், செல்வமும் படைத்த ஈரான் மேற்கு ஆசியாவில் தனது ஷியா ஆதரவு அமைப்புகளைப் பயன்படுத்தி அமெரிக்காவுக்கு நெருக்கடியை கொடுக்கலாம் என்ற அச்சம் பரவி வருகிறது.

கடந்த டிசெம்பர் 15 இல் நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலை அடுத்து ஷியா மதப்பிரிவினரின் கை ஓங்கியுள்ளது. ஆட்சி அதிகாரம் அவர்கள் கைக்கு மாறி இருக்கிறது.

இதனால் ஈரான், ஈராக் மீது கணிசமான செல்வாக்கைச் செலுத்த வழி பிறந்துள்ளது.

ஷியா பிரிவுகளில் ஒன்றான ஈராக்கின் இஸ்லாமிய புரட்சிக்கான உயர் சபை (Supreme Council for Islamic revolution in Iraq (SCIRI) யின் படைப்பிரிவான போடர் படைப்பிரிவு (Badr Corp) வீரர்களுக்கு ஈரானிய புரட்சி காவல்படையே பயிற்சி அளிக்கிறது. ஈராக்கின் இஸ்லாமிய புரட்சிக்கான உயர் சபை ஆட்சியில் உள்ள ஐக்கிய ஈராக் முன்னணியில் முக்கிய பங்காளி என்பது நினைவு கொள்ளத்தக்கது.

ஐக்கிய ஈராக் முன்னணியே நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றிய கட்சி என்பதும் குறிப்பிடத்தக்கது. அதன் தலைவர் அப்துல் அசீஸ் ஹக்கிம் 20 ஆண்டுகள் ஈரானில் அரசியல் அஞ்ஞாதவாசம் செய்தவர். ஈரான் - ஈராக் ஷியா மதப்பிரிவினரோடு மட்டுமல்ல குர்திஷ் தலைவர் ஜலாபி தலபானியோடும் நெருக்கமாக இருக்கிறது.

எனவே ஈரான், ஈராக்கில் செல்வாக்கும், ஆட்சி அதிகாரமும் வகிக்கும் ஷியா மதப்பிரிவினரை அமெரிக்காவுக்கு எதிராக திருப்பிவிடும் வாய்ப்பு இருக்கிறது.

அமெரிக்காவின் எச்சரிக்கைகளையும், பயமுறுத்தல்களையும் ஈரான் அசட்டை செய்வதாகத் தெரியவில்லை.

ஈரான் மீது பென்டகன் திட்டமிடும் தாக்குதல் திட்டங்களை ஈரானின் வெளியுறவுப் பேச்சாளர் - அமெரிக்கா மேற்கொள்ளும் "உளவியல் போர்" என்று வர்ணித்துள்ளார். மேலும்,


ஈரானின் அணுசக்தி மையம்

"அணு ஆற்றல் தொழில் நுட்பத்தை வைத்திருப்பது எமது உரிமையாகும். நாங்கள் எதற்கும் தயாராக இருக்கிறோம். அமெரிக்காவின் பயமுறுத்தலுக்கு நாம் அஞ்சப் போவதில்லை" எனக் கூறியிருக்கிறார்.

'எங்களது அணுசக்தி உற்பத்தி - குண்டுகள் செய்வதற்கல்ல, அதனை அமைதி நோக்குக்காகப் பயன்படுத்தவே ஆய்வு செய்கிறோம். அப்படிச் செய்ய ஈரான் நாட்டுக்கு உரிமை உண்டு' என ஈரான் ஜனாதிபதி மகமூட் அகமதி னெஜ்ஜாத்தும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பாதுகாப்பு சபை யுரேனிய செறிவூட்டல் திட்டத்தை உடன் நிறுத்துமாறு ஈரானைக் கேட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டோலீசா ரைஸ் பாதுகாப்புச் சபை ஈரானைத் தண்டிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

ஈரான் யுரேனிய செறிவூட்டலை வைத்துக் கொண்டு அணு குண்டுகள் செய்யக் கூடிய தொழில் நுட்பத்தை பெற முயல்வதாக மேற்குலக நாடுகள் ஐயப்படுகின்றன.

கடந்த ஜனவரி மாதத்தில் யூரேனிய செறிவூட்டல் திட்டத்தை ஈரான் மீளத் தொடங்கியதை அடுத்து பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஈரானோடு அணு ஆற்றல் உற்பத்தி தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையை நிறுத்திக் கொண்டன.

அமெரிக்கா - ஈரான் இருநாடுகளுக்கும் இடையில் நடக்கும் பனிப்போரில் சீனா மற்றும் ரஷ்யா நாடுகளின் நிலைப்பாடு என்ன? இரண்டு நாடுகளும் ஈரான் மீது புதிதாகப் போடப்படும் பொருளாதாரத் தடைகளைப் பல்வீனப்படுத்த முயற்சி எடுக்கலாம்.

ஆசியாவில் தன்னை ஒரு வல்லாண்மை படைத்த நாடாக மாற்றிக் கொள்ள முனையும் சீனா, இந்த ஈரான் - அமெரிக்க நெருக்கடியால் பய்ன் பெறக்கூடும்.

ரஷ்யா, ஈரானை அனுதாபத்தோடு பார்க்கலாம். ஆனால், முடிவில் அது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய


ஈரான் ஜனாதிபதி

நாடுகள் பக்கம் சாய்ந்து விடும் என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ருசியா இரு சாராருக்கும் இடையில் அனுசரணை வழங்க முன்வரலாம்.

மேற்கு நாடுகளுக்கு ஒரு எதிர்பார்ப்பு இருக்கிறது. அதாவது ஈரான் ஜனாதிபதி மகமூட் அகமதினெஜ்ஜாட்டின் எதிரிகளும், அவரை விமர்ச்சிப்பவர்களும் அவரை பலவீனப்படுத்தலாம். அகமதினெஜ்ஜாட் அவர்களுக்குப் பழைமைவாத முல்லாக்கள் மற்றும் பெருநிதி வணிகர்கள் மத்தியில் எதிர்ப்பு இருக்கிறது.

இந்தப் பின்னணியில் பன்னாட்டு அணு ஆற்றல் நிறுவனத்தின் (Atomic Energy Agency (IAEA) தலைவர் ஈரானுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தினார். அதனைத் தொடர்ந்து அவர் ஒரு அறிக்கையைப் பாதுகாப்பு சபைக்குச் சமர்ப்பிக்க இருக்கிறார்.

'ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதற்கு எந்த சான்றுகளும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அதை வைத்துக் கொண்டு ஈரான் நாட்டுக்கு ஒரு நற்சான்றிதழ் வழங்க நான் தயாராயில்லை' என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவும், ஈரானும் சந்தித்துப் பேச முயற்சி நடைபெறுகிறது என்ற செய்தியும் அடிபடுகிறது. அந்தச் செய்தி அரபு நாடுகளது ஏக்கத்தை அதிகரித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி எகிப்தின் ஆட்சித் தலைவர் முபாரக் அல் அரேபிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் - ஈராக் ஒரு உள்நாட்டுப் போருக்குத் தள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். அரபு நாடுகளில் வாழும் ஷியா மதத்தவர் தாங்கள் வாழும் நாட்டை விட

**நக்கீரன்**
**(கனடா)**


ஈரானுக்கே அதிக விசுவாசமாக இருக்கிறார்கள் எனவும் குற்றம் சாட்டினார்.

மேற்கு ஆசியாவில் ஈரான் குழப்பத்தை உண்டு பண்ணலாம் என்ற அச்சம் எகிப்து, சவுதிஅரேபியா, ஜோர்தான், பஃரேன், குவைத் நாடுகளது புலனாய்வு அதிகாரிகளை கெய்ரோவில் சந்தித்ததை அடுத்தே முபாரக் கருத்துத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

*ஈரான் அணு குண்டுகளை உற்பத்தி செய்யும் ஆணு ஆற்றல் நாடாக உருவாகுவதை அமெரிக்கா அனுமதிக்காது என்பதே அரசியல் நோக்கர்களின் எண்ணமாகும்.*

ஈரான் அணு குண்டு உற்பத்தி செய்வதைத்தடுக்க அமெரிக்கா அணு ஆயுதங்களைப் பயன்படுத்துமா? அல்லது ஈரானை ஒரு அணுசக்தி நாடென்ற படிநிலையைப் (Status) பல நிபந்தனைகளோடு அங்கீகரிக்க முடிவு எடுக்குமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# தொலைக்காட்சியும் நம்மவர்களும்




மாற்றமடைந்துவரும் காலத்தோடு எமது வாழ்க்கையில் தவிர்க்க இயலாத அளவுக்கு பங்கேற்கின்ற சில விடயங்கள் உள்ளன. சரியோ, தவறோ தேவையோ, தேவையில்லையோ சிலவற்றை நாம் தேடிவைத்திருக்கிறோம். அல்லது தேடிப் போகிறோம். இந்த மாதிரி விடயங்கள் எம்மிடத்தில் பெரும்பாலும் நாலு பேரைப் பார்த்துப் பின்பற்றப்படுகின்ற விடயங்களாகத்தான் இருக்கின்றன.

தொலைக்காட்சியும் அப்படியான ஒன்றாகத்தான் இருக்கிறது. தொலைக்காட்சி பார்ப்பது தவறானது என்று எடுத்த எடுப்பில் கேட்டுக் கொண்டு சண்டைக்கு வந்து விடாதீர்கள். எந்த ஒரு காரியமும் அதை நாம் செய்கின்ற நோக்கத்தையும், செய்கின்ற வழத்தையும் வைத்துத்தான் சரி அல்லது தவறு என வகையீடு செய்யப்பட நேர்கிறது.

இன்று நம்மில் பலர் வயதானோர், பெரியவர்கள், இளைஞர்கள், மாணவர்கள், குழந்தைகள் எல்லோருமே தொலைக்காட்சியில் வருகிற தொடர்களையோ, திரைப்படங்களையோ தனிப்பட்ட நிகழ்ச்சிகளையோ, திரைப்படங்களையோ பார்க்கிறவர்களாக இருக்கிறோம். பலவேலைகளுக்கு மத்தியில் கிடைக்கிற ஓய்வை மகிழ்ச்சியாகக் கழிக்க விரும்பி நாம் தொலைக்காட்சி பார்த்தால் அதில் பாதகம் ஏதும் விளையப் போவதில்லை.


ஆனால், நம்மில் பெரும்பாலானோர் அப்படியில்லை. பொழுது போக்குக்காகத் தொலைக்காட்சி பார்த்தல் என்ற நிலை மாறி தொலைக்காட்சி பார்ப்பதற்காகப் பொழுதுகளை ஒதுக்கிக் கொள்ளுதல் அல்லது காட்சிகள் என்று கருதுவது பாலியல் சார்ந்த காட்சிகளையோ அல்லது வன்முறை சார்ந்த சண்டை, கொலை, கொள்ளைக் காட்சிகளையோ மட்டும் தான்.

ஒரு அப்பாவியான மனைவியை இரக்கமற்ற முறையில் துன்புறுத்துகின்ற உடல் ரீதியாகவோ, மனோரீதியாகவோ வதை புரிகின்ற கணவனையோ அல்லது அத்தகைய துன்புறுத்தலால் வெந்து துடித்துப் போய் "என்னைக் கொன்னுடாதேங்கோ" என்று இறைஞ்சுகின்ற மனைவியையோ காட்சிப்படுத்துவது எமது ரசிகர்களைப் பொறுத்தவரை நல்ல சாட்டுகள்தான். அவர்களது பாஷையில் சோகக் காட்சிகள்தான் இத்தகைய காட்சிகள் பார்ப்பவர்களது உள்ளத்தில் விளைவிக்கும் தாக்கம் குறித்து

**சத்தியபாலன்**

யாருமே அலட்டிக்கொள்வதில்லை. அத்தகைய காட்சிகளைப் பார்க்கும் போது ஏற்படுகின்ற உள்ளப் பரபரப்பு, அதிகரிக்கின்ற இதயத்துடிப்பு எம்மையறியாமல் ஏற்படுகிற "டென்ஷன்" இவை பற்றியெல்லாம் எவரும் கவலை கொள்வதில்லை. ஒரு வகையில் பார்க்கப்போனால் இத்தகைய காட்சிகள்கூட வன்முறை சார்ந்த மீறல்கள் சார்ந்த - எதிர்மறை இயல்புகளைத் தூண்டும் தன்மைகொண்ட காட்சிகள் தான் என யாரும் சிந்திப்பதில்லை.

இது ஒரு புறமிருக்க இன்று அதிகரித்துப் போயிருக்கிற வசதிகளால் பல தொலைக்காட்சி நிலையங்களின் ஒளிபரப்புகளைப் பார்க்கும் வாய்ப்பும் அதிகரித்துப் போயுள்ளது. இது ஒன்றும் மகிழ்ச்சியான நிலையல்ல.



தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கேற்ப எமது கடமைகளை சரி செய்து கொள்ளுதல் என்கிற மாதிரி நாம் எமது நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு விடுகிறோம். இத்தகைய நிலைமைக்கு எம்மை அதிலும் குறிப்பாகப் பெண்களை மாற்றிவிடுகிற வல்லமை அல்லது அதீத சக்தி தொலைக்காட்சியின் தொடர்களுக்கு உண்டு. (தொலைக்காட்சித் தொடர்கள் பற்றியே ஒரு தனிக் கட்டுரை எழுதலாம்)

வயது வித்தியாசமின்றி எல்லோருமாக உட்கார்ந்து கொண்டு தம்மை மறந்து பார்க்கிற இந்தத் தொடர்கள் அப்படியென்ன தீங்கு விளைவித்து விடப்போகின்றன. மோசமான காட்சிகள் ஏதும் தொலைக்காட்சிகளில் வருவதில்லையே என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள்.

எம்மவர்களில் பலர் மோசமான இருபத்து நான்கு மணிநேரமும் திரைப்படம் ஒளிபரப்பப்படும் ஒரு சூழ்நிலை சாதாரணமாக ஒரு சமூகத்தின் சிந்தனை மற்றும் நடைமுறைப் போக்குகளையே மாற்றிவிட முடியும். குறிப்பாக இளைய தலைமுறையினர், மாணவர்கள் இதனால் பெரிதும் தாக்கமுறுகிறார்கள்.

எல்லாவற்றையும் விட ஒரு சோகமான நிலைமை எதுவென்றால் பெருகிவருகின்ற இந்த வசதிகளினூடாக எத்தனையோ பயன்மிக்க அறிவுத் தேடலுக்கு உதவக்கூடிய விசயங்களும் ஒளிபரப்பாகின்றன.

அவற்றால் மிகுந்த பயனும் உண்டு. Eye Channel ஊடாகவும் Discovery ஊடாகவும் அந்தவிதமான பயன்மிக்க காட்சிகளை, நிகழ்ச்சிகளைப் பார்வையிட எத்தனைபேர் தயாராக இருக்கிறோம்?

# டென்மார்க்கில் 5 வாரங்கள்

டென்மார்க்கில் வீதிகளில் போக்குவரத்து நெருக்கடி என்ற வார்த்தைக்கே இடமில்லை. வீதி விபத்துக்களும் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. வீதிகள் மூன்று பிரிவாகக் காணப்படுகின்றன. வாகனங்கள் போவதற்கு சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பன செல்வதற்கு, பாதசாரிகளுக்கு வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்குமாக ஆங்காங்கே சமிக்ஞை விளக்குகள் பொருதப்பட்டுள்ளன. யாரும் சாலை விதிகளை மீறுவதில்லை. வேகக்கட்டுப்பாட்டை அவதானிப்பதற்கு வீடியோ கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. யாராவது ஓவர் ஸ்பீடில் போனால் அடுத்த நாள் சாரதியின் புகைப்படம், வாகன இலக்கம் என்பவற்றுடன் தண்டப்பணச்சீட்டு வீட்டுக்கு வரும். மூன்று தடவை தண்டப்பணம் கட்டினால் லைசென்ஸ் பறிமுதலாகும்.


டென்மார்க்கிலிருந்து நோர்வேக்கு பஸ்ஸில் போகலாம். எட்டு மணித்தியால பிரயாணம். கட்டணம் 440 குரோன் - இரு வழிப்பயணத்துக்கு. கிட்டத்தட்ட 6600 இலங்கை ரூபாய். சுவீடனுக்கு புகையிரதத்தில் போகலாம். இரு வழிப்பயணக் கட்டணம் 153 குரோன். கிட்டத்தட்ட 2500 ரூபாய். ஒரு மணித்தியால பிரயாணம்.

ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் பல மியூசியங்கள் உள்ளன. டென்மார்க்கிலும் 60 மியூசியங்கள் உள்ளன. கோபன் கோகளிலுள்ள டென்மார்க் தேசிய அருங்காட்சியகத்தில் (Denmark National Museum) ethnognaphic museum என்று ஒரு பிரிவுள்ளது. இங்கு பல்வேறு நாடுகளின் கலைப் படைப்புகள் உள்ளன.


இதில் இந்தியாவுக்கெனவும் ஒரு அறை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய அறையைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்தோம். இந்திய அறையினுள் நடேசர், துர்க்கை, அனந்த சயனத்தில் கிருஷ்ணர் போன்ற சிற்பங்கள் காணப்பட்டன. முன்பக்கமும், பின்பக்கமும் பூண் போடப்பட்ட வலம் புரிச்சங்கு ஒன்று (கிருஷ்ணரின் கையில் உள்ளது போன்றது) கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தது. யாழ். போன்ற இசைக்கருவியொன்றும் காணப்பட்டது. ஆனால், அது யாழ். அல்ல. ஸ்வரமண்டலி என சங்கீத விற்பன்னர்கள் சிலர் கூறினர். இவற்றை விட இன்னொரு இசைக்கருவியும் காணப்பட்டது. யாழ்ப்பாணம் வந்த பின்னர் எனக்குத் தெரிந்த சங்கீத வித்துவான்கள் சிலரிடம் படத்தைக் காட்டி இது என்ன வாத்தியக் கருவி என்று கேட்டேன். ஒருவருக்கும் அந்த வாத்தியக்கருவியைப் பற்றித் தெரியவில்லை.


டென்மார்க் தேசிய அருங்காட்சியகத்திலுள்ள அனந்த சயனத்திலுள்ள கிருஸ்ணர் சிலை.

கண்ணாடிப் பெட்டியொன்றினுள் இரு உடுக்கைகள் காணப்பட்டன. கிட்டப் போய் பார்த்தேன். அவை இந்தோனேஷியாவிலிருந்து கொண்டு வரப் பட்டவை என எழுதப் பட்டிருந்தது. பன்னிரு கரங்களுடன் புத்தர் சிலையொன்று காணப்பட்டது. பன்னிரு கரங்களுடன் புத்தர் சிலையை நான் வேறெங்கும் காணவில்லை. இந்தப் புத்தர் சிலை தாய்லாந்திலிருந்து கொண்டு வரப்பட்டது. இவற்றை விட எகிப்திய மம்மிகளும் உள்ளன.


உங்களுக்குத் தெரியுமா இதன் பெயர்?

எனக்குள் பலத்த சந்தேகம் எழுந்தது. விலைமதிப்பற்ற பல புராதன இந்தியச் சிற்பங்கள் பல பிரித்தானிய, அமெரிக்க அருங்காட்சியகங்களில் இருப்பது ஏற்கனவே அறிந்த விடயம். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இவை கொண்டு செல்லப்பட்டிருக்கலாம். ஆனால், டென்மார்க் மியூசியத்துக்கு இந்தியச் சிற்பங்கள் எப்படி வந்தன. இவை கடத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.


டென்மார்க் தேசிய அருங்காட்சியகத்திலுள்ள வலம்புரிச் சங்கு

தமிழ்ப் படங்களில் பார்த்த சிலை கடத்தும் காட்சிகள் நினைவுக்கு வந்தன.

எனது சந்தேகத்தை மறுநாள் எமது விரிவுரையாளர் பியரிடம் நேரடியாகவே கேட்டு விட்டேன். நீங்கள் பெரிய ஜனநாயகம் அது இது என்றெல்லாம் பேசுகிறீர்கள். உங்களுடைய அருங்காட்சியகத்திலுள்ள இந்தியச் சிற்பங்கள் எவ்வாறு உங்களுக்குக் கிடைத்தன. அவற்றை நீங்கள் களவாகத்தானே கொண்டு வந்திருக்க வேண்டும். ஏனென்றால் சர்வதேச சட்டப்படி ஒரு நாட்டின் சொத்தை இன்னொரு நாட்டுக்கு எடுத்துச் செல்வது குற்றம். அல்லது இந்திய அரசாங்கம் டென்மார்க்குக்கு இந்தச் சிற்பங்களை அன்பளிப்பாகத் தந்ததா என்று கேட்டேன்.

அதற்கு பியர் சொன்னார். நாங்கள் சட்டபூர்வமற்ற முறையிலோ திருட்டுத்தனமாகவோ எதையும் எடுத்துவரவில்லை. இந்திய அரசாங்கம் அன்பளிப்பாகவும் தரவில்லை. டென்மார்க் தேசிய அருங்காட்சியகத்திலுள்ள இந்திய சிற்பங்கள் யாவும் கிழக்கிந்தியக்கம்பனி இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் கிழக்கிந்தியக் கம்பனியிடமிருந்து பல மில்லியன் கொடுத்து

**ந.பரமேஸ்வரன்**

டென்மார்க் அரசாங்கத்தால் வாங்கப்பட்டவை என்றார்.


ஒருநாட்டின் சரித்திரம், கலாசாரம் என்பன அந்த நாட்டின் அருங்காட்சியகங்களிலேயே தங்கியுள்ளன. இலங்கை நூதனசாலையில் (மியூசியத்தை இலங்கையில் நூதனசாலை என்றே அழைக்கின்றனர்) விக்கிரம ராஜசிங்கனின் முடியும், சிம்மாசனமும் மட்டுமே உள்ளன. சிங்களவர்கள் இதையாவது பாதுகாப்பாக வைத்திருக்கின்றனர். யாழ்ப்பாண மியூசியத்தில் 1877ஆம் ஆண்டு காலமான ஆறுமுக நாவலரின் பல்லக்கும், மிதியடியும் தான் உள்ளன. டென்மார்க் தலைநகர் கோபன் ஹேகனில் இலங்கைத்தமிழ் அகதிகள் இல்லையென்றே கூறலாம். அனைவரும் தலைநகருக்கு வெளியே தான் வசிக்கின்றனர். கரவெட்டியைச் சேர்ந்த நடராசா என்பவரை மட்டுமே கோபன் ஹேகனில் காணக்கூடியதாயிருந்தது.


(அடுத்த வாரமும் வரும்)

# பலதும் பத்தும்

# ஹொலிவூட் பார்வை

## Chicken little





வோல் டிஸ்னியின் சிறுவர் கார்ட்டூன் படங்களின் அடியொற்றியதாக வெளியான முழுக்க முழக்க கொம்பியூட்டர் வரை கலை மூலம் உருவான முப்பரிமாண கார்ட்டூன் சித்திரம் Chicken little. ஓநாயாக நடித்த சேவல் என்ற சிறுவர் கதையை ஒத்ததாக இந்தத் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. நகைச்சுவை, துள்ளிசைப் பாடல்கள் நிறைந்தது. எனினும், கதை என்று நோக்கும்போது ஒரு முழுமையான கதையாக இது தோன்றவில்லை. உள்ளூர் உதைபந்தாட்ட நாயகனாக விளங்கும் கோழிக் குஞ்சு ஒன்று பூமியை வேற்று கிரகவாசிகளிடமிருந்து மீட்க எடுக்கும் சகாசங்களே இந்த கார்ட்டூன் படம். வானம் பூமி மீது விழப்போகின்றது என்று அஞ்சியோடிய கோழிக்குஞ்சின் உறவினரான இந்தக் குஞ்சு - எவ்வாறு வானத்திலிருந்து வரும் ஆபத்தை தடுக்கின்றது. என்பதை படத்தின் கதை எழுத்தாக்கக் குழுவினர் லாவகமாக தெரிவிக்கின்றனர். குடும்பத்தோடு பார்க்கக்கூடிய இந்த திரைப்படம் மார்க் டின்டல் இயக்கியுள்ளார். 81 நிமிடங்கள் நீளமானது இந்தத்திரைப் படம்.

குறிப்பாக இந்தத் திரைப்படத்தைப் பற்றிக் கூற வேண்டுமா யின், சிறு வர்கள் மட்டு மல்ல பெரிய வர்களும் நன்கு பார்க்கக் கூடிய ஒரு பொழுதுபோக்குப் படம். முற்றுமுழுதாக கார்ட்டூனாக எடுக்காமல், நல்ல படங்களையும் செருகியிருந்தால் இந்தப் படத்துக்கு நல்ல வரவேற்புக் கிடைத்திருக்கும் என்பதில் எந்தவிதத்திலும் ஐயமில்லை. சில இடங்களில் நம்பமுடியாத வேற்றுக் கிரகம் மற்றும் காட்சிகள் இருப்பதனால் ஓரளவு கற்பனை செய்யப்பட்ட படம் என்றும் இதனைக் கூறமுடியும்.

## தூக்கம்



ஒரு மனிதன் 75 வயது வரை உயிர் வாழ்ந்தால் 22 ஆயிரம் மணி நேரம் தூங்குகிறான். இது அவனுடைய வாழ்நாளில் 23 வருடங்கள் ஆகும். உலகிலேயே அதிக நாட்கள் தூங்குபவர்கள் ஆபிரிக்கர்கள். குறைவாகத் தூங்குபவர்கள் சீனர்கள்.

## 'குட்டி' ஓடியோ பிளேயர்




ஜப்பான் நாட்டிலுள்ள எலக்ரோனிக்ஸ் பொருட்களுக்கு உலகம் முழுவதும் மதிப்பு அதிகம். இதனால் ஒவ்வொரு ஆண்டும் புதுமையான கண்டு பிடிப்புகளை அறிமுகப்படுத்தி உலகம் முழுவதும் விற்பனை செய்கின்றனர். இதனால் எலக்ரோனிக்ஸ் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் மிகப்பெரிய நாடுகளைக் கூட ஜப்பான் எளிதில் "ஓவர் டேக்" செய்து விடும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. இதனால் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் ஜப்பானுக்கு கிடைக்கிறது.

வருங்காலங்களில் இந்த வருமானத்தின் அளவை மேலும் பன்மடங்கு அதிகரிக்க ஜப்பானிய அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

யப்பான் வருமானம் ஒருபுறம் அதிகரித்துக் கொண்டிருக்க அங்குள்ள விஞ்ஞானிகள் கண்டு பிடிப்பின் எல்லையை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மிகப்பெரிய இயந்திரங்களைக் கையடக்க வடிவில் செய்யும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். இதில் வெற்றியும் பெற்றுள்ளார்கள். தற்போது மிகவும் சிறிய வடிவில் எப்படி இயந்திரங்களை உருவாக்கலாம் என்று யோசித்தார்கள். இந்த எண்ணத்தின் பலனாக உலகின் மிகச் சிறிய ஓடியோ பிளேயர் ஒன்றை உருவாக்கி உள்ளார்கள். 4 செ.மீ.நீளமும் 5 செ.மீ அகலமும் 1 செ.மீ பருமனும் கொண்டது. இந்த புதுமையான ஓடியோ பிளேயர் இது முத்திரை அளவுள்ள நினைவு அட்டை (மெமரிகார்ட்) மூலம் இயங்குகிறது. மேலும் டிஜிற்றல் தொழில் நுட்பமும் புகுத்தப்பட்டுள்ளது. இதை உங்கள் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டே எங்குவேண்டுமானாலும் செல்லலாம். இதில் இன்னொரு சிறப்பும் உள்ளது. அது என்ன தெரியுமா? எப்.எம். வசதிதான்.

## பனாமா கால்வாய்



உலகின் முக்கியமான கால்வாய்களில் ஒன்று பனாமா கால்வாய். இதன் நீளம் 82 கிலோ மீற்றர் இதைப் படகு மூலம் கடக்க வேண்டும் என்றால் 9 மணி நேரமாகும். வருடத்தில் 13 ஆயிரம் கப்பல்கள் இதனைக் கடந்து செல்கின்றன. பனாமா கால்வாய் 5 லட்சத்து 88 ஆயிரம் சதுர மீற்றர் பகுதியில் அமைந்துள்ளது. இந்தக் கால்வாயை க் கட்ட 30 ஆண்டுகளும், 75 ஆயிரம் ஆட்களும் தேவைப்பட்டன. கட்டுமான செலவு 454 மில்லியன் டொலர். உலகின் 12 சதவீத வர்த்தகப் பொருட்கள் இதன் வழியாகச் செல்கின்றன.

## குளோனிங் ஆராய்ச்சி



மனிதனுக்கு பல விலங்கினங்கள் உதவி செய்கின்றன. சில விலங்குகள் நேரடியாகவும் பல விலங்கினங்கள் மறைமுகமாகவும். அப்படி உதவி செய்வதில் பன்றியும் ஒன்று. வியாபாரத்துக்காகப் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. இந்தப் பன்றிகள் மருந்தாகவும் பயன்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஆம், பன்றியின் உடலில் இழந்து "ஓமேகா - 3" கொழுப்பு அமிலம் எடுக்கப்படுகிறது. இந்த அமிலம் இருதய நோய் கருத்தரிப்பு பிரச்சினைகளுக்கு மருந்தாக பயன் தருகிறது.

இந்த மருத்துவ குணம் கொண்ட அமிலத்தை பன்றிகளின் மூலம் அதிகமாக உருவாக்க குலோனிங் பன்றிகளை உருவாக்கலாம் என்று முடிவு செய்துள்ளார். ஜிங், காங் என்ற மருத்துவர். இவருடன் மூன்று பல்கலைக் கழகங்கள் இணைந்து இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றால் குளோனிங் பன்றிகள் அதிகளவில் உருவாக்கப்படும். பன்றிகளில் இருந்து ஓமேகா - 3 கொழுப்பு அமிலத்தை சாதாரண பன்றிகளிலிருந்து மூன்று மடங்கு பெறலாம். இந்த ஆராய்ச்சியின் முடிவைக் கொண்டு வேறுசில ஆராய்ச்சிகள் நடத்தப்படும். தற்போது இந்த ஆய்வில் பெரும்பான்மையான பகுதி முடிவுக்கு வந்துவிட்டது. இதை வைத்துப் பார்க்கும்போது எளிதில் குளோனிங் பன்றிகளை உருவாக்கி விடலாம் என்று தோன்றுகிறது என்றார் டொக்டர் ஜிங்.காங்.

## கொழுப்பை நீக்கும் புது மாத்திரை



இருதய இரத்த நாளங்களில் கொழுப்பு பொருட்கள் (கொலஸ்ரோல்) அடைக்கும் போது மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படுகிறது. ஆபத்தான இந்த நோயால் உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கானோர் உயிரிழந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இரத்த நாளங்களில் படியும் கொழுப்புப் பொருட்களை அகற்றும் புதிய மாத்திரையை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இதற்கு 'கிரஸ்டர்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது இரத்த நாளங்களில் உள்ள கொழுப்பை முற்றிலுமாக அகற்றுவதோடு மட்டுமில்லாமல், குறிப்பிட்ட இடங்களில் மீண்டும் கொழுப்பு சேராமல் பார்த்துக்கொள்கிறது. இந்த மாத்திரை மூலம் 80 சதவீதம் நோயாளிகளுக்கு 'கொலஸ்ரோல்' வெற்றிகரமாகக் குறைந்து விட்டதாக டொக்டர்கள் தெரிவித்துள்ளனர். இந்த மாத்திரையை பயன்படுத்தினால் மாரடைப்பு வராமல் தடுக்க முடியும் என்பதோடு பைபாஸ் மற்றும் இருதய அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டிய அவசியமும் இருக்காது என்று டொக்டர்கள் தெரிவித்துள்ளனர்.


புதிய மாத்திரையை ஐரோப்பா, அமெரிக்கா, கனடா மற்றும் அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலுள்ள 53 மருத்துவ மையங்களில் பரிசோதனை செய்து வருகிறார்கள்.

## பரிசாக கடிகாரமா? இல்லவே இல்லை



சீன நாட்டு மக்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கோ, தன் குடும்பத்தினருக்கோ எந்த காரணத்தை முன்னிட்டும் கைக் கடிகாரம், சுவரில் மாட்டும் கடிகாரம் போன்றவற்றை பரிசாக தரமாட்டார்களாம். அப்படி கொடுத்தால் அது அவர்களை அவமானப்படுத்துவது போன்றதாம். பல நூற்றாண்டுகளாக இந்த முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

## தேமா மீற்றர்



நமக்குக் காய்ச்சல் ஏற்பட்டது என்றால் தேமா மீற்றரை வைத்து உடலின் வெப்ப நிலை எவ்வளவு உள்ளது என்பதைத் துல்லிய மாகக் கண்டுபிடித்து விடுகிறோம். தேமா மீற்றர் 1626 ஆம் ஆண்டு சந்தோரியா (இத்தாலி) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் பாதரசத்துக்குப் பதிலாகத் தண்ணீர் பயன்படுத்தப்பட்டது. 1867 ஆம் ஆண்டு பாதரசம் அடங்கிய தேமா மீற்றர் நடைமுறைக்கு வந்தது. 1990 ஆம் ஆண்டு வாக்கில் பற்றரியில் இயங்கும் டிஜிற்றல் தேமா மீற்றர் கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் அடையாளம் தெரியாத நபர்கள் என்ற போர்வையில் – காரணம் எதுவுமின்றி மர்மமான முறை யில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற படுகொலைச் சம்பவங்கள் மக்களை அதிர்ச்சிக்குள் உறைய வைத்திருப்பதுடன் பெரும் பதற்றத்தையும், பீதியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்.குடாநாட்டில் கடந்த 10 தினங்களுக்குள் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் கோரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். படுகொலை செய்யப்படுபவர்கள் என்ன காரணத்துக்காக கொலை செய்யப் படுகின்றார்கள் எனக் கூற முடியாத வகையில் இவை நாளாந்தம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நிலைமை தொடர்ந்து உறைய வைத்துள்ளது.

இந்த கொலைதாரிகள் படையினர் தான் என்பது தெட்டத் தெளிவாகத் தமக்குத் தெரியும் என அந்தப் பகுதி மக்கள் கூறிவருகின்றனர்.

மக்கள் இப்படிக் கூறிக்கொள்வதற்குக் காரணம் கொலை செய்யப்பட்ட வர்களின் சடலம் கிடந்த இடத்துக் கும் படைமுகாமுக்கும் இடையில் 50மீற்றர் தூரமே இடைவெளி இருந்தது – வேறெவரும் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியிருந்தால் படையினர் பதிலுக்கு தாக்குதல் நடத்தாமலிருப்பார்களா என்ன?

இதேவேளை கொலை செய்யப்பட்டவர்களில் ஒருவருக்கு ஏற்கனவே கொலை அச்சுறுத்தல் இருப்பதாக தெரிந்து கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட வன்முறைகளின் போது தமது உயிரைப் பாதுகாத்துக்


எது எவ்வாறு இருப்பினும் ஆயுத தாரிகளால் ஒவ்வொரு கொலை களும் சந்தர்ப்பம் பார்த்து மிகவும் நுணுக்கமான முறையில் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

இந்தக் கொலைகளைப் புரிந்தவர்கள் பயிற்றப்பட்ட ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. பட்டப்பகலில், சனநடமாட்டம் இருக்கின்ற இடங்களில் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்று விடுகின்றார்கள் என்றால் பயிற்சி பெற முடியாத ஒருவரால் இத்தகைய கொலைகளைச் செய்ய முடியாது என்பது உண்மை.

இத்தகைய கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு படையினரின் முழு ஆதரவு இருக்கிறது என்பது தற்போது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. அதிகரித்த சோதனைக் கெடு பிடிகளின் மத்தியிலும் படையி னரின் கணிப்பின்படி ஆயுததாரி எப்படி தப்பித்துக் கொள்ள முடிகிறது என்பது தான் தற்போது மக்களுக்கு எழுந்திருக்கும் சந்தேகமாகும்.

இந்த சந்தேகம் நியாயமான தாகவே இருக்கிறது. யாழ். குடா நாட்டில் எந்த வீதியிலும் அதிக ளவு படையினர் குவிக்கப்பட்டு சைக்கிளில் செல்பவர்கள் முதல் வாகனத்தில் வருபவர்கள் வரை பாரியசோதனைகளைச் செய்யும் படையினரின் கண்களில் எப்படி இவர்களின் ஆயுதங்கள் சிக்காமல் இருக்க முடியும்?

# குடாநாட்டை உலுக்கும் படுகொலைகள்!



செல்லுமானால் குடாநாடு என்ற பிரதேசம் மக்கள் வாழக் கூடிய இடமாக அன்றி சுடுகாடு போன்று தான் இருக்கும் என்பதில் ஆச்சரி யமில்லை.

கொலைச் சம்பவத்துடன் தொடர் புடையவர்கள் தமது வெறி யாட்டத்தை கணப்பொழுதில் அரங்கேற்றிவிட்டுத் த ப் பி ச் சென்று விடுகின்றனர் என்பது பெரும் ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமாகவே தோன்று கின்றது.

குடாநாட்டில் நடைபெறுகின்ற மர்மப் படுகொலைகளுடன் இரா ணுவப் புலனாய்வாளர்களுக் கும், ஒட்டுப் படைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதா கவே மக்கள் மத்தியில் சந்தேகம் உள்ளது.

சில படுகொலைச் சம்பவங்கள் நடைபெற்ற இடங்கள், கொலை செய்யப்பட்ட முறைகள் அவர்கள் மீது

கொள்வதற்காக வன்னியில் சிறிது காலம் தங்கியிருந்தார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

இந்த இளைஞர் ஜெனிவாப் பேச்சு வார்த்தையின் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்த தாகவும், கொலை வெறியர்கள் சந்தேக நபரை கொலை செய்வ தற்கு திட்டமிட்டு காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து அன்றைய இரவுப் பொழுதில் அந்த இளைஞருடன் கூடச்சென்ற மற்றையவர்களையும் தமது கொலை வெறியாட்டத்தில் பலியாக்கிவிட்டார்கள்.

இந்த இளைஞர்கள் 4பேரையும்

படுகொலை செய்யப்பட்ட வர்களில் பெரும்பாலானோர் படைமுகாமுக்கும், இராணுவ காவலரணுக்கும் அருகில் வைத்தே கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள்.

கொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வர்த்தகர் களாக இருப்பதனால் வர்த்தகர் கள் மத்தியில் அதிகமான பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இதேவேளை கடந்த டிசெம்பர், ஜனவரி மாத காலத் தில் ஏற்பட்ட வன்முறைகளால் 60க்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப்படு கொலைகளை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், ஒட்டுப்படைகளும் சேர்ந்தே செய்திருப்பதாக புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.



மக்கள் சந்தேகமடைய வைத்திருக்கின்றது.

கடந்த சில நாட்களாக நடை பெற்று வருகின்ற இந்த படுகொலைச் சம்பவங்களால் அதிர்ச் சியில் உறைந்து போன மக்கள் எந்த நேரம் என்ன நடக்கும் என்ற அச்சத்துடன் ஒவ்வொரு நாள் பொழுதையும் கழிக்க வேண்டியவர்களாகவே மாற்றப்பட்டுவிட்டனர்.

தற்போது யாழ்.குடாநாட்டை உலுக்கி வருகின்ற இந்த கொலைகளின் பின்னணியைப் பார்க்கும் போது திருகோணமலையில் தமிழ் மக்கள்

கொலையாளிகள் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தவேளை அந்த வழியில் சென்ற மற்றுமொரு இளைஞன் இந்தச் சம்பவத்தைப் பார்த்துவிட்டதால்– இவனை விட்டு வைத்தால் தமது நாடகம் வெளியே தெரிந்து விடும் என புரிந்து கொண்ட கொலையாளிகள் அவரையும் தமது இனவெறி அடங்கும் வரை சித்திரவதை செய்த பின்னர் இருட்டில் ஓடவிட்டு இயந்திரத் துப்பாக்கி யால் சுட்டுத் தள்ளியிருக் கிறார் கள்.

இந்த கோரச் சம்பவத்தி லிருந்து அந்தப்பகுதி இன்னும் மீண்டதாகத் தெரியவில்லை.

இதே வேளை – மீசாலையில் வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து வர்த்தகர் ஒருவரை சுட்டுத்தள்ளிவிட்டு யாருக்கும் தெரியாமல் அருகிலுள்ள படை முகாமுக்குள் ஆயுததாரிகள் இரு வர் ஓடி ஒளிந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் எப்படியோ வெளியில் வரவே மறுநாள் காலை அருகிலிருந்த இந்த வர்த்தக உரிமையாளரை ஆயுததாரிகள் சென்று "நீதான் இந்தத் தகவலை வெளியில் சொல்லியிருப்பாய் இதனை இப்படியே விட்டுவிட வேண்டும். இல்லையென்றால் உனக்கும் அதே நிலைதான்" என அந்த வர்த்தகரை கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகவும் கூறப்படுகின்றது.

இதனைவிட மற்றொரு சம்பவம் – கோண்டாவில் சந்தி வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்த வர்த்தகர் ஒருவரிடம் பொருட்களைக் கொள்வனவு செய்வது போன்று பாசாங்கு செய்து கொண்டு வர்த்தக நிலையத்தினுள் நுழைந்த ஆயுததாரிகள் அங்கு சன நடமாட்டம் குறையும்வரை காத்திருந்து கொலையைப் புரிந்து விட்டுச் சென்றிருக் கிறார்கள். சுமார் 2 மணி நேரம் காத்திருந்தே இந்தக் கொலை நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தக் கொலைகளுக்கான காரணங்களே இதுவரை காணப்படாத நிலையில் தற்போது மீண்டும் படுகொலைகள் தொடர்ந்து கொண்டு இருப்பதால் எதிர்காலத்தில் இளைஞர் சமுதாயம் முற்றாக அழிக்கப்பட்டு விடு மோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் கிளம்பியுள்ளது.

**அருள்**

பேரவைத் தலைவர் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர்–

சிறுப்பிட்டிப் பகுதியில் படையி னரின் இராணுவ வாகனம் ஒன்றை இலக்குவைத்து மேற் கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதல் சம்பவத்தில் படையினர் ஒருவர் காயமடைந்தார். இந்த கிளைமோர் தாக்குதல் சம்பவம் நடைபெற்ற மறுநாள் ஆரம்பித்த மர்மப்படுகொலைகள் இன்று வரை ஓய்ந்ததாக தெரியவில்லை.

இந்த படுகொலைகள் சுன்னாகம் பகுதியில் ஆட்டோச் சாரதி ஒருவரில்தான் ஆரம்பித்தது. அடையாளம் தெரியாத நபர்கள் என கூறிக் கொள்ளும் நபர்களின் கொலை அச்சுறுத்தல் காரணமாக அயல் வீடு ஒன்றில் இரவுப் பொழுதைக் கழித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த சமயம் சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருந்த துப்பாக்கிதாரிகள் கைவரிசையை காட்டிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற நாளில் தொடங்கிய கொலை இன்றுவரை ஏதோ ஒரு மூலையில் நடந்து கொண்டே இருக்கிறது.

புத்தூர் கிழக்கில் படை முகாமுக்கு அருகில் உள்ள தரவை வெளியில் ஐந்து இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இன்று யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி





நேர் – நிகர் வேண்டுகையின்
பிரதிபலிப்பாக
நெஞ்சுழத்தும் நெருடல் கொண்ட
இறுக்கம் தளரா, உட்படுகை
சம விட்டுக் கொடுப்பில்லா
எதிர் – எதிர், பலம்
தக்க வைக்கின்ற உறுதியில் பேச
சமாதானம் காத்திருக்கிறது!
வலிதாங்கும் நிலையில்
தொடர்ந்து மேலும்..... மேலும் பலி கொண்டு
மௌனத் தேடலில் விடைகாணா
சூனியமாக அல்லுண்டு
காணாதவர் பட்டியலில், அடையாளம் காட்டும்
மனித உரிமைகள் ஆணையகம்
போல், எமது வாழ்வு
பெறுமதியற்றதாக, சுடர்விட்டு சுட்டெரிக்கும்
தீயில் சேர்ந்து கருகி, சாம்பலாக
எதிர்காலத்தின் முகங்களையும்
பூசிக் கொண்டிருக்கிறது!
தமிழ் வளர்த்த பெருமையினை
ஒட்டிக் கொண்ட உடலில் ஓடும் இரத்தத்தில்
என்ன உச்சரிப்பு செய்கிறது!
எம்மை நாமே காட்டிக்கொடுக்கும்
கோழைகளின் ராட்டிணத்தில் ஒரு பக்கம் மட்டும்
பாரமாக இருப்பது தெரியாமல்
தனது காலினையும்
நிலத்தில் இருந்து எடுக்கமுடியாது
சுற்றிக் கொண்டு எத்தனை தடவைகள்
வட்டமடிக்க முடியும்!
உன்னைத் தள்ளிவிட்டு
உன்னால் உன்னவர் அடிபட்டுக்
கொண்டு இருப்பதை
பார்த்துச் சிரிக்கும் மாற்றான்
சொல்லும் சொல்லுக்கு
செயல் வடிவம் கொடுக்கும் அப்பாவி நீ
இன்னோர் அப்பாவியைச் சுடாதே!
பறிபோனதால்
எமது இனம் போராடும் வாழ்வில்
வலுவாகி, நிலைகொண்டு
தனக்கொரு இடம் கொண்டதான நிலையில்
சர்வதேசம் பார்க்கும் திரும்பலில்
வெற்றி கண்டிருக்கிறபோது குழப்பாதே!
வீட்டு வாசல்களிலும்
நீண்ட தெருக்களிலும், குறுக்குவீதிகளிலும்
காவலில் இராணுவம், ஆனால்
எல்லா வீடுகளும் களவு போகிறது
உயிர்களும் பறிபோகிறது
கள்ளனை பிடிக்க துரத்திக்கொண்டு
ஓடிய ஊரவர்கள் இராணுவத்தினரால்
அடிவாங்கியதும்
பக்கத்து வீட்டுக்காரர் துணைக்குவர
ஆயுத முனையில் திருப்பி அனுப்பியதும்,
காவல் பணிமனைக்கு அழைப்புக் கொடுத்தும்
காலையில் வந்து விசாரணை நடத்துவதுமான
நிகழ்வுகளில், யார் கள்ளர்!
இராணுவம்
மோட்டார் சைக்கிளினை பகுதி பகுதியாக கழட்டி
பரிசோதனை செய்வதும்
உடல் பரிசோதனை செய்வதும்,
இராணுவத்தினரோடு நின்று
மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் பரிசோதிக்கும்
பொலிஸ்காரர்களும் எதனை எதிர்பார்க்கிறார்கள்!
விடுதலைப் பரப்பில் வரம்புகளாக
எழுந்து வளர்ந்து நிற்கின்ற
மேடுகள், தலைசாய்க்கும் கிழக்குப் பக்கம்
விடியல் தரும் பக்கம்!

**செல்வா**

## மக்கள் சக்தி...

வைக்கக்கூடிய ஸ்திரமான நிலையில் அமெரிக்கா இருந்தது. இருப்பினும், அமெரிக்கா தனது வெற்றியை முற்றுமுழுதாக உறுதிப் படுத்திக் கொள்வதற்காக – மேலதிக காலப் பகுதியும், நடவடிக்கைகளும் தேவை யாக இருந்தது. ஆதலால், ஜப்பானுடன் சமாதான உடன்பாடொன்றை செய்ய அமெரிக்கா முன் வந்தது. இதன் நிமித்தம் ஜப்பா னின் பேர ரசை தொடர்ந்தும் ஆட்சியிலிருக்க சந்தர்ப்பமளித்த அதேவேளை, உடன்படிக்கையை தனக்கேற்ற வாறும் அமைத்துக்கொண்டது.

சில தடவைகளில் நேரடி இராணுவ நடவடிக்கைகள் மூலம் பெற்றுக் கொள்ளும் வெற்றிகளைவிட இறுதி வெற்றிக்கு முன்ன ரான சமாதான காலத்தில் பெறுமதிமிக்க வெற்றிக ளைப் பெறலாம். இதுபோன்ற நிலை அன்று அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. அதாவது, மிகப்பலமான நிலையில் அமெரிக்கா இருந்த போதும், முற்று முழுதான அதேவேளை, உடனடியான இராணுவ வெற்றியைப் நாடாத காரணத்தால் ஜப்பான் மீதான சோவியத் யூனியனின் தலையீட்டை தவிர்க்க முடிந்தது. அவ்வாறில்லாமல் முற்று முழுதான உடனடி யான இராணுவ வெற்றியை அமெரிக்கா எதிர்பார்த்து செயற்பட்டிருந்தால் முடிவு மாறாக அமைந்திருக்கக்கூடும். அல்லது கடு மையான நெருக்கடிகளுக்கு அமெரிக்கா முகம்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டி ருக்கக்கூடும். ஏனெனில், அன்றைய சோவி யத் யூனியனின் பலம் அத்தகையது.

அன்று அமெரிக்காவுக்கு ஏற்பட்ட நிலை இன்று தமிழத் தேசிய விடுதலைப் பேர்ராட் டத்துக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்க அரசுக்கும் அவர்களிடத்தே இருந்த வளத்துக் கும் உருவாகிக் கொண்டிருக்கிற தமிழீழ அர சுக்கும் அவர்களிடமுள்ள வளத்துக்குமி டையே நிறைய வேறுபாடுகள் உள்ளன.

இருந்தபோதிலும், அமெரிக்கா சந்தித்தி ராத நெருக்கடிகளுக்கெல்லாம் முகம் கொடுத்து அதனை முறி யடித்தவர்கள் தமிழர் படை. அத்தகைய ஆற்றல் படைத்தவர்களால் இன்று ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையை தாங்கமுடியும். அதேவேளை, அவர்க ளுக்குப் பக்கபலமாக எப்போதும் மக் கள்சக்தி இருக்க வேண்டும். ஏனெனில், போராட்டம் மக்கள்ம யப்பட வேண்டிய தோடு, விடுதலை என்ப துவும் தமிழ்த் தேசியப் போராட்டமும் தமிழ் பேசும் மக்களுக்கானது.

ஆகவே, போராட்டத்தை வலுப்படுத்தும் சக்தியாக மக்கள் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கும்போது, அவ்வாறான போராட் டத்தை எந் தச் சக்தியாலும் அழிக்க முடியாது.